## என்னுரை

ஏலக்காய், இலவங்கம்,சிறுநாவற் பூ , மிளகு ,திப்பிலி , சுக்கு ஆகிய ஆறு மூலிகைகளின் கூட்டை ஏலாதி என்பர். இவ் ஆறு மூலிகைகளும் மனிதனின் உடலில் உள்ள நோய்களைக் குணப்படுத்தும்.அதுபோல இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடல்களிலும் ஆறு வகையான ஒழுக்கக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. அக் கருத்துக்கள் மனிதனைப் பற்றிப் பிடித்திருக்கும் தீய கருத்துக்களை நீக்கி அவனை மனிதனாக வாழ வைக்கும் என்று இதன் ஆசிரியர் கணிமேதாவியார் கூறுகிறார். இதை அறிஞர்களும் ஏற்றுள்ளனர்.

இவர் கணித அறிவுள்ள சமண சமயத்தவர் என்று அறியப்பட்டவர். சமண சமய நூல்கள் யாவும் ஒழுக்கத்தை உயிரிலும் மேலாகக் கருத வேண்டும் என்று கூறுபவை. இன்று நாடு சீரழிந்திருப்பதால் ஒழுக்கத்தை வலியுறுத்தும் நூல்கள் அனைத்தையும் மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய கதைகளாக்கியுள்ளேன். எனது ஏனைய நூல்களுக்குத் தந்த வரவேற்பை இந்நூலுக்கும் தருவீர்கள் என்று எண்ணுகிறேன்

இதைக் கணணி மயப்படுத்தி தந்த திருமதி. தபஷ்வினி சந்திரகாந்தன் அவர்களுக்கும், அழகான அட்டைப் படத்தை வடிவமைத்துத் தந்த ப.யாழினிக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

நன்றி

கே.வி.குணசேகரம்

குணம் பதிப்பகம்,

கோப்பாய் மத்தி,

ஸ்ரீலங்கா.

## ஏலாதி

### சிறப்புப்பாயிரம்

**இல்லறநூல் ஏற்ற துறவறநூல் ஏயுங்கால்**

**சொல்லறநூல் சோர்வின்றித் தொக்குரைத்து-நல்ல**

**அணிமேதை யாம்நல்ல வீட்டு நெறியும்**

**கணிமேதை செய்தான் கலந்து**

அழகு மிகுந்த அறிவுடைய பெண்ணே, கணிமேதையார் என்னும் அறிஞர் இல்லறம் போற்றும் நூல்களையும், துறவறத்தைச் சிறப்பித்துக் கூறும் நூல்களையும் ,வீடு என்று கூறப்படுகின்ற முத்தி பற்றிக் கூறும் நூல்களையும் நன்கு ஆராய்ந்து ஏலாதி என்ற பெயரில் இந்த ஞான நூலை உலக மக்களுக்குத் தந்துள்ளார்.

### கடவுள் வணக்கம்

**அறுநால்வர் ஆய்புகழ்ச் சேவடி ஆற்றப்**

**பெறுநால்வர் பேணி வழங்கிப் - பெறுநூல்**
**மறைபுரிந்து வாழுமேல் மண்ஒழிந்து விண்ணோர்க்கு**
**இறைபுரிந்து வாழ்தல் இயல்**

சமண சமயத்தில் இருபத்திநான்கு தீர்த்தங்கரர்களின் புகழுக்குரிய சிவந்த திருவடிகளைத் தாங்கியுள்ளவர்கள் நான்கு தேவர்கள். அந்த நான்கு வகைத் தேவர்களாலும் போற்றிக் காக்கப்பட்டவையே நான்கு வேதங்கள். இவ் வேதங்கள் சிறப்பித்துக் கூறும் அறம்,பொருள் ,இன்பம் ,வீடு என்னும் பயன்களை மக்கள் அடைய வேண்டுமென்பதற்காக அவை உணர்த்தும் இறைவனின் பேராற்றல்களை உணர்ந்து போற்றி வாழ்வோம். விண்ணோரின் தலைவரான இந்திரனும் இந்த இறை ஆற்றலை உணர்ந்து வணங்கி வாழ்கிறான். இது தான் இயல்பான நடைமுறையாகும்.

**நூல்**

1. **சென்ற புகழ், செல்வம் மீக்கூற்றம் சேவகம்**
   **நின்ற நிலைகல்வி வள்ளண்மை- என்றும்**
   **வழிவந்தார் பூங்கோதாய் ஆறு மறையின்**
   **வழிவந்தார் கண்ணே வனப்பு.**

   ‘‘புகழ், செல்வம், மேன்மையான சொல் ,எவர்க்கும் அஞ்சாத வீரம், சிறந்த கல்வி, தளர்வில்லாத ஈகை இந்த ஆறு தன்மைகளும் உயர் குடியிற் பிறந்து வேதம் காட்டும்

வழியில் நடப்பவரை அடைந்து எக் காலத்திலும் சிறப்புப் பெறும்.’’

“ சிறுத் தொண்டன் உயர்குடியிற் பிறந்தவர். வேதங்கள் கூறும் நான்கு வகையான அறங்களையும் தன் உயிராகப் போற்றுபவர். அவரது சகோதரி மல்லிகா. அவளது கணவன் சுகுமார். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் .மூத்தவள் வசந்தினி, அவள் தன்னுடன் பல்கலைக்கழகத்தில் கற்கும் கயேந்திரன் என்பவனைக் காதலித்தாள், கயேந்திரனின் குடும்பம் வேதங்கள் கூறியதற்கு மாறாக நடப்பது, அதனால் பெருந் துன்பப்பட்ட சிறுத்தொண்டன் தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்றார். அப்போது வசந்தினி வீட்டில் இருந்தாள். அவளை அழைத்துச் சிறுத்தொண்டன் சொன்னார், “வசந்தினி, நீ பல்கலைக்கழகத்தில் கற்பவள், நான் உனக்கு எதையும் உபதேசிக்கத் தேவையில்லை. யாவரும் வியக்கத்தக்க புகழ், குறைவில்லாத செல்வம், எவ் வேளையிலும் மேன்மையைத் தரும் சொல்,தலை நிமிர்ந்து செல்ல வைக்கும் வீரம் ,சிறப்பான கல்வி, உள்ள பொருளை மனங் கோணாமல் மகிழ்வுடன் கொடுக்கும் தன்மை ஆகியன நற்பண்புகள். வேதங்கள் கூறும் அரிய கருத்துக்களை வழுவாது போற்றும் குடும்பத்தவர்களிடம் எவ் வேளையிலும் காணப்படும்.இது கற்ற உனக்கு நன்கு தெரியும். இவை எதுவும் இல்லாத ஒரு கீழ்த்தரமான குடும்பத்தில் உள்ள ஒருவனை நீ விரும்புவதாக அறிகிறேன். வேத வாக்கியங்களைப் பின்பற்றாதவர்கள் அசுரர்கள். அதனால் எமது குடும்பத்தின் நற்குணங்கள் யாவும்

மறைந்து விடும், புகழ் அழிந்து விடும், நல்லவர்கள் எவரும் மதிக்க மாட்டார்கள், இரக்க வருபவனும் மனங் கோணியபடி தான் வருவான். அதனால் அந்த எண்ணத்தை விட்டு விடு, மானமிழந்து வாழ்வதை விட உயிர் துறப்பது மேலானது என்று பெரியவர்கள் கூறியுள்ளார்" என்றார் சிறுத்தொண்டன்.

**2. கொலைபுரியான் கொல்லான் புலால் மயங்கான் கூர்த்த**
**அலைபுரியான் வஞ்சியான் யாதும் - நிலைதிரியான்**
**மண்ணவர்க்கும் அன்றி மதுமலிபூங் கோதாய்**
**விண்ணவர்க்கும் மேலாய் விடும்.**

"கொலைத் தொழிலை விரும்பாதவன், எவ்வுயிரையும் கொல்லாதவன்,அறியாமையால் இன்னோர் உயிரின் உடலை விரும்பி உண்ணாதவன்,வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபடாதவன், பிறரை ஏமாற்றாதவன், நிலை மாறாதவன் மண்ணுலகத்தினரின் வணக்கத்துக்குரியவனாவான். அவன் தேவர்களை விடப் பெருமை வாய்ந்தவனாவான்"

"மருமகளே, நீ விரும்புபவனின் குடும்பத்தினர் உயிர்களைக் கொன்று தின்பவர்கள். பிறரின் பொருளில் ஆசைப்படுபவர்கள்.நீ விரும்பும் கயேந்திரனின் தந்தை தனது சகோதரனோடு காணிப் பிரச்சனையொன்றில் சண்டை பிடித்து நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளான். உண்மையில் அக்காணி நாராயணனுக்கு உரியதல்ல. நாராயணன் ஊரவர்களையும் , அவனது குடும்பத்தினரையும் நல்ல காரியங்களுக்கு அழைப்பதில்லை. எமது குடும்பம் மாமிசம் உண்பதில்லை, உண்பதற்காக

கொலை செய்வதில்லை, பிறரை ஏமாற்றுவதில்லை, அப்படியாக வாழும் நாம் பஞ்சமா பாதகங்களை விரும்பிச் செய்யும் ஒரு கீழானவர்களின் குடும்பத்துடன் திருமண உறவு வைக்கலாமா? ஊரில் அவர்களை யாரும் மதிப்பதில்லை, நாம் ஒழுக்கமுடையவர்களாக வாழ்வதால் எம்மை ஊரவர்கள் மதித்துப் போற்றுகின்றனர். ஒழுக்கமாக வாழ்வோரைத் தேவர்களும் மதித்துப் போற்றுவர். ஆகையால் மிகவும் தீமை தரும் உனது ஆசையை ஒதுக்கி விடு, இல்லாவிட்டால் எமது உயர்வான குடும்பம் இழிந்த குடும்பமாகி விடும்" என்று கலங்கினார் சிறுத்தொண்டர்.

3. **தவம் எளிது தானம் அரிது தக் கார்க்கேல்**
**அவம் அரிது ஆதல் எளிதால்- அவம்இலா**
**இன்பம் பிறழின் இயைவு எளிது மற்றதன்**
**துன்பம் துடைத்தல் அரிது.**

"தவம் செய்தல் எளிது. பிறருக்குக் கொடுத்துதவுவது அரிது. குற்றத்துக்குள்ளாதல் அரிது. நல்வழியில் நடத்தல் எளிது. உதவிகள் செய்தல் எளிது. ஆனால் மற்றவரின் துன்பங்களை அறிந்து நீக்குவது அரிது."

"மருமகளே, தம்முடைய முத்தியைக் கருதித் தவம் செய்யப்படுவதால் அது எளிதில் செய்யக் கூடியது. பொருளில்லாதவர்களுக்குக் கொடுத்துதவுவது கடினமான செயல். சான்றோர் குற்றங்களைச் செய்வது அரிதாகும். ஆனால் அச் சான்றோர் ஒருவனின் தேவையை அறிந்து உதவா விட்டால் அத் தேவைக்குப் பின் உதவுவது அரிது

என்று பெரியவர்கள் சொல்வார்கள். முத்தியை விரும்புபவன் முனிவனாகலாம். ஆனால் இல் வாழ்வான் தனது கடமைகளை நான்கு வேதங்கள் கூறியபடி செய்தல் முடியாத காரியமாகும். மனம் போன போக்கின் படி வாழ்வது எளிது. ஆனால் ஒழுக்கமாக வாழ்வது அரிது. எளிதான செயல்களை உயர்குடியில் பிறந்த மக்கள் விரும்பமாட்டார்கள். கீழ் மக்கள் தான் மனம் போன போக்கில் வாழ்ந்து நரக வாழ்வை அடைவார்கள். உனது செயல் நல்ல எமது குடும்பத்திற்குப் பரம்பரை பரம்பரையாக அவமானத்தை உண்டாக்கும். நீ கற்றவள். கற்றவர்கள் தாம் கற்றபடி வாழாவிட்டால், அவர்கள் கற்ற கல்வியால் என்ன பயன்? ஒழுக்கம் மனஎழுச்சிகளால் பாதிக்கக் கூடாதென்பதற்காகத் தான் உன்னைக் கற்க அனுமதித்தோம். கல்வியால் எந்தப் பயனும் இல்லை என்பது போலல்லவா உனது நடத்தை காணப்படுகிறது. இளமையில் தவறுகள் செய்தால் அது வாழ்வை மட்டுமல்ல எதிர்காலச் சந்ததியையும் பாதிக்கும்” என்றார் சிறுத்தொண்டன்.

**4. இடர்தீர்த்தல் எள்ளாமை கீழ்இனம் சேராமை**
**படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பின் - நடைதீர்த்தல்**
**கண்டவர் காமுறும், சொல் காணின் கல(ல்) வியின் கண்**
**விண்டவர்நூல் வேண்டா விடும்.**

“பிறரின் துன்பங்களை நீக்கல், பிறரை இகழாதிருத்தல், கீழ் மக்களுடன் சேராமை, பசித் துன்பத்தைப் போக்கல்,

ஒழுக்கமாக வாழ்தல், எல்லோருடனும் இனிமையாகப் பேசல் ஆகியவற்றைக் கைக்கொண்டால் அறநூல்களையோ , அறிவு தரும் நூல்களையோ கற்க வேண்டியதில்லை."

"மருமகளே, ஒழுக்கமானவன் அறிவு தரும் நூல்களையோ ,அறநூல்களையோ கற்கவேண்டியதில்லை. அவ் நூல்கள் ஒழுக்கத்தைப் பற்றியே கூறுகின்றன. ஒழுக்கமாக வாழ்பவன் முற்பிறப்பில் அவற்றைக் கற்றமையால் தான் இப்பிறப்பில் அவற்றைக் கற்காவிட்டாலும் அதன்படி ஒழுகுவான் எனக் கருதியே பெரியவர்கள் அப்படிக் கூறினர். கொடிய தொழுநோயுடையவரை அன்புடன் அரவணைத்து அவரது நோய் நீங்க உதவிகள் பலவும் செய்யலாம்.ஆனால் கொடிய குணங்களை உடையவர்களின் அருகில் செல்லக் கூடாது. அவர்கள் பெரும் கல்விமானாக இருந்தாலும் அவர்களது கல்வியால் எந்தப் பயனும் உண்டாகாது. ஒழுக்கமாக வாழ்வது தான் கற்றவர்களின் பண்பு, நாராயணன் கற்றவன்,ஆசிரியன் . ஆனால் அவன் பிறரை மதிக்காதவன். பிறரின் துன்பத்தில் இன்பம் காண்பவன்.பிறர் பசித்திருக்க உண்பவன். இனிய சொற்களைப் பேசியறியாதவன். இப்படியானவன் குடும்பத்தவருடன் கூட நல்ல முறையில் நடக்க மாட்டான். இதை நல்ல குடும்பத்தில் பிறந்த நீ கற்காமலே உணர்ந்திருத்தல் வேண்டும். பல்கலைக்கழகம் சென்று படித்த பின்பும் உணராவிட்டால் மற்றவர்கள் உனது பிறப்பைச் சந்தேகிப்பார்கள் என்பது உனக்குத் தெரியாதா? யோசித்துப் பார் .இல்லாவிட்டால் உனது கல்வியால் சிந்தித்துப் பார், நான் கற்றவன், பிறரைப் பற்றி இழிவாகப் பேசாதவன், குறை குற்றம்

பாராதவன் அப்படிப்பட்டவன் ஒருவரைப் பற்றி இவ்வாறு தரக்குறைவாகப் பேசுகிறான் என்று நினைப்பாய்.நான் உண்மையைச் சொன்னேனே தவிர பொய் சொல்லவில்லை"என்றார் சிறுத்தொண்டன்.

**5. தனக்கென்றும் ஓர்பாங்கற் பொய்யான் மெய், யாக்கும்**
**எனக்கென்றும் இளையான், யா தொன்றும் புனர்க்கொன்றை**
**போலும் இழையார்சொல் தேறான் களியானேல்**
**சாலும் பிறநூலின் சார்பு.**

"தனது நலனிற்காகவோ, தான் சார்ந்தவர்களின் நலனுக்காகவோ பொய் சொல்லாதவன் ,உண்மையை மட்டும் பேசுபவன், பற்றுக்கள் இல்லாதவன் ,கொன்றை மலர்களை ஒத்த அழகான பெண்களின் சொற்களை விரும்பி அவர் சொற்படி நடவாதவன், செல்வச் செருக்கில்லாதவன் ஆகிய பண்புள்ளவனிடம் சகல பண்புகளும் தானாகவே வந்து சேரும்."

"சிறுத்தொண்டன் அண்ணை ,நான் உங்களை நம்பித்தான் வந்துள்ளேன், நீங்கள் தனக்காகவோ, தனது இனத்தினர் ,நண்பர்களுக்காகவோ நீதிக்குப் பிறம்பாக நடக்காதவர்.அத்துடன் உங்கள் மனைவியினது சொல்லானாலும் அதிலுள்ள அறத்தை ஆராய்ந்த பின்பே நடவடிக்கை எடுப்பவர். அதனால் தான் உங்களிடம் எல்லாச் செல்வங்களும் வலிய வந்து சேர்ந்துள்ளன.உங்கள் உயிர் நண்பனும், இனத்தவனுமான கணபதி என்னிடம் வாங்கிய பணத்தைத் தர மறுக்கிறான். காவல் துறைக்கு அறிவித்தேன். அவர்கள் சாட்சி

வேண்டுமாம். ஒருநாள் நள்ளிரவு மனைவி கடுஞ் சுகவீனமுற்றிருப்பதாகக் கூறி இரந்தமையால் கொடுத்தேன். அத்துடன் கணபதி உங்கள் இரத்த உறவினன். அத்துடன் இணை பிரியாத தோழன். அதனால் தான் கொடுத்தேன்.மறுநாட்காலை அதை உங்களுக்குச் சொன்னேன். ஐம்பதினாயிரம் ரூபா நீங்கள் தான் காவல் துறைக்கு வந்து சாட்சி கூற வேண்டும்" என்றான் மாதவன்.

"சிறுத்தொண்டன் தடுமாறிப் போனார். கணபதி அப்படியானவன் அல்ல. மாதவனும் பொய் சொல்ல மாட்டான். இதில் யார் சொல்வது உண்மை என்று சிந்தித்தார்.

"நான் பொய் சொல்வதில்லை, களவெடுப்பதில்லை, பிறரை ஏமாற்றுவதில்லை என்று உங்களுக்குத் தெரியும். இனி உங்கள் விருப்பம்" என்று கூறி விட்டுச் சென்றான் கணபதி.

"சிறுத்தொண்டன் கணபதியின் வீட்டுக்குச் சென்றார். கணபதி அவரை இன்முகத்துடன் வரவேற்று விட்டுச் சொன்னான், "நான் விளையாட்டாகக் கணபதிக்குச் சொன்னேன்" என்று மாதவன் கூறும் போது சிறுத்தொண்டன் கவலையுடன் சொன்னார், " விளையாட்டாகப் பொய் சொல்வது, திருடுவது, மற்றவர்களை இழிவாகப் பேசுவது யாவும் உண்மையாகச் செய்யும் பயனையே கொடுக்கும். அதனால் தான் மாதவன் என்னிடம் வந்தான். அவன் நல்லவனென்றபடியால் என்னிடம் வந்தான். பலருக்குச் சொல்லியிருந்தால் உனது மானம் கப்பலேறி இருக்கும்.

விளையாட்டாகக் கூட தீயவார்த்தைகளைப் பேசுவோரை எனக்குப் பிடிக்காது” என்றார் சிறுத்தொண்டன்.

6. **நிறைஉடைமை நீர்மை உடைமை கொடையே**
**பொறை உடைமை பொய்மை புலால்கண் -மறை உடைமை**
**வேய்அன்ன தோளாய் இவை உடையான்பல் உயிர்க்கும்**
**தாய்அன்னன் என்னத் தரும்.**

“பிறரின் பொருளில் ஆசையின்மை, நற்குணத்தோடு பொருட்களை ஈயும் பண்பு, பொறுமையும், பொய் பேசாமையும் உடையவனாக இருத்தல், கொன்று தின்னாமை , புலனடக்கம் ஆகிய பண்புகள் பொருந்தியவன் எல்லா உயிர்களுக்கும் தாயைப் போன்றவன். “

“ பிறரின் பொருளில் விளையாட்டாகக் கூட ஆசை வைக்காமை, விருப்புடன் பொருளைக் கொடுக்கும் பண்பு, பொய் பேசாதிருத்தல்,பிற உயிர்களின் உடலை உண்ணாதிருத்தல் அகிய பண்புகள் தாய்மையை வளர்க்கும். ஆனால் உனது சொல் விளையாட்டுப் போல உண்மையாக இருக்கிறது. நீ நாராயணனிடம் ஆட்டு மாமிசம் வாங்கி உண்டிருக்கிறாய். வீட்டில் சமைக்க மாட்டார்கள் என்று உனக்குத் தெரியும். அதனால் மாமிசத்தை பிறரின் வீட்டில் சமைப்பித்து உண்கிறாய். மாமிசம் உண்பவன் கொலை வெறியன். மாமிசம் அசுரக் குணங்களையே உருவாக்கும். எனது நண்பனான நீ தர்மத்திற்கு மாறாக நடக்கிறாய். பிறரின் பொருளில் ஆசைப்படுகிறாய். அதனால் பொய் பேசுகிறாய். இவையெல்லாம்

புலனடக்கமில்லாததால் தான் நடைபெறுகின்றன. தாய்மைக் குணமில்லாத உன்னோடு பழக நான் விரும்பவில்லை. மாதவனின் பணத்தை உடனே கொடு. இல்லாவிட்டால் நான் கொடுத்து விடுகிறேன். கண்ணால் காணாத ஒரு விடயத்தை நான் காவல் துறைக்குச் சொல்ல விரும்பவில்லை" என்று கூறிவிட்டு பதிலுக்குக் காத்திராது சென்றார் சிறுத்தொண்டர்.

7. **இன்சொல் அளாவல் இடம், இனிது ஊண் யாவர்க்கும்**
**வன்சொல் களைந்து வகுப்பானேல் - மென்சொல்**
**முருந்துஏய்க்கும் முள்போல் எயிற்றினாய் நாளும்**
**விருந்து ஏற்பர் விண்ணோர் விரைந்து.**

"தம் இல்லத்திற்கு வரும் விருந்தினரை இனிய சொற்கள் கூறி வரவேற்றும் மனம் கலந்து உறவாடியும், அவர்கள் அமர்வதற்கு நல்ல ஆசனங்கள் கொடுத்தும் , அறுசுவை உணவு அளித்தும், கடுஞ்சொற்களைப் பேசாமலும், மலர்ந்த முக்கதுடன் வரவேற்றல் வேண்டும். இப்படியான குணங்களைக் கொண்டவர்களை தேவர்களும் மகிழ்ந்து ஏற்பர்.

" நாராயணன் சிறுத்தொண்டனின் சகோதரியான மல்லிகாவின் வீட்டுக்கு வந்தார். அவரைக் கண்டதும் வசந்தினியும் மல்லிகாவும் மகிழ்வுடன் வரவேற்றனர்.

"வாருங்கோ. வாத்தியார் .இந்த சொகுசு நாற்காலியில் அமருங்கள். வசந்தினி, வாத்தியாருக்கு குடிக்க ஏதாவது கொண்டு வா, அவருக்கு உணவு கொடுப்பதற்கான

ஏற்பாடுகளைச் செய், என்ற மல்லிகா வெற்றிலைத் தட்டை எடுத்து இரு கைகளாலும் நீட்டினாள்''

''நாராயணன் மகிழ்வாகக் கதைத்தார் .பின்பு அறுசுவை உணவை உண்டார். அதன் பின் நன்றி சொல்லி விட்டுப் புறப்பட்டார். மல்லிகா வாசல் வரை வந்து அவரை வழ-ியனுப்பி வைத்தாள். அவர்களின் உபசரணையில் மயங்கிய நாராயணன் தனது மகன் நல்லதொரு பெண்ணைத் தான் தேர்ந்தெடுத்திருக்கிறான் என நினைத்து மகிழ்ந்தவாறு சென்றார்.''

'' நாராணயன் செல்லும் போது அங்கே வந்த சிறுத் தொண்டன் மல்லிகாவைக் கேட்டார், நாரணயணனை உரிய முறையில் இன்சொல் பேசி வரவேற்றாயா? நல்லல ஆசனம் கொடுத்தாயா? அறுசுவை உணவு கொடுத்தாயா? ''ஓம் அண்ணா, வீட்டுக்கு யார் வந்தாலும் அவர்களை உரிய முறையில் வரவேற்க வேண்டுமென்று நீங்கள் தானே கூறினீர்கள்.'' என்றாள் மல்லிகா. ''ஓம், ஓம் பரம எதிரியாக இருந்தாலும் வீட்டுக்கு வந்தால் அவன் விருந்தாளி'' என்றார் சிறுத்தொண்டன்.

8. **உடன்படான் கொல்லான் உடன்றார்நோய் தீர்த்து**
**மடம்படான் மாண்டர்நூல் மாண்ட -இடம்பட**
**நோக்கும் வாய் நோக்கி நுழைவானேல் மற்றவனை**
**யாக்கும் அவர் யாக்கும் அணைந்து.**

“ஓர் உயிரைக் கொல்ல உடன்படாமை, தானும்உயிரைக் கொல்லாமை, நோயால் வருந்துவோரின் நோயைத் தீர்க்க உதவுதல், அறியாமை இல்லாமை, சான்றோர் எழுதிய நூல்களை ஆராய்ந்து பின்பற்றல், அந் நூல்களில் கூறியபடி வாழ்தல் என்னும் பண்புகள் உடையவரோடு சேர்ந்தால், சேருவோருக்கும் அவரின் நன்னெறிகள் அமைந்து விடும்.

“நாராயணன். சிறுத்தொணடனின் வீட்டுக்கு வந்தார். சிறுத்தொண்டன் எழுந்து முகமலர்வுடன் அவரை வரவேற்று ஆசனத்தில் இருத்திவிட்டு அவரை நோக்கினார்.

“ஐயா, ஓர் உயிரைக் கொல்ல உடன்படாமை, தானும் ஓர் உயிரைக் கொல்லாமை, நோயால் வருந்துவோர்க்குத் தேவையான உதவிகளைச் செய்தல், அறியாமை இல்லாமை, அறநூல்களைக் கற்று அதன்படி ஒழுகுதல் போன்ற நற்குணங்களையுடையவர்களுடன் நட்பு வைத்தால், அவர்களது குணங்களை நட்புடைய பலரும் பின்பற்றுவார் என்று பெரியவர்கள் கூறியவற்றைக் கற்றும் நான் அறியாமையால் அனைத்தையும் செய்து விட்டேன். அதனால் இந்த ஊரில் என்னை யாரும் மதிப்பதில்லை.யாரும் மதித்தாலென்ன மதிக்காவிட்டாலென்ன என்ற திமிருடன் வாழ்ந்து விட்டேன். அதனால் எண்ணற்ற துன்பங்களை அனுபவித்து விட்டேன். இனியாவது கற்றபடி நடக்க விரும்புகிறேன். அதற்காகத் தான் தங்கள் நட்பை நாடி வந்தேன். இனிமேல் மக்கள்

வெறுக்கும்படியான செயல்களைச் செய்ய மாட்டேன். அதனால் என்னை உங்கள் நண்பராக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றான்

9. **கற்றாரைக் கற்றது உணரார் என மதியார்**
**உற்றாரை அன்னணம் ஓராமல் - அற்றார்க்கு**
**உண்டி உறையுள் உடுக்கை இவை ஈந்தார்**
**பண்டிதராய் வாழ்வார் பயின்று.**

''கற்றவர்களை மதிப்பவரும், எல்லோரையும் உயர்வு தாழ்வின்றிச் சமமாக மதிப்பவரும், ஏழைகளுக்கும் ,துறவிகளுக்கும் சகல உதவிகளையும் செய்துதவுபவர்களையும் தான் மக்களால் சான்றோர் என மதிப்பர்''

'' ஐயா, நிறையக் கற்றவர்களை நான் மதித்ததில்லை, உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தவர்கள் யாரையும் நான் மனிதர்களாக நினைத்ததில்லை, ஏழைகளுக்கும் துறவிகளுக்கும் நான் உணவு, உடை தங்குமிட வசதிகள் எதுவும் செய்து கொடுத்ததில்லை. அதனால் ஊரில் உள்ள யாரும் என்னைக் கற்றவனாக மதிப்பதில்லை.இதனால் எனது குடும்பத்தில் பல பிரச்சனைகள் வருகின்றன. எனது மனைவியும் பிள்ளைகளும் என்னை எதிரியாக நினைக்கின்றார்கள். என்னால் தமது வளமான எதிர்காலம் பாழாகி விட்டதாகக் கூறுகின்றனர். அதனால் நினைத்துப் பார்த்தேன். அவர்கள் கூறுவன யாவும் உண்மையென

உணர்ந்து கொண்டேன். எனது மகளுக்குத் திருமணம் பேசிய போது எனது நடத்தையால் அது குழம்பி விட்டது. இப்பொழுது தான் எனக்கு கற்றவர்களை மதிக்க வேண்டும் , உற்றார் உறவினரைப் போற்றி வாழ வேண்டும் , ஏழைகளுக்கும் துறவிகளுக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற நினைப்பு உண்டானது. நீங்கள் அப்படி வாழ்வதால் தான் போற்றப்படுகின்றீர்கள், மதிக்கப்படுகின்றீர்கள், வசதிகளுடன் வாழ்கிறீர்கள்'' என்றார் நாராயணன்.

**10. செங்கோலான் கீழ்க்குடிகள் செல்வமும் சீரிலா**
**வெங்கோலான் கீழ்க்குடிகள் வீந்துஉகவும் -வெங்கோல்**
**அமைச்சர் தொழிலும் அறியலம் ஒன்றுஆற்ற**
**எனைத்தும் அறியாமையான்.**

''நீதியான அரசனும், குடிகளும் செல்வத்தால் மேன்மையடைவர், நீதியில்லா மன்னனினதும் குடிகளினதும் மந்திரி பிரதானிகளினதும் செல்வம் அழிந்தொழியும். இதற்குக் காரணம் ஒழுக்கமே.''

'' ஐயா, நீதியான அரசனும் வாழ்வான், குடிகளும் வாழும் ,மந்திரி பிரதானிகளும் வாழ்வர். நீதியில்லாத மன்னனது வாழ்வு வளமில்லாது இருப்பது போல குடிகளினது வாழ்வும் மந்திரி பிரதானிகளினது வாழவும் அழிந்து போகும் என்று நீதி நூல்கள் கூறுகின்றன. அது போல ஒரு குடும்பத் தலைலவன் தர்மமுள்ளவனாகவும் ,அறச் சொல்களைச் சொல்பவனாகவும் வாழ்ந்தால் தான் அக் குடும்பத்தில்

மகிழ்ச்சி நிலவும். சகல சௌபாக்கியங்களும் அக் குடும்பத்திற்குக் கிடைக்கும்.புகழும் மேன்மையும் உண்டாகும். இதை விட்டு விட்டுக் குடும்பத் தலைவன் அறத்தைப் போற்றாது தீயவனாக வாழ்ந்தால் குடும்பத்தில் எத்தனை பொருட்கள் இருந்தாலும் நிம்மதியும் மகிழ்ச்சியும் புகழும் மேன்மையான வாழ்வும் கிடையாது. அதுதான் எனது குடும்பத்திற்கேற்பட்ட நிலை.உங்களை எல்லோரும் போற்றி வணங்குவதற்குக் காரணம் தாங்கள் அறநெறிப்படி ஒழுக்கமாக வாழ்வது தான்.அதனால் நானும் அவ்வாறு வாழ விரும்புகிறேன். நான் செய்த தீய செயல்களையெல்லாம் மன்னித்து என்னைத் தங்கள் நண்பனாக ஏற்றுக் கொள்ளுங்கள் .சான்றோர் தீயோரையும் விலக்கி வைக்க மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும்'' என்று துயரப்பட்டார் நாராயணன்.

11. **அவாஅறுக்கல் உற்றான் தளரான் , அவ் ஐந்தின்**
**அவாஅறுப்பின் ஆற்றஅமையும் -அவாஅறான்**
**ஆகும் அவன்ஆயின் ஐங்களிற்றின் ஆட்டுண்டு**
**போகும் புழையுள் புலந்து.**

‘‘ஐம்புலன்களால் உண்டாகும் ஆசையை அறுப்பவன், அறுக்க நினைப்பவன், நற்குணவானாவான். மனதைப் புலன்களின் வழியே செல்ல விடுபவன் ஐம்பொறிகளாகிய மதயானைகளால் அலைக்கழிக்கப்பட்டு நரகத்தை அடைவான்.

“ஐயா, ஐம்பொறிகளால் உண்டாகும் ஆசைகளை அறுத்தவன் ,அறுக்கத் தொடங்கியவன் உங்களைப் போல சகல

செல்வங்களும் பெற்ற நற்குணங்கள் அனைத்தோடும் இன்புற்று வாழ்வான். ஐம்புலன்களை அடக்காது அதன் வேட்கைக்கிணங்க வெறியோடு நடப்பவன் சுவை ,ஒளி ,ஊறு ,ஓசை, நாற்றம் என்னும் மதயானைகளால் தாக்கப்பட்டு என்னைப் போலச் சீரழிந்து விடுவான். நான் அறத்தை நினைக்காது ஐம்பொறிகளினால் உண்டாகும் உணர்வுகளைத் தீர்ப்பதே இன்பம் என நினைத்துச் செயற்பட்டேன். அதனால் துன்பமும் ,துயரமும் பிரச்சனைகளும் ,வழக்குகளும் தான் வந்தன. பாடசாலையில் ஒரே பிரச்சனை, எனது நடத்தையால் எந்த ஒரு பாடசாலையும் என்னை ஏற்க விரும்பவில்லை. அதனால் நான் பல பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டேன். ஊரில் உள்ள கீழ்மக்கள் கூட என்னை விரும்பவில்லை. அவர்களே என்னைக் அறிவிலியாக எண்ணினர். இதற்குக் காரணம் எனது ஆசை. ஆசைகள் அவாவாக மாறி எனது உயிரைக் குடித்தன. அதனால் தான் மதியிழந்து நரக வாழ்வை அனுபவித்தேன். சொர்க்கம் ,நரகம் இரண்டும் ஒழுக்கமான வாழ்வில் தான் தங்கியுள்ளது. அதுவும் இப் பூமியில் தான் உள்ளது என்று இப்போது தான் அறிந்தேன்'' என்றார் நாராயணன்.

12. **கொலைக்களம் வார்சூத்துச் சூதாடும் எல்லை**
**அலைக்களம் போர்யானை யாக்கும் - நிலைக்களம்**
**முச்சா ரிகை ஒதுங்கும் ஓரிடத்தும் இன்னவை**
**நச்சாமை நோக்காமை நன்று.**

''போர்க்களத்திலும் ,மல்யுத்தம் நடக்கும் இடத்திலும் , மழைநீர் பாயும் பள்ள நிலத்திலும், சூதாடும் இடங்களிலும், போரிடும்

யானைகளைப் பூட்டி வைக்கும் இடத்திலும் ,சிறைச்சாலை உள்ள இடத்திலும், யானை, குதிரை, தேர் இவை சுற்றி வரும் இடங்களிலும் நிற்காமை மிகவும் நன்று.

" ஐயா, ஓர் உயிரின் தலையை வெட்டிக் கொலை செய்யுமிடம் போர்க்களமாகும். இங்கே ஆடு, மாடு ,கோழி முதலியவற்றை வெட்டும் இடங்களில் தான் நான் நிற்பேன். அதை வேடிக்கை பார்ப்பது எனக்கு விருப்பம். கொலைகாரர்களுடன் தான் நட்பு வைத்திருந்தேன். அவர்கள் கொலை செய்யும் மிருகத்தின் நல்ல இறைச்சிகளை எனக்குத் தருவார்கள். சூதாடும் இடங்களில் முதலில் சூதாடுபவனாக நானே இருப்பேன். நன்றாகக் குடித்து விட்டு மழை பொய்யும் போது வெள்ள நீர் நிலத்தைப் பிளந்து ஓடும் போது அதில் நான் குளிப்பேன். இறைச்சிக்காகவும் ,போரிடுவதற்காகவும் வளர்க்கப்படும் ஆடு, காளை , சேவல் போன்றவைக்கும் போர் பழக்கும் இடத்திலும் நான் நின்று வேடிக்கை பார்ப்பேன்.கோவிலில் யானை, குதிரை வாகனங்களில் ஏறி அமர்வேன். திருவிழாக் காலங்களில் தேர் இழுக்கும் போதும் யானை, குதிரை வாகனங்களில் சுவாமி வரும்போதும் குறுக்கே செல்வேன். குறுக்கிட்டுச் சண்டை பிடிப்பேன். இப்படிச் செய்யக் கூடாத செயல்கள் பலவற்றைச் செய்தமையால் தான் நான் இப்போது துன்பப்படுகிறேன். வீட்டார் எனக்குச் சாப்பாடு தருவதில்லை, வீட்டை விட்டுச் செல்லும்படி கூறுகிறார்கள். செய்யக் கூடாதவற்றைச் செய்ததால் தான் எனக்கு இப்படிக் கஷ்டம் வந்தது" அழுதார் நாராயணன்.

## 13. விளையாமை உண்ணாமை ஆடாமை ஆற்ற

**உளையாமை உட்குடைத்தா வென்று – களையாமை**
**நூற்பட்டார் பூங்கோதாய் நோக்கின் இவையாவும்**
**பாற்பட்டார் கொண்டு ஒழுகும் பண்பு.**

"உழுது பயிர் செய்யாமை, உணவு உண்ணாமை, பயனற்ற சொற்களைப் பாராட்டாமை ,பிறர் சொல்லும் வன்சொற்களுக்கு வருந்தாமை, தீயவற்றைச் வெல்லும் மன உறுதி ஆகிய ஆறு செயல்களும் துறவறத்தை மேற்க்கொள்வோர் செய்ய வேண்டிய கருமங்களாகும்"

" நாராணயா, கற்ற நீ கேவலமான செயல்களை வெட்கமில்லாமல் துணிந்து செய்து விட்டு இறுதிக் காலத்தில் வருந்துகிறாய். சமயங்கள் ஒவ்வொரு மனிதனும் எவ்வாறு வாழ வேண்டும் என்று கூறியுள்ளன. எந்தச் சமயமும் தீய செயல்களைச் செய் என்று கூறவில்லை. துறவிகள் பயிர் செய்யத் தேவையில்லை. உணவை படிப்படியாக உண்ணாது விடல் வேண்டும். பயனற்ற சொற்களைப் பேசக்கூடாது . கேட்கக் கூடாது, அதைப் பாராட்டக் கூடாது,பிறர் எப்படிப் பேசினாலும் அதைக் காதில் வாங்கிக் கோபம் கொள்ளக் கூடாது.தீய செயல்களில் மனம் ஈடுபாடு கொண்டால் அதை உடனே நீக்க வேண்டும்.தீமை செய்வோரைத் திருத்த வேண்டும்.தீமையைத் தனது ஆற்றலால் வெல்ல வேண்டும். இவை யாவும் துறவிகளுக்குச் சொல்லப்பட்டவை. பயிர் செய்யாமை மட்டும் தான் மற்றவர்களுக்குப் பொருந்தாது. சாதாரண மனிதன் தனது வாழ்விற்கான தொழில் செய்து துறவிகள் மேற்கொள்ளும் செயல்களையும் செய்தல்

வேண்டும்.நீ இதுவரை செய்யவில்லை.இனிச் செய்வதாகக் கூறுகிறாய்.நல்லது ,ஆனால் வேஷம் போடாதே.வேஷம் போடுவது தீய செயல்களைச் செய்வதிலும் தீதானது. அதனால் நல்லபடி வாழ், அது தான் கற்றதன் பயன்” என்றார் சிறுத்தொண்டன்.

**14. பொய்யான் புலாலொடு கள்போக்கித் தீயன**
**செய்யான் சிறியார் இனம்சேரான் - வையான்**
**கயல்இயல் உண் கண்ணாய் கருதுங்கால் என்றும்**
**அயல அயலவாம் நூல்**

“என்றும் பொய் சொல்லாதவன், மாமிசம் உண்ணாதவன், மதுவை அருந்தாதவன், தீய செயல்களைச் செய்யாதவன், தீயவர்களுடன் சேராதவன், பிறரை இகழாதவன் ஆகிய குணங்களை உடையவனுக்குப் பிறரின் அறிவுரை தேவையில்லை”

“நாராயணனும் சிறுத்தொண்டனும் பேசிக் கொணடிருக்கும் போது சரவணன் அங்கே வந்தான். அவனைச் சிறுத்தொண்டன் அழைத்தார். அவன் அவரை வணங்கினான். பின், “ஐயா, எனக்கு ஆசிரிய நியமனம் கிடைத்துள்ளது. தாங்கள் என்னை ஆசிர்வதித்தல் வேண்டும் .அத்துடன் எனக்கு நல்லுரை வழங்க வேண்டும்” என்றான்.

“மகனே, பொய் பேசாதவனுக்கும், மாமிசம் உண்ணாதவனுக்கும் , மதுவருந்தாதவனுக்கும் ,தீய செயல்களைச் செய்யாதவனுக்கும் ,தீயவர்களுடன்

சேராதவனுக்கும் ,பிறரை இகழாதவனுக்கும் பெரியார்கள் ஆசி வழங்கத் தேவையில்லை. அத்துடன் நல்லுரை உபதேசம், அறிமுகவுரை என்பன வழங்கத் தேவையில்லை. இவர்கள் அறநூல்களை வாசிக்காவிட்டாலும் அதன்படி இயல்பாகவே நடப்பவர்கள். ஆலோசனை ,புத்திமதி யாவும் தீயசெயல்களைச் செய்பவர்களுக்குத் தான் வழங்க வேண்டும். அதுவும் ஒழு-முறை தான் வழங்குதல் வேண்டும். ஒருமுறை சொன்னால் திருந்தாதவன்,எத்தனை முறை சொன்னாலும் திருந்த மாட்டான். நீ நற்குணங்கள் அனைத்தையும் பேணுபவன். அதனால் உன்னைத் தேவர்களும் விரும்புவார்கள்.நீ நல்லபடி கடமையைச் செய்வாய், உன்னால் எமது கிராமம் நன்மை பெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு” என்றார் சிறுத்தொண்டன்.

**15. கண்போல்வார்க் காயாமை கற்றார்இனம் சேர்தல்**
**பண்போல் கிளவியார்ப் பற்றாமை – பண்போலும்**
**சொல்லார்க்கு அருமறை , சோ ராமை சிறிதுஎனினும்**
**இல்லார்க்கு இடர்தீர்த்தல் நன்று.**

“சமூகத்திற்குக் கண் போன்றவர்கள் தவறு செய்யும் போது பொறுத்துக் கொள்ளல், கற்றவர்களுடன் சேர்தல், யாழின் இசை போன்ற இனிமையான குரலை உடை பெண்களின் தொடர்பு இல்லாமை, அவ்வாறான இனிய மொழி பேசும் பெண்களோடு இரகசியம் பேசாமை, வறியவர்களின் துன்பத்தைத் தீர்த்தல் என்னும் ஆறு குணங்களை உடையவர்கள் என்றும் நன்மை பெறுவர்”

“ மகனே, நீ பொறுமையில் பூமி போன்றவன், கோவில் தலைவர் செய்த பெரும் தவறை நீ மன்னிக்கும்படி கூறியமையால் தான் நானும் ஏனைய உறுப்பினர்களும் மன்னித்தோம்.நீ கற்றவர்களுக்குக் கற்பிப்பவன். அழகான யாழைப் போல இனிமையான பெண்களைக் கண்டு மயங்கி அவர்களோடு இனிமையாகப் பேச விரும்பாதவன். உன்னை பேரழகியான ஆரண்யா காதல் கொண்டு பேயாய் அலைந்த போதும் திரும்பிப் பாராதவன். அவள் பேரழகி மட்டுமல்ல பெருந் தனவந்தனின் மகள் .நீ வறியவன். அவளது பெற்றோர் விரும்பியும் நீ அவளை ஏற்காது விட்டதற்குக் காரணம் உனது தந்தை தனது சகோதரியின் மகளை உனக்கு நிச்சயித்தமையே. வறியவர்களுக்கு நீ உதவி செய்வாய். அதை விட மிகவும் வறியவரான உனது மாமாவின் மகளை உயர்ந்த கல்வி கற்ற நீ பெற்றோரின் விருப்பத்திற்காக ஏற்பது உனது மனநிலையைக் காட்டுகிறது. இன்றைய இளைஞர்கள் காதலிப்பது பலரை பின் பொருளுக்காகத் திருமணஞ் செய்வது இன்னொரு பெண்ணை.அப்படியான உலகில் பெரும் அழகும் பொருளுமில்லாத ஒரு பெண்ணைத் திருமணம் செய்கின்றாய். அதனால் நீ பெருவாழ்வு வாழ்வாய்” கலங்கினார் சிறுத்தொண்டன்.

**16. துறந்தார்கண் துன்னித் துறவார்க்கு இடுதல்**
**இறந்தார்க்கு இனிய இசைத்தல் -இறந்தார்**
**மறுதலை சுற்றும் மதித்துஓம்பு வானேல்**
**இறுதல் இல் வாழ்வே இனிது.**

“துறவிகள் கேட்காமலே உதவுவது போல இல்லறத்தார்க்கும் உதவுதல், கல்வி கற்றோர்க்கு உதவி செய்தல், அவர்களுக்குக் கற்பித்தல், துணையின்றி இறந்தவர்களின் இறுதிக் கிரியையையும் ,பிதிர்க்கடனையும் செய்தல், தனக்குத் தீமைகள் செய்தவர்களுக்கும் உதவி செய்தல், சுற்றத்தாரின் துன்பங்களைப் போக்குதல், சுற்றத்தாரைக் காத்தல் ஆகியவற்றைச் செய்யும் இல் வாழ்வான் துறவற வாழ்வை மேற்க்கொள்பவரை விட மேலானவனாவான்.”

“அப்பொழுது மடத்தில் சமையல் வேலை செய்யும் தொழில-ாளி வந்து சொன்னான், “ஐயா, சமையல் முடிந்து விட்டது. குருக்கள் வந்து விட்டார் .வந்து பிதிர்க்கடனைச் செய்யுங்கள்” என்றான். “ஐயா, நீங்கள் மேலான உத்தமர். மடத்தைக் கட்டித் துறவிகளுக்கு உதவுவது போல ஏழை எளியவர்களுக்கு உதவி செய்கிறீர்கள். அத்துடன் கவனிப்பாரற்று மடத்திற்கு வந்த அனாதைகளுக்கு உணவும், இருப்பிடமும், உடையும் கொடுத்து உதவுகிறீர்கள். அவர்கள் இறந்தால் ஈமைக்கடன்களைச் செய்கிறீர்கள்.பின் பிதிர்களின் கடன்களையும் வருடாவருடம் செய்கிறீர்கள்.சுற்றத்தவர், நண்பர்கள், ஏழை எளியவர்களைத் தாங்குகிறீர்கள். அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்கிறீர்கள்.கற்க வழியில்லாத மாணவர்களைக் கற்பிக்கிறீர்கள்.கற்றவர்களுடன் நட்புக் கொண்டு அவர்களின் உதவியோடு மாலை வேளைகளில் மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கிறீர்கள்.

நீங்கள் பற்றற்ற துறவிகளை விட மேலானவர்” என்றார் நாராயணன்.

**17. குடிஓம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்**
**மடிஓம்பல் ஆற்றல் உடைமை – முடிஓம்பி**
**நாற்றம் சுவைகேள்வி நல்லார் இனம்சேர்தல்**
**தேற்றானேல் தேறும் அமைச்சு.**

“குடிமக்களைப் பாதுகாத்தல், செயலை முடிக்கும் ஆற்றல், அஞ்சாத நெஞ்சம், வஞ்சனையும் சோம்பலும் இல்லாதிருத்தல் ,ஆட்சியைக் கைப்பற்றல்,ஐம்பொறிகளின் சுவைகளைத் தவிர்த்தல் ஆகிய குணங்களையுடையோர் அமைச்சராகும் தகுதியைப் பெற்றவராவார்.”

மடத்தில் சிறுத்தொண்டனோடு சேர்ந்து பிதிர்க்கடனை முடித்து விட்டு அங்கு வந்தவர்களுக்கு உணவு கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்த சரவணன் மேசையில் இருந்த புத்தகத்தை எடுத்துப் பிரித்தான். அது ஒரு சரித்திர நாவல்.

“குடிமக்களைத் தான் கண்களைப் போலப் பேணுவதும், தான் செய்ய எடுத்துக் கொண்ட செயலைத் திறம்படச் செய்து முடிக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதும், சிறந்த நூல்களைக் கற்று அதில் கூறப்பட்ட வீர தீரங்களை உணர்ந்து அஞ்சா நெஞ்சைக் கொண்டிருப்பதும், வஞ்சனையும் சோம்பலும் இல்லாதிருப்பதும், ஐம்பொறிகளால் உண்டாகும் சுவைகளான உணவின் சுவை, அழகுகளின் சுவை, இனிமையான நாதச் சுவை, இனிமையான கேட்டல் சுவை, நறுமணச் சுவை,

பெண்களின் உடலால் பெறும் காமச் சுவை என்பவற்றின் சுவையை மிகுதியாக விரும்பாமலும் வாழ்பவன் பெரும் மந்திரியாகக் கடமை புரிய வல்லவன்” என்று அந்த நூலில் இருந்தது.மேற்கூறியவை வாழ்வின் துன்பங்கள். அவற்றை விரும்பாதவன் தான் நினைத்த வாழ்வை நினைத்தவாறு பெறுவான், நினைத்ததை நினைத்தவாறு அடைவான்.மேற்சொன்னவற்றைத் தவிர்த்த சிறுத்தொண்டன் ஐயா அரசனைப் போலத் தானே வாழ்கிறார்” என்று நினைத்தான் சரவணன்.

**18. போகம் பொருள்கேடு மான்வேட்டம் பொல்லாக்கள்**
**சோகம் படும்சூதே சொல்வன்மை – சோகக்**
**கடும் கதத்துத் தண்டம் அடங்காமை காப்பின்**
**அடும்கதம்இல் ஏனை அரசு.**

“பெண்களோடு இன்பம் அனுபவித்தலும், பொருளை அழித்தலும், மான் போன்ற மிருகங்களை வேட்டையாடுவதும், கள்ளை உண்ணுதலும், சூதாடுதலும், வன்சொற் பேசுதலும், சினங் கொள்ளலும் இல்லாமல் ஓர் அரசன் தன்னைப் பாதுகாத்தால் அவனுக்கு எதிரிகள் இருக்க மாட்டார்கள்”

“நாராயணன் திருந்தியது அவனோடு கூடித் திரியும் நண்பர்களுக்கப் பிடிப்பதில்லை. நாராயணனைக் கைக்குள் வைத்துக் கொண்டு தீயவர்கள் பல தீய செயல்களைச் செய்து தப்பித்தனர். அவர்களைத் தப்பிக்க நாராயணனின்

மூளை உதவியது. நாராயணன் சேராமையால் அத் தீயவர்கள் பெரும் கஷ்டப்பட்டனர். அன்று அவர்கள் காட்டுக்குச் சென்று மிருகங்களை வேட்டையாடிக் கொன்று பங்கு போ்ட்ட போது காவல் துறையிடம் அகப்பட்டு விட்டனர். அவர்கள் நன்றாகக் குடித்துவிட்டு விலைமகளான கண்ணம்மாவின் வீட்டில் சூதாடியபோது தான் அகப்பட்டனர். அவள் அவர்களுக்கு மது கொடுத்திருந்தாள். அவர்களைக் காவல் துறையினர் பிடித்ததும் கண்ணம்மா பின்பக்கமாகச் சென்று நாராயணனைச் சந்தித்தாள். காவல் துறையினர் அவளைத் தேடி வந்த போது அவளுடன் நாராயணன் இருப்பதைக் கண்டு அவனையும் கைது செய்தனர். அதனால் கோபங் கொண்ட கண்ணம்மா காவல் துறையினரைக் கோபங் கொண்டு வன் சொற்களால் ஏசினாள். அதனால் அவளையும் நாராயணனையும் காவல் துறையினர் கைது செய்தனர். நாராயணனை பிணை எடுக்க வந்த அவனது நண்பன் சொன்னான், “தீயவர்களோடு நட்பு வைப்பது தீது. அதனால் தான் நான் இங்கு வர நேர்ந்தது. இழிந்த பெண்களின் தொடர்பு, அவர்களுக்குத் தம் பொருளைக் கொடுத்து அழி-தல், மிருகங்களை வேட்டையாடுதல், கள்ளுண்ணல், சூதாடுதல், வன் சொற் பேசுதல், சினங் கொள்ளல் போன்ற குணங்கள் மனிதனுக்குத் தீமையைத் தரும். நீ ஓர் ஆசிரியன். கேவலமான குணங்களைக் கொண்டிருக்கிறாய். உன்னுடன் சேரக் கூடாதென்று எனது குடும்பத்தினர் கூறுகின்றனர்.உன்னுடன் கற்பிப்பதால் வந்தேன். இனிமேல் வரமாட்டேன். நான் வராவிட்டால் உன்னைப் பிணை எடுக்க யாரும் வரார். சிறையில் தான் இருப்பாய், உன்னோடு

சேர்வதால் நல்லவர்கள் என்னை மதிக்கிறார்களில்லை. அதனால் எனக்கும், எனது குடும்பத்திற்கும் பெரும் கேடு" என்று கோபமாகக் கூறினான் ஆனந்தராசா என்ற ஆசிரியன்

19. **கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்மனைமேல்**
**செல்லான் சிறியார் இனம்சேரான் - சொல்லும்**
**மறையில் செவிஇலன் தீச்சொற்கண் மூங்கை**
**இறையில் பெரியாற் கிவை.**

"உயிர்களைக் கொல்லாதவன், கொலைக்கு உடந்தையாக இராதவன், பொய் சொல்லாதவன், மற்றவர்களின் பொருளை விரும்பாதவன், கீழ்மக்களோடு சேராதவன், இரகசியங்களைக் கேட்பதில் செவிடனாக இருப்பவன் ,தீய சொற்களைப் பேசுவதில் ஊமையாக இருப்பவன் ஆகிய குணமுள்ளவன் பெருந்தன்மையில் முதன்மையானவனாக விளங்குவான்"

"ஆசிரியர்கள் பெருந் தன்மையில் முதன்மையானவர்களாக இருத்தல் வேண்டும். எவ்வுயிரையும் கொல்லாதவன், உயிாக் கொலைக்கு உடந்தையாக இல்லாதவன், பொய் சொல்லாதவன், மற்றவர்களின் பொருளை விரும்பாதவன், கீழ் மக்களோடு சேராதவன், இரகசியங்களைக் கேட்பதில் செவிடனாகவும், தீய சொற்களைப் பேசுவதில் ஊமையாக இருப்பவன் தான் மனிதருள் முதன்மையானன். ஆசிரியர்கள் எப்போதும் முதன்மையானவர்களாக இருந்து மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் வழிகாட்டியாக இருத்தல் வேண்டும். எல்லாத் தீய செயல்களையும் அஞ்சாது செய்யும் நீ ஆசிரிய சமூகத்தின் நஞ்சு. அதனால் நீ தண்டனை

பெறல் வேண்டும். பாவம் என்று பல தடவைகள் உதவியும் நீ திருந்துவதாக இல்லை. மேலும் மேலும் மோசமாகவே நடந்து கொள்கின்றாய். அப்படியான உன்னைப் பிணை எடுத்தால் அது சமூகத்திற்குக் கேடு விளைவிப்பாய் .அதனால் அதைச் சொல்லி விட்டுப் செல்லவே வந்தேன். இனிமேல் நான் உன்னுடன் உறவு வைக்க மாட்டேன். ஓர் ஆசரியனாகக் கடமையாற்றும் நீ ஒரு விபச்சாரியுடன் கூடியிருந்து பொருளை அழிக்கிறாய். நீயும் ஒரு மனிதனா? என்று கோபமாகக் கேட்டான் ஆனந்தராசா.

**20. மின்னேர் இடையார்சொல் தேறான் விழைவோரான்**
**கொன்னே வெகுளான் கொலைபுரியான் - பொன்னே**
**உறுப்புஅறுத்தன்ன கொடைஉவப்பான் தன்னின்**
**வெறுப்பு அறுத்தான் விண்அகத்தும் இல்**

“மின்னலைப் போன்ற அழகிய இடையை உடைய பெண்களின் அறியாமையான பேச்சையும், அவளோடு கூடி காமம் அனுபவிக்க வேண்டும் என்று நினைப்பும் இல்லாதவனாகவும், காரணமின்றிக் கோபம் கொள்ளாதவனாகவும் ,தனது உறுப்பைத் தானம் செய்யக் கூடியவனாகவும் , வெறுப்பில்லாதவனாகவும் வாழ்பவனைப் போன்றவன் விண்ணுலகத்திலும் இல்லை.

“மின்னலைப் போன்ற இடையுள்ள அழகிய பெண்ணின் பேச்சுக்கு மயங்கி , அவளோடு உறவு கொள்ள நல்லவர் முயலார். ஆனால் நீ உரலைப் போன்ற இடையையும் அரக்கியைப் போன்ற நடையுடை பாவணையுடைய ஒரு

பெண்ணை இச்சித்துக் கூடி இன்பம் அனுபவித்துள்ளாய். அது இன்பமா? நீ காரணமின்றிப் பாடசாலையில் ஆசிரியர்களோடும், மாணவர்களோடும் ,பெற்றோரோடும் முரண்படுவாய். சிறுத்தொண்டன் தனது சிறுநீரகத்தில் ஒன்றை ஓர் இளைஞனுக்குத் தானமாக வழங்கினார். அதுவும் அவரை ஜென்ம விரோதியாக நினைத்திருப்பவனின் மகனுக்கு.சினம், வெறுப்பு ,தீய எண்ணங்கள் இல்லாமல் பிறர்க்குதவுவது தான் வாழ்க்கை. அப்படி உதவினால் தான் வாழ்வு சிறக்கும். இன்று உனது மகளுக்கல்ல மகனுக்குப் பெண் எடு பார்ப்போம் .உணவுக்கு வழியில்லாத வடிவேலன் கூட உன்னைக் கண்டதும் மறைந்து விடுகிறான். தீயவனைக் காண்பது தீது என்று சொல்கிறான். இதையெல்லாம் கேட்டும் உனக்கு ரோசம் வரவில்லையா? தொடர்ந்து கீழான செயல்களைச் செய்கிறாய். கீழானவர்களுடன் உறவு வைக்கிறாய். சீ ! உன்னுடன் கதைப்பது வீணான செயல்” என்று ஆத்திரப்பட்டான் ஆனந்தராசா.

**21. இளமை கழியும் பிணி, மூப்பு இயையும்**
**வளமை வலி, இவை வாடும் -உளநாளால்**
**பாடே புரியாது பால்போலும் சொல்லினாய்**
**வீடே புரிதல் விதி.**

“இளமைப்பருவம் நிலையின்றி மாறும். நோயும் வயோதிபமும் வந்து சேரும். செல்வமும் வலிமையும் குறையும். ஆகையால் உடல் இன்பத்திற்கான செயல்களைச் செய்து கொண்டிராமல் வீடு பேற்றை அடைவதற்கான நற்பணியைச் செய்தல் வேண்டும்.”

“இவ்வளவு காலமும் அகங்காரங் கொண்டு அநியாயங்கள் பலவற்றை நியாயம் என்று கூறி உனது உடல் இன்பத்திற்காகச் செய்தாய். இளமை நிலையில்லாதது என்று நீ நினைக்காவிட்டாலும் வயோதிபம் தேடி வந்து விட்டது. செல்வச் செருக்கோடு வாழ்ந்ததால், தீயவற்றையே செய்தாய் செல்வம் குறைந்து விட்டது. உனது அழகும், பொலிவும், வலிமையும் குறைந்து விட்டது. உனது பணத்திற்காகவும் உனது பொலிவுக்காகவும் உன்னை விரும்பி உனக்கு இன்பம் தந்தவள் நீ விலகிய பின்பு உன்னால் தான் காரியம் நடக்குமென்று உன்னையும் காட்டிக் கொடுத்துள்ளாள் செய்யாத குற்றத்திற்காக இப்போது அகப்பட்டு விட்டேன் எனத் துயரப்படாதே. முன்பு செய்த தீவினை இப்போது சூழ்ந்துள்ளது. இளமை போய் வயோதிபம் வந்து பலமிழந்து நிற்கும் இவ் வேளையிலாவது உலகைப் புரிந்து கொள், நிலையில்லாதவற்றை நிலையானது என்று நினைத்து இனியும் மயங்காதே. முத்தியடைய வேண்டிய கால கட்டத்தில் இருக்கும் நீ இனியாவது வாழ்வின் தத்துவத்தை உணர்ந்து உனது வாழ்வைச் செம்மைப்படுத்து. வாலிபம் என்பது திருமணமானதும் முடிவடைந்து விடும் .ஆனால் உனக்கு வயோதிபம் வந்தும் முடிவுக்கு வரவில்லை. தீயவற்றையே செய்து தீமையை அனுபவித்த நீ மறுமையைப் பற்றிச் சிந்தித்துப் பார்” என்றான் ஆனந்தராசா.

## 22. வாள்அஞ்சான் வன்கண்மை அஞ்சான் வனப்பு அஞ்சான்

**ஆள்அஞ்சான் ஆம்பொருள் தான் அஞ்சான் - நாள் எஞ்சாக்**

**காலம் வரஒழிதல் காணின்வீடு எய்திய**
**பாலின் நூல் எய்தப் படும்.**

"ஒருவன் தனது பகைவனது வாளுக்கும், தன் மீது இரக்கமில்லாமைக்கும், மற்றவர்களின் அஞ்சத்தக்க தோற்றத்திற்கும், பெரும் பொருளுக்கும் ,படைகளுக்கும் அஞ்சாமல் இருக்கலாம். ஆனால் காலனுக்கு அஞ்சியே தீர வேண்டும். அவன் காலனுக்கும் அஞ்சாது வாழ வேண்டுமானால் அறநூல்கள் கூறும் வழியில் வாழ்ந்து முத்தியடைதல் வேண்டும்."

"நாராயணா, ஒருவன் வலிமையுள்ளவனாகவும், பொருளுள்ளவனாகவும், அறிவுள்ளவனாகவும் இருந்தால் , பகைவனின் வாளுக்கும் கொள்பவர்களின் பகைக்கும், பெரும் பொருள் உள்ளவனுக்கும், படைவீரர்களுக்கும் அஞ்சத் தேவையில்லை. ஆனால் வாழும் போதே சொல்லாமல் கொள்ளாமல் வந்து உயிரைக் கவர்ந்து செல்லும் யமனுக்கு அஞ்சியேயாக வேண்டும்.யமனுக்கு அஞ்சாது வாழ்பவன் தான் அஞ்சா நெஞ்சன். அவன் அறநூல்கள் கூறியபடி தன் வாழ்க்கையை அமைத்து நல்லவற்றையே செய்து எதிலும் பற்றில்லாது வாழ்ந்து வருவதால் யமன் வந்து அவனை அழைத்துச் சென்று நீங்காத இன்பத்தை எவ்வேளையிலும் தரும் இறைவனின் பாதங்களில் விடுவான். அதனால் அவனுக்குப் பிறப்பிருக்காது. அதனால் மரண பயமும் இருக்காது. உன்னைப் போலத் தீய செயல்களைச்

செய்பவர்கள தான் பிறப்புக்கள் தோறும் யமனுக்கு அஞ்சியபடி வாழ்பவர்கள். அதனால் பல நூல்களைக் கற்ற நீ இதுவரை அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சவில்லை.இனியாவது நிஜ வாழ்க்கையைப் புரிந்து நல்ல வழியில் வாழ்.அப்போது தான் உனக்கும் உனது குடும்பத்திற்கும் விடிவு காலம் பிறக்கும்" என்றான் ஆனந்தராசா.

**23. குணநோக்கான் கூழ்நோக்கான் கோலமும் நோக்கான்**
**மணநோக்கான் மங்கலமும் நோக்கான் -கணநோக்கான்**
**கால்காப்பு வேண்டான் பெரியார்நூல் காலற்கு**
**வாய்காப்புக் கோடல் வனப்பு.**

"கால் விலங்கான இல் வாழ்வையும், நல்லியல்புகளையும். செல்வத்தையும் ,பேரழகையும், திருமணத்தையும், புண்ணியத்தையும், உறவினர்களையும், துறவொழுக்கத்தை விரும்புபவன் தீயவற்றை விரும்ப மாட்டான். காலனை அணுக விடாது தடுக்கச் சான்றோர் அருளிய அறநூல்களைப் படித்து அதன்படி நடப்பதே அவனது முழுமையான நினைப்பாகும்.

"சிறுத்தொண்டனின் இரத்த உறவினனும் , பெருந் தனவந்தனும், ஒழுக்க சீலனுமான வாதவூரன் தனது மகள் காயத்திரியை உத்தமனான நகுலனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பிச் சிறுத்தொண்டனுக்கு தனது விருப்பத்தைத் தெரிவித்தார். பெருங் கல்விமானும் ஒழுக்கசீலனுமான நகுலனுக்குப் பேரழகியும், பெரும் பணக்காரியும் ,குணவதியுமான காயத்திரியைத் திருமணம்

செய்யும் நோக்குடன் சென்ற சிறுத்தொண்டன் ,காயத்திரியைப் பற்றி விரிவாகக் கூறிவிட்டு அவளைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டினார்."

"ஐயா, மனிதனின் ஆன்மீக சுதந்திரத்திற்கு கால் விலங்கிடும் இல் வாழ்வை நான் விரும்பிவில்லை. நான் துறவு மேற்க்கொள்ள விரும்புவதால் நன்மை தரும் எனை-தயும் விரும்புவதில்லை. பணமோ, பேரழகோ, நல்ல பண்புகளோ, இனத்தினரோ, நண்பர்களோ ஆன்மாவுக்கு விடுதலை தருதலை விரும்பமாட்டார்கள். அவர்கள் எப்பொழுதும் இன்பமான விடயங்களையே நாடுவார்கள். அது எனக்குப் பிடிக்கவில்லை.பேரழகும் பெரும் சொத்தும் உள்ள அவளைத் திருமணம் செய்ய பல உத்தம புருஷர்கள் காத்திருக்கின்றனர்" என்றான் நகுலன்

**24. பிணிபிறப்பு மூப்போடு சாக்காடு துன்பம்**
**தணிவுஇல் நிரப்புஇவை தாழா – அணியின்**
**அரங்கின்மேல் ஆடுநர்போல் ஆகாமல் நன்றாம்**
**நிரம்புமேல் வீட்டு நெறி.**

"பிறப்பும், நோயும், வயோதிபமும் ,இறப்பும்,பல்வேறுபட்ட துன்பங்களும் ,மனக் குழப்பங்களும் வறுமையும் மாறி மாறி வரும். எனவே நாடக நடிகர்களைப் போல பல வேடங்களைத் தரிக்காது இறவாத நிலையை அடைதல் வேண்டும். அதற்காகத் துறவை மேற்கொள்வதே மேன்மையானது.

“சிறுத்தொண்டன் திகைத்துப் போனார். அவனின் அமைதியான போக்கும், இறை சிந்தனையும் பற்றற்ற நிலையும் கல்வியால் வந்ததென்று நினைத்தாரே தவிர அவன் துறவு மேற்க்கொள்வானெனக் கனவிலும் அவர் நினைக்கவில்லை”

“ ஐயா, மனிதர்களைப் பாருங்கள். தொடர்ந்து வருத்துகின்ற நோய்களும் ,வறுமை போன்ற துன்பங்களும் இனத்தவர்கள், பெற்றோர்கள், நண்பர்கள் என்போரின் பற்றுக்களும், அவர்களால் வரும் துன்பங்களும் கணக்கற்றவை. வறுமை அதனால் மனக் குழப்பம்.அதனால் பல்வேறு துன்பங்கள் வரக் காரணம் இந்தக் கீழான பிறப்புத் தானே. நாடக நடிகர் மாறி மாறி வேடமணிவது போல மனிதர்களாகிய நாம் பல்வேறு பிறப்புக்களை அடைகிறோம். காண்கின்ற மனிதப் பிறப்பில் பல்வேறு வகையான துன்பங்களைக் கண்டு அதிலிருந்து ஆத்மா விடுபட்டு நித்திய இன்பத்தைப் பெறவேண்டும் என்பதற்காக இறைவனால் எமக்களிக்கப்பட்ட கொடை தான் துறவு .அதை அறியாமல் இல்லற வாழ்வில் புகுந்து மீண்டும் மீண்டும் நரக வேதனையை அடைய நான் விரும்பவில்லை. அதனால் தான் துறவை மேற்கொள்ள விரும்புகிறேன்” என்றான் நகுலன்.

**25. பாடகம் சாராமை பாத்திலார் தாம் விழையும்**
**நாடகம் சாராமை நாடுங்கால் - நாடகம்**
**சேர்ந்தால் பகைபழி தீச்சொல்லே சாக்காடே**
**தீர்ந்தால்போல் தீரா வரும்.**

“பொது மகளிர் பாடி ஆடுகின்ற இடத்திற்குச் சென்று அவர்களது பாடலையும் ஆடலையும் ரசிக்கக் கூடாது. அவற்றைக் கண்டு ரசித்தால் பகை ,பழி, கடுஞ்சொல ̇, இடையில் நேரும் இறப்பு என்பன தானாகவே வரும். அதனால் அவற்றை விலக்குதல் வேண்டும்”

“நகுலனின் உயிர் நண்பன் கயேந்திரன். அவனக்குச் நகுலனின் போக்கு கவலையை அளித்தது. எப்படியாவது அவனை குடும்பத்தானாக்கி விட வேண்டும் என்று எண்ணி முயன்றான். அவன் தான் காயத்திரியின் தந்தையிடம் சென்று அவளை நகுலனுக்குத் திருமணம் செய்து வைக்குமாறு கூறியது. அது பிழைத்ததால் வெளிநாட்டில் இருந்து அவ்வூருக்கு நடன நாடக நிகழ்ச்சி நடாத்த வந்த அந்தப் பிரபலமான குழுவினரது நடன நிகழ்ச்சிகளைப் பார்த்தாவது நகுலன் மனம் மாறுவான் என நினைத்து நகுலனிடம் வந்தான்.

“நகுலா, வெளிநாட்டிலிருந்து ஓர் அற்புதமான நடனக் குழு வந்துள்ளது. அதைப் பார்ப்பதற்காக இரண்டு நுழைவுச் சீட்டுக்களை வாங்கி வந்துள்ளேன் . வா போகலாம்” என்றான்.

“கயேந்திரா, பொது மகளிர் பாடி ஆடி நடிக்கின்ற இடத்திற்குச் செல்லக் கூடாது. சென்று அதைப் பார்த்து ரசிக்கவும் கூடாது. அதனால் மனக் குழப்பம், அவமானம்,

பழி என்பன வரும். சென்ற வருடம் பிற நாட்டிலிருந்து வந்த ஒரு நடனப் பெண்ணின் அரைகுறை ஆடையின் மீது மோகங் கொண்ட ஒருவன் மயங்கி அவளை நெருங்கிக் கட்டித் தழுவ பெரும் அல்லோலகல்லோலம் ஏற்பட்டது. அதனால் விழா குழம்பியதோடு பலர் காயப்பட்டனர். காவல் துறையினர் வந்து அவர்களைக் கைது செய்தனர். பின் வழக்குக் கனகாலம் நடைபெற்றது. அதன் பின் தாக்கப்பட்ட இருவரில் ஒருவர் கொலை செய்யப்பட்டார். இவை யாவும் தெரிந்த பின்பும் நீ அதைப் பார்க்கச் செல்ல விரும்புகிறாயா? அத்துடன் என்னையும் வரச் சொல்கிறாய். நன்மை. தீமைகளை ஆராய்ந்து அறிய முடியாத உனது கல்வியால் என்ன பயன்? நீ எனது நண்பன் என்ற உரிமையைப் பயன்படுத்தி எனது மனத்தையும், எனது நோக்கையும் குழப்ப நினைக்கிறாய். ஒரு முறையல்ல, பலமுறை என்னைக் குழப்ப முயன்றுள்ளாய். இனிமேல் இப்படி நடந்தால் நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன்" என்றான் நகுலன்.

**26. மாண்டமைத்து ஆராய்ந்த மதிவனப்பே வன்கண்மை**
**ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல்- பூண்டமைந்த**
**காலம் அறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு**
**ஞாலம் அறிந்த புகழ்.**

"நல்லொழுக்கமும், பல நீதிநூல்களைக் கற்று ஆராய்ந்த அறிவழகும், தோற்றப் பொலிவும் பகைவர்க்கு

அஞ்சாமையும், நிரம்பிய கல்வியறிவும், சொல்வன்மையும், சொல்லுதற்கேற்ற காலத்தையும் அறிந்தவனே தூது செல்வதற்கு உரியவன். அவனது புகழை உலகம் போற்றும்.”

“ சிறுத்தொண்டன் பலத்துச் சிரித்தார். அவர் நகுலன் திருமணம் செய்ய மாட்டான் என்று அடித்துக் கூறிய போது கஜேந்திரன் சொன்னான், “அரசர்களுக்கு தூதுவனாக இருப்பவன், நல்லொழுக்கமுள்ளவனாகவும், பல்வேறு வகையான நீதி நூல்களைக் கற்று ஆராயந்து தெரிந்தவனாகவும் ,தோற்றப் பொலிவுள்ளவனாகவும் ,பகைவர்க்கு அஞ்சாதவனாகவும் , நிரம்பிய கல்வியறிவால் வரும் சமயோசித புத்தி உள்ளவனாகவும் , சொல்வன்மை உள்ளவனாகவும், சொல்லும் காலம் அறிந்தவனாகவும் இருந்தால் அவனால் அரசன் உலகப் புகழ் பெறுவானாம். எனக்கு அந்தத் தகைமைகள் இருக்கு, நாம் பாடசாலைக்குச் செல்லு முன்பே நண்பர்கள். அவன் பிடிவாதக்காரன், ஆனால் நான் சொன்னால் கேட்பான். இன்று ஒரு நடன நிகழ்வு இருக்கிறது. அதற்குக் கூட்டிச் சென்றால் நடனமாடுபவர்களின் பொலிவும் அலங்காரமும் அழகும் அவனைக் கவரும். பொறுத்திருந்து பாருங்கள் நான் காயத்திரியை அவளுக்கு மணம் முடித்து வைக்கிறேன்”

“அதை நினைத்துப் பலமாகச் சிரித்தார் சிறுத்தொண்டன். “நான் தோற்று விட்டேன். அவனைக் குடும்பத்தனாக்க முடியாது” என்று பெருமூச்சு விட்டான் கஜேந்திரன்.

**27. அஃகுநீ செய்யல் என அறிந்து ஆராய்ந்தும்**
**வெஃகல் வெகுடலே தீக்காட்சி – வெஃகுமால்**
**கள்ளத்த அல்ல கருதின் இவை மூன்றும்**
**உள்ளத்த ஆக உரை.**

"பிறரின் பொருளைக் கவராதே, கோபப்படாதே, தீய காட்சியைக் காணாதே" என்று ஒருவர் இன்னொருவருக்கு கூறுவது பிழையல்ல. கூறும் தீய செயல்களை சொல்வதால் அவன் தீயவை செய்தவனாவான். அவன் அப்படிச் சொல்வது நன்மையின் பொருட்டேயாகும்."

" ஒருவன் நெருப்பு, நெருப்பு என்ற பலமாகக் கத்தினால் அவனுக்கு நெருப்புச் சுடுமா என்ன? எனது நண்பன். அவன் மீது அளவில்லாத அன்பு வைத்துள்ளேன். அந்த நம்பிக்கையில் தான் நான் உங்களுக்கு அப்படிக் கூறினேன். தீயவற்றைச் செய்யாதே, தீயவற்றைக் காணாதே, சினம் கொள்ளாதே என்று கூறுவதைப் போல நகுலனைத் திருமணம் செய் என்று கூறியது அவனது நன்மைக்காக, அவன் எனது சொல்லைக் கேட்பான் என்ற நம்பிக்கையில் தீயவற்றைச் செய்யாதே என்ற உபதேசித்துவிட்டுத் தீயதைச் செய்யாதே என்று உபதேசித்தவனே தீயதைச் சொல்வது தான் குற்றம். நகுலனது விடயத்தில் உரிமை காரணமாக நான் அப்படிச் சொன்னேன். அது தவறாயின் மன்னித்துக் கொள்ளுங்கள்" கலங்கினான் கஜேந்திரன்.

“நீ ஏன், கலங்குகிறாய். நானும் உன்னைப் போலத் தான் நம்பிச் சென்றேன். அது தவறில்லையே, ஒருவருக்கொருவர் உதவாவிட்டால் வாழ்வில் என்ன இருக்கிறது. அவனை இனியும் தெண்டிக்காதே, தெண்டித்தால் உறவில் விரிசல் ஏற்படும்” என்றார் சிறுத்தொண்டன்.

**28. மையேர் தடம்கண் மயில்அன்னாய் சாயலே**
**மெய்யே உணர்ந்தார் மிகஉரைப்பர் -பொய்யே**
**குறளை கடுஞ்சொல் பயன்இலசொல் நான்கும்**
**மறலையின் வாயினவாம் மற்று.**

“பெரியோர் என்றும் நல்லவற்றையே பேசுவர். பொய்,புறங் கூறுதல், கடுஞ்சொல் ,பயனற்ற சொல் ஆகியன புல்லறிவாளரின் வாயிலிருந்தே வரும்.”

“நாராயணனைக் காவல் துறையினர் பிணையில் விட்டு விட்டனர். அவன் தனது தீய நண்பர்களுடன் சேர்ந்து குடித்து விட்டு ஆனந்தராசாவின் வீட்டுக்கு வந்தான். குடித்து விட்டு நிலை தடுமாறியபடி வந்த நாராயணனைக் கண்ட ஆனந்தராசா திகைத்துப் போனான். அவன் சிறுத்தொண்டனைச் சந்தித்து தான் திருந்தியதாக கூறியதைச் சிறுத்தொண்டன் அவனுக்குக் கூறியமையால் தான் அவன் காவல் துறை அலுவலகத்திற்குச் சென்று பிணை எடுத்தான். அப்போது அதிகாரி சொன்னார், “ஆனந்தராசா,நாராயணன் திருந்தி விட்டான் என்பதை நான் நம்பமாட்டேன். அவர்கள் தம் காரியங்களைப் பார்ப்பதற்காக திருந்தியதாக நடிப்பார்கள். அதை நல்லவர்கள் உண்மை

என்று நம்பி உதவுவார்கள். அதனால் எப்பொழுதும் ஆபத்துக்கள் தான் வரும். இன்னொரு முறை நாராயணன் தவறு செய்தால் உங்களையும் சேர்த்துத் தான் கைது செய்வேன்" என்ற வார்த்தைகள் காதில் ஒலித்தன.

"பிணை எடுத்ததற்கு நன்றி, இருந்தாலும் நீ காவல் நிலையத்தில் என்னை அவமதிப்பது போலப் பேசி விட்டாய். அதை நினைக்க எனக்கு வருத்தமாக இருக்கிறது. நன்மை செய்வதைச் சொல்லிக் காட்டக்கூடாது. நீ பிணை எடுக்காவிட்டால் சுந்தரம் எடுத்திருப்பான். இல்லாவிட்டால் மானத்திற்கஞ்சியாவது பிள்ளைகள் எடுத்திருக்கும். நீ பெரும் ஒழுக்க சீலனோ? உன்னைப் பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. இனிமேல் நான் கைது செய்யப்பட்டால் காவல் துறைப் பக்கம் வராதே" என்று கூறிவிட்டுச் சென்றான் நாராயணன்.

"இது தேவை தானா உங்களுக்கு. நன்றி மறத்தல், பொய் பேசுதல் ,புறங்கூறுதல் ,கடுமையான சொற்களைப் பேசுதல், பயனில்லாத சொற்களைப் பேசுதல் என்பன தீயவர்களின் இயல்பான குணங்கள் . அதை நம்பாது அவன் திருந்தி விட்டான் என்றீர்கள். இப்போ எப்படி?" என்று கேட்டான் ஆனந்தராசாவின் மகன்.

"உண்மை தான், அவனைப் பேச என்னால முடியவில்லை, ஒன்றாக வேலை செய்வதால் சென்று உண்மை நிலையைக்

கூறினேன். அது அவனுக்குப் பிடிக்கவில்லை. அதற்கு நான் என்ன செய்வது?” என்றான் ஆனந்தராசா.

“உங்களுக்குப் பலத்தே பேசத் தெரியாது .பிறகேன் தீயவர்களுக்கு உதவி செய்யப் போகிறீர்கள்?” என்றாள் ஆனந்தராசாவின் மனைவி ஆரணி.

**29. நிலைஅளவில் நின்று நெடியவர்தாம் நேரா**
**கொலைகளவு காமத்தீ வாழ்க்கை – அலைஅளவி**
**மையெனநீள் கண்ணாய் மறுதலைய இம்மூன்றும்**
**மெய்அள வாக விதி.**

“ஒழுக்கமாக வாழும் பெரியவர்கள் கொலை, களவு செய்தல், காமம் கொள்ளல் ஆகிய தீய குணங்களைக் கொண்டிரார். இம் மூன்று குணங்களும் வாழ்வின் நிலையான உண்மை நெறிகள் என்று அவர்களுக்குத் தெரியும்.”

“கொலை செய்தல், களவு எடுத்தல், பிற மாதர்கள் மீது இச்சை கொண்டு அவளோடு கூடிக் குலாவுதல் என்பன தீயவர்கள் மனம் கூசாமல் செய்யும் அன்றாட நிகழ்வுகளாகும். இம் மூன்றையும் அஞ்சாமல் செய்யும் ஒரு தீயவனுக்காக நீங்கள் காவல் துறை அலுவலகத்திற்குச் சென்றது பிழை என்று அப்பா சொன்னவர். இனிமேல் அவ்வாறு நடக்க வேண்டாம் என்றும் சொன்னவர், நாம் ஒழுங்காக வாழும் உத்தமமான குடும்பத்தர். அதுபோலத் தான் உங்களது குடும்பமும் உத்தமமானது. அதனால்

இனியாவது துட்டர்களின் சகவாசம் இல்லாமல் வாழுங்கள். எப்படி ஏசினாலும் அவனுக்கு ரோசம் வராது. இப்போ மது மயக்கத்தில் உளறி விட்டுச் செல்கிறான். மாலையில் வந்து மன்னிப்புக் கேட்பான். அப்படியானவனோடு தயவுசெய்து சேராதீர்கள். நீங்கள் நல்லவர், ஒழுக்கமானவர், அவனோடு சேர்ந்தாலும் உங்கள் குணம் மாறாது. இருப்பினும் தீயவனது தொடர்பு தீமையைத் தான் தரும்.தயவு செய்து எனது சொல்லைக் கேளுஙகள்." கலங்கினார் ஆரணி.

"உம் மீது ஆணையாகச் சொல்கிறேன். இனிமேல் அவனோடு நான் கதைக்கவும் மாட்டேன்" என்றான் ஆனந்தராசா.

**30. மாண்டவர் மாண்ட அறிவினால் மக்களைப்**
**பூண்டவர்ப் போற்றிப் புரக்குங்கால் - பூண்ட**
**ஔரஸனே கேத்திரசன் கானீனன் கூடன்**
**கிரிதன், பௌ நற்பவன் பேர்.**

"சான்றோர்கள், தம் உயர்ந்த அறிவாலும், பண்பாலும், குடிப்பிறப்பின் மகிமையாலும் தம் பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்ப்பர். அதனால் அவர்களும் சமுதாயமும் மேம்படும் .இப்படி நல்ல முறையில் வளர்க்கப்பட்ட பிள்ளைகளை ஔரதன், கேத்திரசன் , கானீனன் ,கூடன், கிரிதன், நற்பவன் என பெரியவர்கள் பெயரிட்டுப் போற்றுவார்கள்."

“ உங்களை உங்கள் தந்தை எப்படி வளர்த்தார் என்று எண்ணிப் பாருங்கள். உயர்குடியிற் பிறந்தோர் ஒழுக்கத்தை உயிரிலும் மேலானதாகக் கருதுவர். அது போலவே தமது பிள்ளைகளையும் ஒழுக்கமாக வளர்த்து சிறந்த கல்வியை ஊட்டுவர். தம் பிள்ளைகளுக்கு எந்தக் குறைகளும் ஏற்பாடாத வண்ணம் பார்த்துக் கொள்வர்.கோழி தன் இறக்கைக்குள் தன் குஞ்சுகளை வைத்துக் காப்பது போல அவர்களும் தம் கண்காணிப்பில் பிள்ளைகளை வளர்ப்பர். சிறந்த பெற்றோர்க்குப் பிறந்து சிறந்த குணநலன்களோடு வளர்ந்த பிள்ளைகளுக்கு சான்றோர் ஔரன், கேத்திரசன், கானீனன், கூடன், கிரிதன், நற்பவன் என அவர்களின் சிறப்புக்களைப் பொறுத்து கௌரவ நாமம் சூட்டுவார். அப்படி வளர்க்கப்பட்ட நீங்கள் உதவி செய்வதற்காகக் கூடக் காவல் துறைக்குச் சென்றிருக்கக் கூடாது என்று அப்பா சொல்லிக் கவலைப்பட்டார். உங்களது தந்தையும் அப்பாவுடன் சேர்ந்து கவலைப்பட்டவர்” என்றாள் ஆரணி.

“ அதைக் கேட்க ஆனந்தராசாவிற்குத் தூக்கமாக இருந்தது, உண்மை தான், அப்பா , ஒருவனுக்கு ஆபத்து வந்தபோது எதைப் பற்றியும் யோசிக்காது உதவி செய்ய வேண்டும்.” என்றவர் .அதனால் தான் நாராயணனின் மனைவியும் பிள்ளைகளும் வந்து அழுத போது எல்லாவற்றையும் மறந்து விட்டேன்” கலங்கினான் ஆனந்தராசா.

**31. மத்த மயில்அன்ன சாயலாய் மன்னியசீர்த்**

**தத்தன் சகோடன் கிருத்திரமன் - புத்திரி**
**புத்ரன் , ப வித்தனொடு பொய்யில் உபகிருதன்**
**இத்திறத்த எஞ்சினோர் சீர்.**

“முன்பு கூறிய சிறப்பான புத்திரர்களோடு சான்றோரின் சிறந்த புத்திரர்களாக கந்தன், சகோடன் கிருத்திரமன், புத்திரிபுத்திரன், சுபவித்தன், உபகிருதன் என்ற ஆறு புத்திரரும் அமைவர்”

“சமூகம் சான்றோரின் புத்திரர்களுக்கு சிறப்புப் பெயர்களாக பன்னிரு பெயர்களை அவரவரின் குணநலத்திற்கு ஏற்றவாறு சூட்டி மகிழும். அந்த வகையில் உங்களுக்கு நற்பவன் என்ற நாமத்தைச் சூடியது. அப் பெயருக்கேற்றவாறு நீங்கள் வாழ்ந்து வருகிறீர்கள். கீழானவர்களுக்கும், தீயவர்களுக்கும், எதிரிகளுக்கும் ஆபத்து வந்தால் கட்டாயம் உதவ வேண்டும் என்று தான் அறநூல்கள் கூறுகின்றன. அந்த வகையில் நீங்கள் செய்தது சரி.ஆனால் நாராயணன் ஓயாது தீய செயல்களைச் செய்பவன். நல்ல ஒரு மனிதனின் நட்புத் தனக்கு எவ்வேளையிலும் உதவும் என்று நினைக்கிறான். அதனால் தான் அப்பாவும் மாமாவும் மனம் கலங்கினர். நீங்கள் தீய செயலை மனதால் கூட எண்ண மாட்டீர்கள் என்று எல்லோருக்கும் தெரியும். உங்களது இரக்க சுபாவத்தை அத் தீயவன் தவறான வழியில் பயன்படுத்துகிறான்” என்றாள் ஆரணி.

“உண்மை தான், நான் பிணையெடுக்காவிட்டால் ஊரில் யாரும் பிணை எடுக்க மாட்டார்கள். அவன் சிறையில்

இருந்தாலும் திருந்த மாட்டான். நான் தான் அவன் திருந்தி விட்டான் என்று தவறாக நினைத்து விட்டேன்" என்றான் ஆனந்தராசா.

**32. உரையான் குலன் குடிமை ஊனம் பிறரை**
**உரையான் பொருளொடு, வாழ்வு ஆயு-உரையானாய்ப்**
**பூவாதி வண்டுதேர்ந்து உண்குழலாய் ஈத்து உண்பான்**
**தேவாதி தேவனாத் தேறு.**

"தனது குலத்தின் உயர்ந்த பெருமைகளையும் குடிப்பிறப்பின் உயர்வையும் கூறாது அவ்விரண்டும் இல்லாதவர்களுக்கு மகிழ்வுடன் உதவிகள் செய்தும் அவர்களின் பாராட்டுக்களை எதிர்பாராமலும் தனது செல்வத்தைப் பற்றியும் ,தனது ஆயுட்காலத்தைப் பற்றியும் எண்ணாது பிறருக்கும் கொடுத்துத் தானும் நல்லபடி வாழ்பவன் தேவர்களின் தலைவனுக்கு ஒப்பானவன்"

"மருமகனே,நீங்கள் உங்கள் குலப் பெருமையையும் ,குடிப்பிறப்பின் பெருமைகளையும் மதிக்காது , அதைப் பற்றிச் சொல்லி பெருமைப்படாது உங்களை விடக் கீழானவர்களுடனும் மகிழ்வுடன் பேசி ,அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகிறீர்கள்.இதனால் உங்களின் பொருள் குறைவடைவதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. பிற்காலத்திற்குத் தேவையென்றும் உணர்வதில்லை. ஏழை எளியவர்களுக்கு உதவி செய்கிறீர்கள். நீங்களும், உங்கள் பிள்ளைகளும் நல்ல

உணவு வகைகளை உண்டும், நல்ல உடு பிடைவைகளை உடுத்தும் அனுபவிக்கிறீர்கள். உங்களைப் போன்ற நற்குணமுள்ள ஒருவர் பூமியில் இல்லை. நீங்கள் தேவர்களின் தலைவனான இந்திரனுக்குச் சமமானவர் என்று மக்கள் பேசிக் கொள்கின்றனர். தீயவர்களுக்கும் உதவுவது தான் உங்கள் குணம் என்று எனக்குத் தெரியும். இருப்பினும் நாராயணன் போன்றோரிற்கு உதவுவதால் சமூகம் பாதிக்கப்படும். அதனால் தான் சொன்னேன்" என்றார் ஆரணியின் தந்தை கதிரவேலு.

**33. பொய்உரையான் வையான் புறம்கூறான் யாவரையும்**
**மெய்உரையான் உள்ளனவும் விட்டுஉரையான் - எய்உரையான்**
**கூந்தல் மயில் அன்னாய் குழீஇயவான் விண்ணோர்க்கு**
**வேந்தனாம் இவ்வுலகம் விட்டு.**

"பிறரை இகழாதவனாகவும், பொய் சொல்லாதவனாகவும், புறங் கூறாதவனாகவும் ,உதவிகள் செய்ததைக் கூறாதவனாகவும் தன் தோழனிடமும் தன் வறுமையைக் கூறாதவனாகவும் வாழ்கின்றவன் மண்ணுலகை விட்டுச் சென்று விண்ணுலகத்தார்க்குத் தலைவனாவான்."

"ஆனந்தராசாவை நாராயணன் ஏசியதையறிந்த சிறுத்தொண்டன் ஆனந்தராசாவின் வீட்டுக்கு வந்தார், "ஆனந்தா நீ விண்ணலகத் தலைவன் போல மண்ணுலகத்தில் வாழ்கிறாய், பொய் சொல்லாதவனாகவும்,

பிறரை இகழாதவனாகவும் ,புறங் கூறாதவனாகவும், தன் தோழனிடம் கூடத் தனக்கேற்பட்ட துன்பங்களைக் கூறி உதவி கோராதவனாகவும், தன்னிடம் உள்ள பொருள் வளத்தைக் கூறாதவனாகவும் இருப்பவன். மண்ணுலகத்தை விட்டுச் சென்று விண்ணுலகில் வாழும் தேவர்களுக்குத் தலைவனாவான் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அதன் படி நீ வாழ்கிறாய். அதனால் உன்னைப் பற்றி யார் எதைச் சொன்னாலும் பழி வராது ,கண்ணாடி வீட்டுக்குக் கல் எறிந்தால் பாதிப்புக்குள்ளாவது கண்ணாடி தான். நீ எதிலும் கல்லுப் போலவே இருக்கிறாய். அதனால் உனக்கு மனக் கஷ்டம் உண்டாகாது என்று எனக்குத் தெரியும். இருப்பினும் நான் சொன்னதற்காகச் சென்றாய். நன்றி, யாரைப் பற்றி நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை" என்றார் சிறுத்தொண்டன்.

**34. சிதைஉரையான் செற்றம் உரையான் சீறில்லான்**
**இயல்புஉரையான் ஈனம் உரையான் - நகையவர்க்குக்**
**கூடுவது ஈவானைக் கொவ்வைபோல் செவ்வாயாய்**
**நாடுவர் விண்ணோர் நயந்து.**

"கீழ்த்தரமான சொற்களைப் பேசாமலும்,பகை கொள்ளாமலும், பிறர் மேல் கோபம் கொள்ளாமலும், தன்னைப் புகழாமலும் ,பிறரின் குற்றங்களைப் பெரிது படுத்தாமலும்,தன்னிடம் வந்து இரப்போர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்தலும் ஆகிய பண்புகளை உடையவனைத தேவர்கள் விரும்பி ஏற்றுத் தம்முடன் வைத்திருப்பர்."

“ஐயா, நீங்கள், எனது தந்தையின் உயிர் நண்பர். உத்தமர். உயர் குடியில் பிறந்தவர். அதனால் கீழ்த்தரமான சொற்களைப் பேசமாட்டீர்கள். பிறருடன் பகை கொள்ள மாட்டீர்கள். தன்னைப் பற்றிப் புகழ்ந்து பேச மாட்டீர்கள். பிறரின் மேல் கோபம் கொள்ள மாட்டீர்கள்.பிறர் குற்றங்கள் செய்தாலும் அதைப் பொருட்படுத்தாது அவர்களுக்கு செய்யக் கூடிய நன்மைகள் அனைத்தையும் செய்து கொடுப்பீர்கள். இரப்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாது கொடுத்துதவுவீர்கள். அதனால் உங்களை அப்பா தேவர்களின் அரசனான தேவராஜன் என்று அழைத்து மகிழ்வார். உங்களைப் போலவே வாழவேண்டுமென்று எண்ணிச் சிறுவயதிலேயே உங்களைப் போல வாழ்ந்து வருகின்றேன்.அதனால் உங்களின் குணங்கள் யாவும் எனக்கு இருக்கிறது என்று பலரும் சொல்வார்கள். அதனால் தான் நீங்கள் சொன்னதும் செய்தேன்.”என்றான் ஆனந்தராசா

“மனிதன் வாழும் போது பண்புள்ளவனாக ,தீயவற்றைச் செய்யாதவனாக, உதவிகள் செய்பவனாக வாழ வேண்டும் .எம்மோடு கூட வருபவை அவை தான். அதை உணர்ந்து செயற்படும் உனக்கு எப்போதும் நல்வாழ்வு கிடைக்கும்” என்றார் சிறுத்தொண்டன்.

**35. துறந்தார் துறவாதார் துப்பிலார் தோன்றாது**
**இறந்தார் ஈடுஅற்றார் இளையர் - சிறந்தவர்க்கும்**
**பண்ணாரும் சொல்லாய் பழியில்ஊண் பாற்படுத்தான்**

**மண்ணாளும் மன்னனாய் மற்று.**

“துறவிகள், விருந்தினர், வறியவர், சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர், செல்வராயிருந்து வறியவரானோர், துணையில்லாத சிறுவர்கள், கைவிடப்பட்டோர் ஆகியோர்க்கு உணவு கொடுத்து ஆதரிபப்பவர்கள் மறுபிறவியில் மண்ணாளும் அரசர்களாகப் பிறப்பர்.”

“என்னைப் போல வாழவேண்டுமென்று நினைத்துத் துறவிகள் கைவ-
ிடப்பட்டவர்கள்,விருந்தினர்,வறியவர்,செல்வர்களாக இருந்து வறியவரானவர்கள்.துணையில்லாத சிறுவர்கள், சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் ஆகியோர்க்கு எந்நாளும் அன்புடன் உபசரித்து உணவும், உடையும் பாதுகாப்பும் கொடுத்து வருகிறாய். உனக்கு எந்தக் குறைகளும் இல்லை. ஏராளமான விளை நிலம் இருக்கிறது, தோப்புகள் இருக்கிறது, தொழிற்சாலைகள் இருக்கிறது. தொழில் இருக்கிறது.அத்துடன் நல்ல குணங்கள் யாவும் இருக்கிறது.அதனால் ஊரவர் இப்பொழுதே மகாராஜா என்று அன்புடன் அழைத்துப் போற்றுகின்றனர். இப்பிறவியிலேயே மனித மனங்களை ஆளும் மகாராஜாவாக இருக்கிறாய்.அடுத்த பிறவியில் முடிதரித்து பலருடன் குதிரையில் வந்து நாட்டை ஆளப் போகிறாய்’’ என்று சிரித்தார் சிறுத்தொண்டன்.

“ஆரணிக்குப் பெருமையாக இருந்தது. முன்பு நாராயணனுக்கு உதவியதற்காக தெரியாத் தனமாக

ஏசிவிட்டேன். அதனால் மனம் குழம்பியிருந்தவர்.இப்போது மகிழ்வுடன் சிரிக்கிறார்” என்று நினைத்தாள் ஆரணி.

**36. கால்இல்லார் கண்இல்லார் நாஇல்லார் யாரையும்**
**பால்இல்லார் பற்றிய நூல்இல்லார் - சாலவும்**
**ஆழப் படும்ஊண் அமைத்தார் இமையவரால்**
**வீழப் படுவார் விரைந்து.**

“முடவர்கள், குருடர்கள், ஊமைகள், அனாதைகள், கல்லாமையால் மூடர்களாக இருப்பவர்கள் ஆகியோருக்குச் சுவையான உணவு வகைகளைக் கொடுப்போர் தேவர்களால் விரும்பப்படுவர்’’

“கண்தெரியாத குமரனின் தாயார் காலையில் வந்து கண் சத்திர சிகிச்சை புதன்கிழமை என்று சொன்னவா. நீங்கள் அவர்களுக்குக் கொடுக்கச் சொல்லிச் சொன்ன பணத்தைக் கொடுத்தேன்.தினமும் அவர்களை எமது வீட்டுக்கு வந்து உண்ணும்படியும் கூறினேன். கால் ஊனமான நடராசாவிற்கு நீங்கள் வாங்கி வைத்த ஊன்று கோல்களையும் ,கொடுக்கச் சொல்லித் தந்த பணத்தையும் கொடுத்து உணவையும் கொடுத்தேன்’’ என்றாள் ஆரணி.

“மாதவனின் மகன் வாய் பேச முடியாதவன். அவன் வந்து சாப்பிட்டானா? பாடசாலைக்கே செல்லாத அனாதையான துரைசிங்கத்திற்கு வேட்டி வாங்கி வைத்திருந்தேன். கொடுத்தீரா? என்று கேட்டார் ஆனந்தராசா.

“மாதவனின் மகன் வந்து சாப்பிட்டவன்,துரைசிங்கம் இன்னும் வரவில்லை, அவன் யாருடனாவது பிரச்சனைப்பட்டுக் கொண்டிருப்பான். எப்படிச் சொன்னாலும் திருந்துறானில்லை’’ என்றாள் ஆரணி.

“முற்பிறப்பில் செய்த பாவம் காரணமாக அவர்கள் முடமாகவும், குருடாகவும், அனாதைகளாகவும், மூடர்களாகவும் பிறந்து விட்டனர். அவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டியது எமது கடமை. துரைசிங்கத்தைத் தான் திருத்த முடியவில்லை. முயன்றால் முடியாதது எதுவுமில்லை” என்றார் ஆனந்தராசா.

**37. அழப்போகான் அஞ்சான் அலறினால் கேளான்**
**எழப்போகான் ஈடற்றார் என்றும் - தொழப்போகான்**
**என்னேஇக் காலன்ஈடு ஓரான் தவமுயலான்**
**கொன்னே இருத்தல் குறை.**

“யமன் உயிரைக் கவர வரும் போது, அழுதாலும் விட்டு விட்டுப் போக மாட்டானன். யாருக்கும் பயப்பட்டும் செல்ல மாட்டான். அலறிக் கூக்குரலிட்டாலும் செவிமடுக்க மாட்டான். வெருட்டினாலும் அஞ்ச மாட்டான் எளியவர் என்றாலும் விடமாட்டான், வணங்கித் தொழுதாலும் விடமாட்டான். இதை உணராது காலங் கழிப்பது தவறாகும்”

“நாராயணனின் மனைவி பத்மாவதி ஆனந்தராசாவின் வீட்டுக்கு வந்து அழுதாள், “நீங்கள் பெரியவர், ஒழுக்க சீலர், நல்ல குடியிற் பிறந்தவர், அதனால் தீயவர்களுக்கும் உதவி செய்கிறீர்கள்,அதைத் தீயவர்கள் பலவீனமாகக் கருதுகின்றனர். எனது கணவரைப் பிணை எடுக்க யாரும் முன் வராததனால் உங்களை நம்பி வந்தேன். நீங்கள் பிணை எடுத்து விட்டீர்கள். அதை மறந்து எனது கணவர் உங்களை வாய்க்கு வந்தபடி ஏசுவதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் குடித்துக் குடித்து பெரும் நோயாளியான பின்பும் தனது பிற்காலத்தை உணர்கிறாரில்லை. யமன் வந்தால் அவன் நாம் செய்த புண்ணியங்களுக்காக விடுவானா? இவர் யமனுக்கும் அஞ்சாதவர். மனித வாழ்வில் நல்லவற்றைச் செய்ய வேண்டுமென்று பலர் விரும்புவதில்லை. யமன் யாரையும் விடமாட்டான். அழுதாலும் விடான், கெஞ்சினாலும் விடான், வெருட்டினாலும் விடான், சிபாரிசு செய்தாலும் விடான், சிவனின் நண்பனென்றாலும் விடான். அதனால் யமன் வருமுன் மறுமையில் இன்பம் அனுபவிக்க நல்லவற்றைச் செய்ய வேண்டுமென்றும் என்று விரும்புகிறார் இல்லை. அதை நினைக்க மது விடுவதில்லை” என்று அழுதாள் பத்மாவதி.

**38. எழுத்தினால் நீங்காதுஎண் ணால் ஒழியாது ஏத்தி**
**வழுத்தினால் மாறாது மாண்ட – ஒழுக்கினால்**
**நேராமை சால உணர்வார் பெருந்தவம்**
**போகாமை சாலப்புலை.**

“அறநூல்களைக் கற்கும் வழக்கத்திலிருந்து நீங்காமலும், எதையும் திட்டமிட்டுச் செய்வதை விடாமலும், எவரையும் உயர்வாக எண்ணிப் போற்றும் தன்மையிலிருந்து மாறாமலும், சிறந்த ஒழுக்கங்களில் இருந்தும் வழுவாதவர் தவமுயற்சியில் ஈடுபடாமல் இருப்பது இழிவாகும்.”

“நகுலன் ,கோயிலுக்கு வந்த போது சிறுத்தொண்டன் அவனது கோலத்தைக் கண்டு திகைத்துப் போனார். வழக்கமாக அவர் தீட்சை கேட்டமையால் நீற்ரை உடலெங்கும் திரிபுண்டரமாக தரித்திருப்பார். அதுபோலத் தான் நகுலனும் தரித்திருந்தான். அன்று அவன் காவி உடை அணிந்திருந்தான். கழுத்தில் உருத்திராட்ச மாலை அணிந்திருந்தான். அதைச் சிறுத்தொண்டன் எதிர்பார்க்கவில்லை.எனினும் அவர் அதைப் பெரிதுபடுத்தாது நகுலனின் அருகில் சென்றார்.

‘‘அறநூல்களைக் கற்கும் வழக்கத்திலிருந்து நீங்காதவர்கள் எதையும் நிதானமாகக் கணக்கிட்டுச் செய்பவர்கள், எல்லோரையும் சமமாக மதிப்பவர்கள், ஒழுக்கமாக வாழ்ந்து பிறரை மதிப்பவர்கள், சான்றோரைப் போற்றி வணங்குபவர்கள் கட்டாயம் தவம் செய்தல் வேண்டும்.அப்படிச் செய்யாமல் இருப்பது பெருந் தவறாகும்.தீயவர்கள் கடவுளையே ஒழுக்கமாக வணங்க மாட்டார்கள். பின் எப்படி அவர்களால் தவம் செய்ய முடியும்? ஆனால் நல்லொழுக்கம் மிக்க கற்றவர்கள் தம் வாழ்வு பயன் பெறத் தவம் செய்தல்

வேண்டும். அதனால் தான் நான் தவம் செய்ய விரும்பினேன்” என்றான் நகுலன்.

**39. சாவது எளிது, அரிது சான்றாண்மை நல்லது**
**மேவது எளிது ,அரிது மெய்போற்றல் - ஆவதன்கண்**
**சேறல் எளிது நிலை அரிது தெள்ளியாய்**
**வேறல் எளிது , அரிது சொல்**

“அறிவுள்ளவர்க்கு உயிர் விடுதல் எளிது, கல்வி, கேள்வி, ஒழுக்கங்களில் நிறைவு பெறுவது அரிது. கற்பது எளிது. கற்றபடி வாழ்வது அரிது .அதுபோலத் துறவறத்தை மேற்கொள்வது எளிது. ஆனால் அதில் குற்றமில்லாது வாழ்வது அரிது. ஐம்பொறிகளை வென்று சான்றோராவோம் என்பது எளிது. ஐம்பொறிகளை வெற்றி கொண்டு பற்றற்றவராக வாழ்வது அரிது.’’

‘‘மகனே, எதையும் சொல்லலாம்,ஆனால் செய்வது கடினம். துறவென்பது கடினமான ஒரு முயற்சி . அதுவும் இளமையில் துறவு மேற்க்கொள்வது பெரும் கஷ்டமானது. அறிஞர்களுக்கு உயிர் விடுவது எளிது. ஆனால் கற்க வேண்டிய நூல்களையெல்லாம் கற்று அதன்படி வாழ்வது அரிது. அறப்படி வாழ்வோம் என்பது எளிது.வாழ்ந்து காட்டுவது அரிது. அது போல என்றும் இன்பத்தைத் தரும் துறவை ஏற்பது எளிது.துறவு வாழ்க்கையில் குற்றங்கள் ஏற்படாமல்,ஐம்பொறிகளையும் அடக்கிப் பற்றற்று இறைவனைப் பிரார்த்திப்பது அரிது. ஆகையால் உனது

முடிவை உறுதியாக எடுத்துக் கொள். ஒரு செயலைச் செய்யத் தொடங்கி விட்டு அதை இடையில் கைவிட்டால் பெரும் துன்பங்கள் உண்டாகும். பலரும் பழிப்பர்.துறவு புனிதமானது ,ஆனால் துறவிகளையும் இல் வாழ்பவர் தான் காப்பாற்றுதல் வேண்டும்.இல்லற அறங்களைப் போற்றித் துறவியாகவும் வாழலாம். நான் உனது மனதை மாற்றச் சொல்லவில்லை.உலகின் இயல்பைச் சொன்னேன்" என்றார் சிறுத்தொண்டன்.

**40. உலையாமை உற்றதற்கு ஓடி உயிரை**
**அலையாமை ஐயப்படாமை – நிலையாமை**
**தீர்க்கும்வாய் தேர்ந்தபசி உண்டு நீக்குவான்**
**நோக்கும்வாய் விண்ணின் உயர்வு.**

"தனக்கு நேர்ந்த துன்பங்களை அலைந்து தீர்க்காமையும், அவற்றைப் பொறுத்துக் கொள்ள மற்றவர்களை நாடாமையும், தனக்குப் பிறரால் துன்பமுண்டாகிறது என்று எண்ணாமையும் ,நிலையில்லாத வாழ்விலிருந்து நீங்கி நிலையான இன்ப வாழ்வை அடைவதற்கான வழிவகைகளைத் தேர்ந்தெடுத்து ஐம்பொறிகளை அடக்கி வாழ்பவன். விண்ணுலகம் அடைவான்"

"ஐயா, துறவு சிறப்பானதென்றாலும் அதை முறைப்படி செய்வோர் குறைவு, ஏனென்றால் அது மிகக் கடினமானது .தனக்கு நேரும் துன்பங்களைத் தீர்ப்பதற்காகக் குடும்பத்தவர்கள் அலைந்து திரிவார்கள். அவற்றைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். அவற்றைத் தீர்க்கப்

பலரை நாடுவர்கள். தனக்கு வரும் துன்பங்கள் மற்றவர்களாலும்,கடவுளாலும் வருகிறது என்று குற்றஞ் சாட்டுவார்கள். ஐம்புலன்களை அடக்காது அலைய விட்டுத் துன்பங்கள் பலவற்றைத் தேடிக் கொள்வார்கள். இவை துறவிக்கு ஏற்பட்டால் அவன் அவற்றைத் தீர்க்க முயலமாட்டான்.அதை அனுபவித்துக் கழித்து விட்டால் மறுமையில் பேரின்பம் பெறலாம் என்று அவனுக்குத் தெரியும். இவ் உலகத்தைத் துன்பம் தரும் பேயாகவே நான் கருதுகிறேன். அதனால் தான் துறவை மேற்க்கொண்டேன். துன்பங்கள் இயல்பானவை . அவற்றை ஏற்று இன்பமாகக் கழித்து விட்டால் பேரின்பம் வரும்.அதுவும் என்றும் அகலாத பேரின்பம். யாவற்றையும் தெரிந்த பின்பே துறவை நான் ஏற்றுள்ளமையால் கலங்க மாட்டேன்." என்றான் நகுலன்.

41. **குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால் பொய்**
**மறுகான் பிறர்பொருள் வெளவான் - இறுகானாய்**
**ஈடுஅற்றவர்க்கு ஈவான் ஆயின் நெறிநூல்கள்**
**பாடு இறப்ப பன்னும் இடத்து.**

"கீழ் மக்களோடு நட்புக் கொள்ளாதவன், மாமிசம் உண்ணாதவன், பொய் சொல்லாதவன், திருடாதவன், தனது செல்வத்தில் பற்றில்லாதவன், மகிழ்வுடன் தனது பொருட்களைக் கொடுத்துதவுபவன் அறநூல்களைப் படிக்கத் தேவையில்லை."

“நகுலனது கைப்பைக்குள் ஏராளமான அறநூல்கள் இருந்தன. அவன் நேரமுள்ள போது அவற்றில் ஒன்றை எடுத்துப் படிப்பான். அதைக் கண்ட நமசிவாயம் சுவாமிகள் சொன்னார், “மகனே, துறவை மேற்க்கொள்பவன் ,கீழான செயல்களை செய்பவர்களுடன் சேர மாட்டான். பிறிதோர் இறந்த உயிரின் உடலை உண்ண மாட்டான். திருட மாட்டான். தனது உடலிலோ, பொருளிலோ பற்றுக் கொள்ள மாட்டான். கேட்பவர்களுக்கெல்லாம் இருக்கும் பொருளை அள்ளிக் கொடுத்து விட்டுப் பற்றின்றிப் இருப்பான். அவன் அறநூல்களை வாசிக்க வேண்டியதில்லை. அதனால் பயனுமில்லை. அதனால் அறநூல்களை வாசிப்பதை விட்டுவிட்டு ஆன்மாவின் விடுதலைக்கான காரியங்களில் ஈடுபடு.அறநூல்கள் யாவும் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்கின்றன. கற்பதை விளங்கிக் கற்று விட்டல் திரும்பவும் கற்க வேண்டிய தேவையிராது.கற்றபடி நடத்தலே அதன்பின் செய்ய வேண்டியது. நீ கற்றவன் .கற்றதைத் திரும்பத் திரும்பக் கற்பதால் உனது மனதில் ஏதாவது மாற்றம் உண்டாகிறதா? சுவையான உணவுகளை உண்ணும் சாதாரண மனிதனைப் போல இராதே” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**42. கொல்லான் உடன்படான் கொல்வார் இனம்சேரான்**
**புல்லான் பிறப்பான் புலால் மயங்கல் - செல்லான்**
**குடிப்படுத்துக் கூழ்ஈந்தான் கொல்யானை ஏறி**
**அடிப்படுப்பான் மண்ஆண்டு அரசு.**

“ஓர் உயிரைக் கொல்லாமல்,பிறர் கொல்வதற்கு ஆதரவு அளிக்காமல், கொலைகாரர்களுடன் சேராமல், அன்னியருடன் நட்புக் கொள்ளாமல், ஊன் உண்ணாமல், வறுமையால் வாழும் குடும்பத்தவர்களுக்கு உதவிகள் செய்து வாழ்பவன் மண்ணுலகை ஆண்டபின், கொல்லும் தன்மையுள்ள யானை மீதேறி விண்ணுலகை ஆளச் செல்வான்”

“மகனே, உயிரைக் கொலை செய்வதும், உயிர்க் கொலைக்கு உடந்தையாக இருப்பதும், கொலை செய்வோரோடு சேர்ந்து திரிவதும் , அன்னியரோடு நட்புக் கொள்வதும், ஊன் உண்பதும், பிறரைக் கொ-டுமைப்படுத்துவதும் மகாபாவங்கள் . இவற்றைச் செய்வோர் அடுக்கடுக்காகப் பிறவிகளை எடுத்துத் துன்பப்படுவர். இவற்றைச் செய்யாதவர்கள் புண்ணியவான்கள். அவர்களை மண்ணுலகில் உள்ள உயிர்கள் யாவும் போற்றித் தொழும். அவர்கள் அன்பால் எல்லா உயிர்களையும் வசீகரித்து ஆட்சி செய்வர்.அவர்களுக்கு மண்ணுலகில் எந்தக் குறையும் ஏற்பட மாட்டாது. விண்ணகத்தில் வாழும் தேவர்களைப் போல மண்ணுலகத்தில் சகல சிறப்புக்களையும் பெற்று புகழுடன் வாழ்வர். பின் அவர்கள் விண்ணுலகை ஆள்வதற்காக கொலை செய்யும் யானை மீதேறி விண்ணுலகம் செல்வர். கொலை செய்யும் யானை அவர்கள் விண்ணுலகம் செல்லும் போது உள்ள தடை-களை அகற்றி அவர்களைக் கொண்டு சென்று சேர்க்கும்.

அதனால் துறவை வலிமையாக மேற்கொள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**43. சூதுஉவவான் பேரான் கலாவுஉரையான் யார்திறத்தும்**
**வாதுஉலவான் மாதரர் சொல்தேறான் - காதுதாழ்**
**வான்மகர வார்குழையாய் மாதவர்க்கு ஊன்ஈந்தான்**
**தான்மகர வாய்மாடத் தான்.**

“ஒருவன் சூதாடுதலை விரும்பாமலும், ஒழுக்கத்திலிருந்து வழுவாமலும், பிறரின் மனதை வருத்தாமலும், யாரையும் ஏமாற்றாமலும், மயக்கமான இனிய சொற்களைப் பேசும் மகளிரின் மயக்கு வார்த்தைகளுக்கு மயங்காமலும், பெருந் தவமாற்றும் துறவிகளுக்கு உணவு கொடுத்தால், அவன் முதலை போன்று உருவமைக்கப்பட்ட மாளிகையில் சீரோடும் சிறப்போடும் வாழ்வான்”

“சிறுத்தொண்டன் நமசிவாயம் சுவாமியாருக்கும் நகுலனுக்கும் மதிய உணவு கொண்டு வந்தார். நமசிவாயம் சுவாமிகள் மகிழ்ச்சியுடன் சிரித்து விட்டுச் சொன்னார், “மகனே, துறவிகள் எல்லோரிடமும் உணவு வாங்கி உண்ணக் கூடாது. சூதாடுபவன், பொய் சொல்பவன், ஒழுக்கமில்லாதவன்,, பிறரைத் துன்புறுத்துபவன், திருடுபவன், மயக்கமான இன்பத்தை அளிக்கும் இனிமையான பேச்சினைப் பேசும் மகளிரின் இன்பத்தை விரும்புபவன் ஆகிய இவர்கள் தீராத பழியைச் சுமப்பவர்கள். இவர்களிடம் உணவையல்ல அவர்களின்

பாவத்தையே வாங்கி உண்ண நேரிடும். இவையெல்லாம் இல்லாத புண்ணியவான்களிடம் தான் உணவைப் பெற்று உண்ணுதல் வேண்டும். அதனால் தான் நான் தங்களிடம் கேட்டு வாங்கியுண்கிறேன். ஒழுக்கம் தவறாது வாழும் நீங்கள் தரும் உணவை உண்டால் எனக்குப் புண்ணியம் உண்டாகும். நீங்களும் முதலை போன்ற அகன்ற நீண்ட வாயிலை உடைய பெரிய மாளிகையில் வாழ்வீர்கள். அது உண்மையென்பது உங்களைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன்." என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**44. பொய்யான், பொய் மேவான் புலால் உண்ணான் யாவரையும்**
**வையான் வழிசீத்து வால்அடிசில் - நையாதே**
**ஈத்துஉண்பான் ஆகும் இருங்கடல்சூழ் மண்ணரசாய்ப்**
**பாத்துஉண்பான் ஏத்துஉண்பான் பாடு.**

"பொய் பேசாமல், பிறர் கூறும் பொய்க்கு உடன்படாமல்,மாமிசம் உண்ணாமல், யாரையும் பழி- ிந்துரைக்காமல் , தீய வழியில் வாழ்வோரை நல்வழிப்படுத்தியும் ,நல்ல சுவையான சத்து மிக்க தூய உணவை விருந்தினருக்குக் கொடுத்து உண்டு வாழ்பவன் மண்ணுலகத்திற்கு அரசனாகி குறைவின்றிச் சிறப்புக்கள் பலவும் பெற்று புகழுடன் மேன்மையாக வாழ்வான்"

"மகனே, பலர் துறவிகளைப் பரதேசிகள் என்றே நினைக்கின்றனர். அத்துடன் சுலபமாக வாழவும் , பணம் சம்பாதிக்கவும், சகல போகங்களையும் அனுபவிக்கவும் தான் துறவி வேடம் பூண்கிறார்கள் என்று மக்கள்

நினைக்கிறார்கள். அவர்கள் நினைப்பதிலும் உண்மை இருக்கிறது.பல துறவிகள் ஆன மேம்பாட்டை விடுத்து உடலின் இன்பத்திற்காகவும் துறவி வேடமிருக்கின்றனர். மனிதர்கள் தமக்குப் புண்ணியம் சேர வேண்டுமென்பதற்காகத் தான தர்மங்களையும் பலர் தமது சுயநலத்திற்காகவே செய்கின்றனர். தாம் செய்யும் தீமை-களைத் தர்மங்கள் அழிக்கும் எனப் பலர் நினைக்கின்றனர். ஆனால் நீ அப்படியானவன் அல்ல. மிகுந்த ஒழுக்கத்துடன் வாழும் புண்ணியவான். எந்தத் துறையிலும் சிக்காதவன். அதனால் தான் நீ உண்ணும் தூய்மையான சத்துள்ள உணவை மற்றவர்களுக்குக் கொடுக்கிறாய். அதனால் தான் பூமியில் உள்ள சுகபோகங்கள் அனைத்தையும் அனுபவிக்கின்றாய்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்

**45. இழுக்கான் இயல்நெறி இன்னாத வெ·.கான்**
**வழுக்கான் மனைபொருள் வெளவான் -ஒழுக்கத்தால்**
**செல்வான் செயிர்இல்ஊண் ஈவான் அரசாண்டு**
**வெல்வான் விடுப்பான் விரைந்து.**

"இழுக்கான செயல்களைச் செய்யாமலும், தீயவற்றை எண்ணாமலும், செய்யாமலும், இல்லற ஒழுக்கத்திலிருந்து வழுவாமலும், மற்றவர்களின் பொருட்களைக் கவராமலும் நல்லபடி ஒழுக்கமாக வாழ்ந்தால் அவனைப் பகைவர்களால் வெல்ல முடியாது"

“ மகனே, குடிக்கு இழுக்கு வரும் செயல்களில் ஈடுபடாமலும், விரத வழிகளில் இருந்து நீங்காமலும், தீயவற்றை எண்ணாமலும், அவற்றைச் செய்யாமலும், இல் வாழ்க்கையைப் பெரியோர் கூறிய நல்லுரைப்படி வழுவா-மலும் , மற்றவர்களின் பொருளைக் கவராமலும் வாழ்ந்தால், அவன் அரசனாவான். அவனைப் பகைவர்களால் வெல்ல முடியாதென்று அறநூல்கள் கூறுகின்றன. ஊரில் பலர் வாழ்கிறார்கள். சிலர்தான் அறநூல்களில் கூறியபடி ஒழுக்கமாக வாழ்கிறார்கள். அப்படி வாழ்பவர்களைத் தான் மக்கள் விரும்புகிறார்கள். ஓர் இல் வாழ்வான் தனது சுற்றத்தினரை அன்போடு நேசித்தால் அவர்களும் அன்போடு நேசிப்பர். ஒழுக்கமில்லாத மனிதர்கள் வரம்பில்லாத வயலைப் போன்றவர்கள். பெய்யும் மழை நீர் வரம்பில்லா விட்டால் வெளியே சென்று விடுவதைப் போல, ஒழுக்கமில்லாதவர்களின் செல்வமும் சென்று விடும் என்பதை ஒழுக்கமில்லாதவர்கள் உணர்வதில்லை. ஒழுக்கமில்லாதவர்கள் ஒழுக்கமாக வாழ்பவர்களையும் சந்தேகிப்பார்களே தவிர உணர்ந்து நடக்க மாட்டார்கள்” என்றா நமசிவாயம் சுவாமிகள்.

**46. களியான், கள் உண்ணான் களிப்பாரைக் காணான்**
**ஒளியான் விருந்திற்கு உலையான் - எளியாரை**
**எள்ளான் ஈத்து உண்பானேல் ஏதம்இல் மண்ஆண்டு**
**கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து.**

“செருக்கடையாமலும், கள்ளருந்தாமலும், கள்ளருந்துவோரைக் காணாமலும், விருந்தினர்க்குப்

பொருளை மறைத்து இல்லை என்ற கூறாமலும் ,ஒழுக்கத்திலிருந்து வழுவாமலும், வறியவரை அவமதிக்காமலும், தான் பெற்ற உணவை பங்கிட்டுக் கொடுத்துத் தானும் உண்டு வாழ்ந்தானேயானால் அவன் அரசனைப் போன்ற சிறப்புக்களைப் பெறுவான்"

"நமசிவாயம் சுவாமியார் மடத்தில் தினமும் அருளுரை வழங்குவார். அன்று பௌர்ணமி, மக்கள் கூட்டமாகக் கூடியிருந்தனர். அன்பானவர்களே, ஒரு நல்ல குணம் இருந்தால் பல நல்ல குணங்கள் இருக்கும். அதுபோல ஒரு தீய குணம் இருந்தால் பல நல்ல குணங்கள் வெளியேறி விடும். நாவலூரிலே கந்தையா என்றொரு பெரியவர் இருந்தார். அவருக்கு மூன்று ஆண் பிள்ளைகள். அவர் அவர்களுக்கு குணாளன், தயாளன், குருபரன் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார். குணாளன் மூத்தவன். வணிகன். நீதியாகவும் ஒழுக்கமாகவும் தொழில் செய்பவன். அவன் மது அருந்துவதில்லை. மது அருந்துபவர்களோடு நட்புக் கொண்டதும் இல்லை. ஏழைகளுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்வான். அவனைச் சிவலிங்கத்திற்குப் பிடிக்கும். சிவலிங்கம் ஒழுக்கசீலர். மது அருந்ாதவர். மது அருந்துபவர்களைக் கண்டால் வெறுப்படைபவர். பெரும் தனவந்தன். வர்த்தகன். குணாளன் சிறு வர்த்தக நிலையம் ஒன்றை அமைத்திருந்தான். அவன் சிவலிங்கத்திடமே பொருட்களைப் பெறுவான். சிவலிங்கம் அவனது ஒழுக்கத்தை விரும்பி அவனுக்குக் கடனாகப் பொருட்களைக் கொடுப்பார். இப்போ குணாளன் பெரும்

வர்த்தகன். அரசனைப் போல வாழ்கிறான். ஒழுக்கமுள்ளவர்களைத் தேடிச் செல்வம் வரும். ஆகையால் கள்ளருந்தாது, ஏழைகளுக்குதவி, ஒழுக்கமாக வாழுங்கள் . நீங்கள் எல்லோரும் அரச வாழ்வைப் பெறுவீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**47. பெரியார்சொல் பேணிப் பிறழாது நின்று**
**பரியா அடியார்ப் பறியான் - கரியார்சொல்**
**தேறான் இறையான் தெளிந்துஅடிசில் ஈந்து உண்பான்**
**மாறான், மண் ஆளுமாம் மற்று.**

"பெரியோரின் சொல்லைத் தட்டாது கேட்டு நடப்பவன். தனது வேலையாட்கள் மீது பாரபட்சம் காட்டாமலும் , அவர்களது மனம் கோணாத படியும் நடப்பவன், தீயவர்களுடன் தொடர்பு கொள்ளாதவன், இருவினைகளான இன்ப துன்பங்களை உணர்ந்து, விருந்தினர்க்கு உணவு கொடுத்து தானும் உண்பவன் இடையூறுகள் எதுவும் இன்றிப் பூமி முழுவதையும் ஆளும் பேற்றைப் பெறுவான்."

"குணாளனின் பிறந்த தினம் அன்று. அவன் தனது பிறந்த தினத்தன்று கோவிலுக்குச் சென்று பூசை செய்வான். மடத்தில் ஏழைகளுக்கு உணவும், உடையும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்குவான். அத்துடன் பிறந்த நாள் விழா முடிந்து விடும். அன்று இரவு எட்டு மணிக்குச் சிவலிங்கம் வந்தார். கூடச் சில பிரமுகர்களும் வந்தனர். ஏற்கனவே சிலர் அங்கிருந்தனர்."

“சிவலிங்கம் குணாளனை வாழ்த்தினார், “குணா உனது ஒழுக்கமும் , கடவுள் பக்தியும் , பெரியவர்களை மதிக்கும் பண்பும் ,பெரியோர்கள் கூறியபடி வாழும் பண்பும், தனது வேலையாட்களின் மனதைக் குழப்பாமல் அவர்களை மதிக்கும் பண்பும், தீயவர்களுடன் சேராமல் வாழும் பண்பும், ஏழைகளுக்கு கொடுத்துதவும் பண்பும் தான் உன்னை அரசனைப் போல வாழச் செய்கிறது. இதே போல என்றும் வாழ்ந்தாயேயானால் இந்தப் பூமி முழுவதையும் ஆளும் பேற்றைப் பெறுவாய்” என்றார்.

**48. வேற்றுஅரவம் சேரான் விருந்துஒளியான் தன்இல்லுள்**
**சோற்றுஅரவம் சொல்லிஉண் பானாயின் மாற்றுஅரவம்**
**கேளான் கிளைஓம்பின் கேடுஇல் அரசனாய்**
**வாளால் மண் ஆண்டு வரும்.**

“பயனில்லாத சொற்களைப் பேசாதவனாகவும், விருந்தினர்க்குப் பொருளை மறைக்காமல் கொடுப்பவனாகவும், வறியவர்களை அழைத்து வந்து அவர்களுக்கு உணவிட்ட பின் உண்பவனாகவும்,பகைவரின் வன் சொற்களை மதிக்காதவனாகவும், தனது உறவினர்களைப் பாதுகாப்பவனாகவும் வாழ்வானேயானால் அவன் வீரத்துடன் உலகை ஆள்வான்.”

“குணாளனைப் போன்றதொரு நல்ல மனிதனை நான் காணவில்லை. அவன் எனது உறவினன். நான் பரம ஏழை. அவனிடம் நான் உதவி கோரிச் சென்ற போது என்னை

மகிழ்வுடன் வரவேற்று ஆசனத்தில் இருத்தி நான் கேட்டவற்றை மகிழ்வுடன் தந்து, உணவும் தந்து என்னை உற்சாகப்படுத்தியதால் தான் நான் இன்று பெருந் தனவந்தனாக மாறினேன். குணாளன் தினமும் ஏழைகளைத் தனது வீட்டுக்கு அழைத்து வந்து அவர்களுக்கு உணவளித்த பின்பே தான் உண்பான். பகைவர்களின் தீய வார்த்தைகளைச் செவிமடுக்க மாட்டான். தனது உறவினர்களைத் தன் கண்களைப் போலப் பாதுகாப்பான். அதனால் தான் உறவினர்கள் எல்லோரும் முன்னேறினர். அதனால் இப்போ எமது சமூகத்தவரின் அரசனாகக் குணாளன் விளங்குகின்றான்" என்று கூறித் தனது கைகளால் குணாளனின் பாதங்களைத் தொட்டு வணங்கினான் அரவிந்தன் என்ற வணிகன்.

**49. யானை குதிரை, பொன் கன்னியே ஆனிரையோடு**
**ஏனை ஒழிந்த இவைஎல்லாம் - ஆன்நெய்யால்**
**எண்ணனாய் மாதவர்க்கு ஊண்ஈந்தான் வைசிர**
**வண்ணனாய் வாழ்வான் வகுத்து.**

"யானை, குதிரை, பொன், கன்னிப் பெண்கள், பசுக் கூட்டம் எனத் தானமாகக் கொடுக்காமல் தவ நெறியை நெஞ்சில் நிறுத்தி வாழும் பெருமை மிக்க துறவிகளுக்குப் பசுவின் நெய்யோடு உணவளிப்பவர் குபேரனைப் போல வாழ்வர்"

"தவசிகள் தானமாக எதையும் கொடுப்பதில்லை. குபேரனைப் போன்ற வாழ்வு பெற்றவர்கள் யானை, குதிரை, பொன், கன்னிப் பெண்கள், பசுக்கள் என்பவற்றைத்

தானமாகக் கொடுப்பதோடு நில்லாது தானம் கொடுக்காது கடவுளை அடையத் தவத்தை மட்டும் செய்யும் துறவிகளுக்குச் சுவை மிகுந்த பசு நெய்யுடன் உணவு கொடுப்பர். துறவிகளுக்குப் பசு நெய்யுடன் உணவு கொடுத்தால் அவர்கள் குபேரனைப் போன்ற வாழ்வைப் பெறுவர் என்று குணாளன் எனக்குக் கூறுவான். அதை நான் நம்புவதில்லை. எனினும் அடிக்கடி குணாளன் துறவிகளுக்குப் பசு நெய்யுடன் உணவு கொடுக்குமாறு சொல்வான். அடிக்கடி குணாளன் அப்படிச் சொல்வதால் நான் துறவிகளை எனது வீட்டுக்கு அழைத்து வந்து பசு நெய்யுடன் உணவு கொடுப்பேன். அப்படிக் கொடுத்த பின் எனது வியாபாரத்தில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. அதனால் துறவிகளுக்கு அடிக்கடி பசு நெய்யுடன் உணவு கொடுத்தேன். அதனால் பெரும் கோடீஸ்வரனாகி விட்டேன்.குணாளனும் பசு நெய்யுடன் துறவிகளுக்கு உணவு கொடுப்பதால் பெரும் கோடீஸ்வரனாகி விட்டான். என்றார் சிவலிங்கம் ,அதைக் கேட்டுக் கொண்டிருந்தோர் தாமும் பசு நெய்யுடன் துறவிகளுக்கு உணவு கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்தனர்.

**50. எள்ளே பருத்தியே எண்ணெய் உடுத்தாடை**
**வள்ளே துணியே இவற்றொடு – கொள்ளன**
**அன்புற்று அசனம் கொடுத்தான் துணையினோடு**
**இன்புற்று வாழ்வான் இயைந்து.**

“எள்ளும், பருத்தி உடையும், எண்ணெயும், படுக்கையும் ,போர்வையும், உணவும் கொடுத்து வாழ்பவன் தன் மனைவியோடு இன்பமாக வாழ்வான்”

“ஒரு துறவி வீட்டுக்கு வந்தால், அவரை அன்போடு அழைத்து வந்து ஆசனத்தில் இருத்தி அவருக்கு அன்புடன் எள் கலந்த பண்டம் கொடுக்க வேண்டும். அவர் அதை உண்டதும் பருத்தியினாலான பூணூல் கொடுக்க வேண்டும். பின் அவர் நிராடுவதற்காக எண்ணெய் கொடுத்தல் வேண்டும். அவர் நீராடிய பின் கட்டிக் கொள்ள ஆடை கொடுத்தல் வேண்டும். அதன் பின் படுப்பதற்குப் பாயும், போர்வையும் உணவும் கொடுத்தல் வேண்டும். இவ்வாறு கொடுப்பவன் மனைவியோடு நல்வாழ்வு வாழ்வான்’’ என்று குணாளன் கூறுவான். நான் முன்பு அவன் கூறியபடி தவசிகளுக்கு பசு நெய்யுடன் உணவு கொடுத்துப் பெருந் தனவந்தனானவன். அதனால் குணாளன் சொல்வதை வேத வாக்காகக் கருதி அதன்படி நடப்பேன். நான் வியாபாரத்திற்காக அடிக்கடி வெளியூர் செல்வது எனது மனைவிக்குப் பிடிப்பதில்லை.அதனால் அவள் எந்நாளும் என்னுடன் அடிக்கடி சண்டை பிடிப்பாள். அதனால் குணாளன் கூறியபடி தவசிகளுக்கு எள் கலந்த பண்டமும் ,பூணூல், நீராட எண்ணெய், கட்டிக் கொள்ள ஆடை, படுக்கப் பாய், போர்க்கப் போர்வை, நெய்யுடன் உணவு ஆகியன கொடுத்தேன். இப்போது என் மனைவி என் மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளாள்.நான் வெளியூருக்குச் சென்றாலும் அவள் கோபிப்பதில்லை’’ என்றார் சிவலிங்கம்.

51. **உண்நீர் வளம்குளம் கூவல் வழிப்புரை**
**தண்ணீரை அம்பலம்தான் பாற்படுத்தான்- பண்நீர்**
**பாடலோடு ஆடல்பயின்றுயர் செல்வனாய்க்**
**கூடலொடு ஊடல்உளான் கூர்ந்து.**

“எவனொருவன் குளம், கிணறு, சத்திரங்கள், தண்ணீர்ப் பந்தல்கள், தங்கி இளைப்பாறும் மண்டபங்கள் முதல-ியவற்றை அமைத்துக் கொடுக்கிறானோ, அவன் தனவந்தனாகிப் பண்ணுடன் பாடும் பாடலையும் ,அழகான ஆடலையும் கேட்டு ரசித்து துணைவியின் ஊடலையும், கூடலையும் கொண்டவனாகப் பூமியில் மகிழ்வுடன் வாழ்வான்.

“ வாழ்க்கையை இன்பமாக ரசித்துச் சுவைத்து வாழ வேண்டுமானால் பெரியவர்கள் ,ஞானிகள் , ரிஷிகள் கூறியபடி வாழ வேண்டும்.நமசிவாயம் சுவாமிகள் தான் எனது குரு. நான் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் பயனுள்ள அறிவுரைகளைக் கூறுவார். சென்ற வாரம் நான் அவரைச் சந்தித்த போது அவர் சொன்னார், “மகனே, கோடை காலங்களில் குளங்கள் வற்றிவிடுகின்றன. அதனால் மக்களும் கால் நடைகளும் துன்பப்படுகின்றன. ஊரில் நல்ல தண்ணீர்க்கிணறு இல்லாமையால் மக்கள் நெடுந்தூரம் சென்று நீரைப் பெறுகின்றனர். நீர் நிலைகளை அமைத்துக் கொடுப்பவன் பெருவாழ்வு வாழ்வான். அதனால் குளத்தை ஆழமாக்கு,நன்நீாக் கிணறு ஒன்றை அமைத்துக் கொடு. வெளியூரவர் தங்க மடம் ஒன்று கட்டிக் கொடு.

சனசமூக நிலையம், நூலகம் என்பன இல்லை. அவற்றை அமைத்துக் கொடு. இவற்றை அமைத்துக் கொடுப்பவர்கள் இசையோடு கூடிய பாடலையும் நடனத்தையும் கேட்டு ரசிப்பர். மனைவியோடு ஊடியும் உறவாடியும் மகிழ்வர். இப் பேறு அவர்களுக்கு மறுமையிலும் கிடைக்கும்." என்றவர், அதனால் நான் அவற்றைச் செய்யப் போகிறேன்" என்றான் குணாளன்.

52. **இல்இழந்தார் கண்இழந்தார் ஈண்டிய செல்வம் இழந்தார்**
**நெல்இழந்தார் ஆனிரை தான் இழந்தார்க்கு –எல்உழந்து**
**பண்ணிஊண் ஈந்தவர் பல்யானை மன்னராய்**
**எண்ணிஊண் ஆர்வார் இயைந்து.**

" வீட்டை இழந்தவர், கண்ணிழந்தவர், செல்வத்தை இழந்தவர், நெல் இழந்தவர் , பசுக் கூட்டத்தை இழந்தவர் ஆகியோர்க்கு அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்துச் சேமித்த பணத்தைக் கொடுத்துதவுபவர்கள், பல யானைகளைக் கொண்ட பலமுள்ள அரசர்களென மக்களாற் போற்றப்படுவர். இவர்களும் இவர்களது குடும்பத்தினரும் சுவையான உணவுவகைகளை என்றும் உண்பர்."

" நமசிவாயம் சுவாமியார் அன்று மடத்தில் உரை நிகழ்த்தினார், "அடியார்களே, போரினால் வீட்டை இழந்து பலர் நிர்க்கதியாகியுள்ளனர். சிலர் தமது கண்களை இழந்துள்ளனர். பலர் தமது உறுப்புக்களை இழந்துள்ளனர்.

இன்னும் பலர் தமது சொத்துக்களை இழந்துள்ளனர். இன்னும் சிலர் தமது கால்நடைகளை இழந்துள்ளனர்.இவர்கள் எல்லாவற்றையும் இழந்து வாழ முடியாதவர்களாக அல்லற்படுகின்றனர். பண வசதியுள்ளவர்கள் மட்டுமன்றி சாதாரண மனிதர்களும் இவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்தல் வேண்டும். வீட்டை. உறுப்புக்களை, சொத்தை, கால்நடைகளை இழந்தவர்கள் வாழ வழி தெரியாது அனாதைகளாக்கப்பட்டுள்ளனர். தானம் செய்யப்படுபவை திரும்பவும் தானம் கொடுத்தவனை வந்தடையுமென்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அது உண்மை, எமது ஊரில் கொடுப்பவர்களைப் பாருங்கள். அவர்கள் பெருந் தனவந்தர்களாகிக் கொண்டிருக்கின்றனர். நீங்கள் நான் கூறியவர்களுக்குக் கொடுத்தால் பல ஆயிரம் போர் யானைகளைக் கொண்ட பேரசசனாகி விடுவீர்கள். அதனால் கொடுத்துதவுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**53. கடம்பட்டார் காப்புஇல்லார் கைத்து இல்லார் தம்கால்**
**முடம்பட்டார் மூத்தார், மூப்பு இல்லார்க்கு – உடம்பட்டு**
**உடையராய் இல்லுள்ஊண் ஈத்துஉண்பார் மண்மேல்**
**படையராய் வாழ்வார் பயின்று.**

"கடன்பட்டதால் வறியவரானோர், அனாதைகள் பொருள-ில்லாதவர், முடவர், வயோதிபர், பிள்ளைகள் இல்லாதவர்கள் ஆகியோருக்கு தம் வீட்டில்

உணவளிப்பவர்கள் பூமியில் படைகளுடன் கூடிய அரசர்கள் போல் வாழ்வார்கள்”

“இந்த உலகத்தைப் பாருங்கள், வசதி படைத்தோர் சிலராகவும், வசதிகள் இல்லாதோர் பலராகவும் உள்ளனர். இதற்குக் காரணம் அவர்களது வாழ்க்கை முறை. இறைக்க இறைக்க தண்ணீர் ஊறும். வெட்ட வெட்ட மரம் தழைக்கும். இது போலக் கொடுக்கக் கொடுக்கச் செல்வம் பெருகும். குணாளனின் சகோதரன் தயாளன். அவன் குணாளனைப் போலத் தனவந்தனல்ல. அவன் திருமணம் செய்யவில்லை.தான் உழைக்கும் பணம் முழுவதையும் அவன் அன்றே தானம் செய்து விடுவான். அனாதைகள், ஊனமுற்றவர்கள், வயோதிபர், ஏழைகள் ஆகியோருக்குக் கொடுத்து விடுவான். அவன் கடும் உழைப்பாளி, ஆனால் அவனது உழைப்பு. தானம் செய்யப் போதாதிருந்தது. தனக்குத் தானம் செய்யப் பொருள் அதிகமாக வரும் தொழில் தேவையெனப் பிரார்த்திப்பான். அன்று ஒரு அதிர்ஷ்ட இலாபச் சீட்டெடுத்தான். பரிசு கிடைத்தால் முழுப் பணத்தையும் தானம் செய்வேன் எனக் கடவுளுக்குக் கூறினான். அதிர்ஷ்ட இலாபச் சீட்டில் பல கோடி ரூபா கிடைத்தது. அதைக் கொண்டு பெரும் தொழில் ஆரம்பித்து தான தர்மம் செய்கிறான். அனாதைகள், ஊனமுற்றவர்கள், கடன்பட்டுக் கஷ்டப்படுவோர் பிள்ளைகளால் கவனிக்கப்படாதவர்களுக்கு உதவிகள் செய்தால் படை- டயுடன் கூடிய மன்னர்கள் போல வாழலாம்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**54. பார்ப்பார் பசித்தார் தவசிகள் பாலர்கள்**
**கார்ப்பார் தமையாதும் காப்பிலார்- தூப்பால**
**நிண்டாரால் எண்ணாது நீத்தவர் மண்ஆண்டு**
**பண்டாரம் பற்றவாழ் வார்.**

“அந்தணர் ,பசித்தவர், தவம் செய்பவர், குழந்தைகள், நோயுற்றதால் உறவினரால் வெறுக்கப்பட்டவர், ஆதரவு இல்லாதவர், தூய நெறியில் வாழும் அறநெறியாளர் ஆகியோரின் துன்பங்களை யாதொரு பயனையும் விரும்பாமல் தீர்த்து வைப்பவர்கள் , செல்வம் தம்மைச் சூழ்ந்திருக்க அரசரைப் போல இன்பமாக வாழ்வர்”

“ அந்தணர்கள், பசித்தவர்கள், தவம் செய்பவர்கள் , குழந்தைகள், நோயுற்றதால் உறவினர்களால் வெறுக்கப்பட்டவர்கள் , ஆதரவில்லாதவர்கள், சிவனடியார்கள் ஆகியோருக்குத் தயாளன் அன்னதான மடம் அமைத்துத் தினமும் மூன்று வேளையும் சுவையான உணவுகளைக் கொடுப்பான். அதனால் அவனது வியாபாரம் பெருகியது. கடல் வாணிபமும் செய்யத் தொடங்கினான். அதுவும் பெரும் இலாபத்தைக் கொடுத்தது. சிவலிங்கம் பெரும் தனவந்தன். அவர் தயாளனின் குணவியல்புகளையும் தொழில்களைச் செய்யும் பங்கையும் கண்டு மகிழ்ந்து தனது ஓரே ஒரு மகளான மீனாம்பாளைத் திருமணம் செய்து வைத்தார். அதன் பின் அவனது வியாபாரம் பெரும் முன்னேற்றம் அடைந்தது. அதற்குக் காரணம் தனது கொடைச் சிறப்பு என்று அவன் அடிக்கடி கூறுவான்.

அதனால் அடியார்களே, நீங்களும் தயாளனைப் போலப் பெருந் தனவந்தனாக வர விரும்பினால் அந்தணர்கள், அனாதைகள், நோயுற்றவர்கள், பசித்தவர்கள், குழந்தைகள் என்போருக்கு உணவிடுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

55. **ஈன்றார்ஈன் கால்தளர்வார் சூலார் குழவிகள்**
**மன்றார் வலியால் மயங்கினார்க்கு ஆனார் என்று**
**ஊண்ஈய்த்து உறுநோய் களைந்தார் பெருஞ்செல்வம்**
**காண்ஈய்த்து வாழ்வார் கலந்து.**

"குழந்தையைப் பெற்றவர், பிள்ளைகளைப் பெறும் போது நோயுற்றவர், கருவுற்றவர்க்கும், குழந்தைக்கும், மந்த புத்தி உள்ளவர்களுக்கும், வாத நோய் உள்ளவர்களுக்கும் ,உணர்வு மயங்கியவர்களுக்கும், உணவும் மருந்தும் கொடுத்து அவர்களின் நோயை நீக்கியவர்கள் பிறருக்கு அள்ளிக் கொடுக்கும் செல்வந்தராகி மனைவி பிள்ளைகளுடன் இன்புற்று வாழ்வர்."

" குழந்தையைப் பெற்ற அனாதைகள் ,பிள்ளைப் பேற்றின் போது கடுஞ் சுகவீனமுற்ற ஏழைகள், கருவுற்ற ஏழைகள், குழந்தைகள், மந்த புத்தியுள்ளவர்கள், வாத நோயால் பீடிக்கப்பட்டவர்கள் , உணர்வு மயங்கியவர்கள் ஆகியே-ாருக்கு உணவும் அவர்களின் நோய் தீர மருந்துக் கொடுப்பவர்கள் அள்ளி அள்ளிச் செல்வத்தை வழங்கக் கூடிய தனவந்தராவர் என்று தெரிந்து கொண்ட செல்லப்பா

ஒரு காப்பகம் அமைத்து மருத்துவரை நியமித்து மேற்ச் சொன்னவர்களுக்கு உணவும் மருத்துவமும் செய்து வந்தார். ஆரம்பத்தில் அவர் பெரும் செல்வந்தரல்லர். காலப் போக்கில் அவர் செய்த தான தர்மம் புண்ணியம் அவரைப் பெருந் தனவந்தராக்கியது. அதனால் முன்பு சிறிதாகச் செய்த மருத்துவ உதவியை இப்போ பெரிதாகச் செய்கிறார். சிறுதொகை கொடுத்தவர்களுக்குப் பெருந் தொகைப் பணம் கொடுக்கிறார். இதற்கெல்லாம் காரணம் மக்களின் வாழ்த்து. பிரசவம் என்பது மறுபிறப்பு. அதில் இறப்பவர் பலர்.அதனால் காத்தல் கடவுளாக மக்கள் செல்லப்பாவை எண்ணுகின்றனர். நீங்களும் கர்ப்பவதிகளுக்கு உதவி செய்து அள்ளி வழங்கும் தனவந்தராகுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**56. தளையாளர் தாப்பாளர் தாழ்ந்தவர் பெண்டிர்**
**உளையாளர் ஊண் ஒன்றும் இல்லார் - கிளைஞராய்**
**மாவலந்த நோக்கினாய் ஊன்ஈய்ந்தார் மாக்கடல் சூழ்**
**நாவலந்தீவு ஆள்வாரே நன்கு.**

"தண்டனை காரணமாக விலங்கிடப்பட்டோர் சிறையில் உள்ளோர், உயர் நிலையில் இருந்து தாழ்ந்தவர், பெண்கள், துன்பங்களால் வருந்துவோர், உணவின்றிப் பசியால் வாடுவோர் ஆகியோருக்கு உறவினர்களைப் போல அன்புடன் அனுசரித்து உதவுவோர் கடலால் சூழப் பெற்ற நாவலம் தீவினை ஆள்வர். நாவலம் தீவு இந்தியா என்று சொல்வாரும் உண்டு.

தண்டனை காரணமாக விலங்கிடப்பட்டவரையும் ,சிறையில் உள்ளவர்களையும் பார்ப்பது , பேசுவது மதிப்புக் குறைவு என்று எண்ணுவோரே பலர். அதனால் அவர்களுக்கு உதவுவோர் பெரும் பயனை அனுபவிப்பர். இது தவிர உயர் நிலையில் இருந்து தாழ்ந்தவர்களையும் பலர் மதிப்பதில்லை. அதற்குக் காரணம் அவர் உயர் நிலையில் இருக்கும் போது செய்த செயல்கள் சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அதனால் அவர்களை அவமானப்படுத்தவும், இகழவும், பழி வாங்கவுமே பலரும் முயல்வர். இப்படியானவரை மன்னித்து அவரைத் தமது உறவினராக எண்ணி அவருக்கு உதவும் மனப்பான்மை உள்ளவர் பெரிய மனது படைத்தவர். சிலர் அதனால் பெரும் பேறடைவர் என்று அறநூல்கள் பலவும் கூறுகின்றன. பெண்களுக்கு உதவப் போனாலும் பல்வேறு பிரச்சனைகள் தேடி வரும். அதனால் பெண்களுக்கு உதவுவோர் மிகவும் குறைவாகவே உள்ளனர். அப்படியிருக்கப் பெண்களுக்கு பற்றின்றி உதவுபவர் கடவுளைப் போன்றவராவார். உணவில்லாமல் துன்பப்படுவது எரியும் தணலுக்குள் இருப்பதைப் போன்றது. அதனால் உணவின்றி வருந்துவோருக்கு உதவி புரிவோர் மேல் நிலை அடைவர் என்பதை அறநூல்கள் மூலம் தெரிந்து கொண்ட செல்லப்பா விலங்கிடப்பட்டவர்களுக்கும் சிறையில் உள்ளவர்களுக்கும் தனது கௌரவத்தைப் பாராது அவர்களுடன் நெருங்கி உறவாடி உதவிகள் பலவும் செய்வார். அதுபோல உயர் நிலையில் இருந்து தாழ்ந்தவர்களுக்கும் உதவிகள் செய்வார். அந்த ஊரில் ஒரு காலத்தில் பெரும் தனவந்தனாக இருந்த தம்பிராசா

,செல்லப்பாவை மதிக்காது கீழ்த்தரமாகப் ஏசி அடிப்பான். இருந்தும் அவரை மன்னித்துத் தனது நெருங்கிய உறவினர் போலப் பாதுகாக்கிறார். அதனால் தான் அவர் கடலால் சூழப்பட்ட நாவலம் தீவை ஆளும் அரசன் போலச் சகல வசதிகளுடனும் ஆடம்பரமாக வாழ்கிறார்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**57. கரும்சிரங்கு வெண்தொழுநோய் கல்வளி காயும்**
**பெரும்சிரங்கு பேர்வயிற்றுத் தீயார்க்கு – அரும்சிரமம்**
**ஆற்றிஊண் ஈத்துஅவை தீர்த்தார் அரசராய்ப்**
**போற்றினான் உண்பார் புரந்து.**

"கருஞ்சிரங்கு, வெண்குட்ட நோய், கல்லடைப்பு ,வாதநோய், கழலை நோய், வயிற்றுப் பொருமல் ஆகிய இந்த ஆறு நோய்களால் வருந்துவோர்க்கு உணவளித்து, சிகிச்சை அளித்து, அந் நோயைப் போக்கியவர்கள் மன்னர்களாகி அனைவராலும் போற்றப்பட்டு உலகை ஆண்டு என்றும் இன்பமாக வாழ்வர்.

" நோய்கள் கொடியவை,அதிலும் தொழு நோய்கள் மிகக் கொடியவை, தொழுநோயாளரை உறவினர்கள் மட்டுமன்றி பெற்ற தாயும், உடன் பிறந்த சகோதரர்களும் மனைவி பிள்ளைகளுமே வெறுப்பர். அப்படியான தொழுநோயாளர்களை நீங்கள் பராமரிக்கிறீர்கள். எனது தாயும்,தந்தையும். மனைவியும், பிள்ளைகளும் எனக்குக் குட்டரோகம் வந்ததும் தனிமைப்படுத்தினர். நான் தங்கியிருக்கும் ஒதுக்குப் புறமான அறைக்கு யாரும்

வருவதில்லை. கதவைச் சிறிது .திறந்து உணவுத் தட்டை உள்ளே தட்டி விடுவர். எனது மகளுக்குத் திருமணம் நடைபெற்ற போது என்னை அறைக்குள் வைத்துப் பூட்டினர். அவர்கள் செய்ததை நான் பிழையென்று சொல்ல மாட்டேன். தொழுநோயாளர்கள் வெளியே நடமாடினால் அந்தக் கொடிய நோய் மற்றவர்களுக்கும் தொற்றி விடும். ஆனால் நீங்கள் அருவருக்காது பயப்படாது தொழுநோயாளர்களைத் தனிமைப்படுத்தி வைத்து உணவளித்து சிகிச்சை செய்து பராமரிக்கிறீர்கள். கடுஞ்சிரங்கு, வெண்குட்டம், கல்லடைப்பு ,வாதம் ,கழலை ,வயிற்றுப் பொருமல் ஆகிய நோய்கள் மிக மிகக் கொடியவை, அப்படியான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப் பெரும் பணம் தேவை. அப்படி இருந்தும் அதைப் பொருட்படுத்தாது எம்மைப் பெற்ற தாயை விடச் சிறப்பாக கவனிக்கிறீர்கள். நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் அரசனைப் போல சகல சௌபாக்கியங்களும் பெற்றுள்ளீர்கள். பணமுள்ளவர்களுக்கு தயாள குணமில்லை, ஆனால் உங்களுக்கு இருக்கு” என்று அழு-தான் தொழு நோயாளியான சிவசிதம்பரம்

**58. காமாடார் காமியார் கல்லார் இனம் சேரார்**
**ஆமாடார் ஆய்ந்தார் நெறிநின்று — தாமாடாது**
**ஏற்றாரை இன்புற ஈய்ந்தார்முன் இம்மையான்**
**மாற்றாரை மாற்றிவாழ் வார்**

“ முறையற்ற காமத்தை நுகராமல், பிறரின் பொருளை விரும்பாமல், கற்காதவருடன் நட்புக் கொள்ளாமல், நீரில்

விளையாடாமல், சான்றோர் நூல்களில் கூறியபடி வழுவாது வாழ்ந்து , தம்மை அடுத்து வாழ்பவர்களுக்கு மனமகிழ்வுடன் உதவுவோர் இப்பிறப்பில் பகைவனை நண்பராக்கி உயர்வோடு வாழ்வர்.

“ஐயா, உதவி செய்பவர்களில் சிலர் தமது சுய-நலத்திற்காகவும் உதவி செய்வர். திருநாவுக்கரசு வறியவன், அனாதைகள் ஏழைகளுக்குத் தங்குமிட வசதியும் உணவும் . உடையும் கொடுப்பதாக உலகிற்குக் காட்டி மக்களிடம் பொருட்களை வசூலித்து அதன் பெரும் பகுதியைத் தனது தேவைக்காகப் பயன்படுத்துகிறார். மடத்தில் உள்ளவர்களின் தேவைக்காகப் பிற நாட்டவர் ஒருவர் கொடுத்த வாகனத்தைத் தனது குடும்பத்தின் தேவைக்காகப் பயன்படுத்துகிறார்.அதை விடக் காமம் மிகுந்தவர் அவர். ஏழைப் பெண்களுக்கு உதவுவதாகக் கூறி அவர்களுடன் முறையற்ற காமத் தொடர்புகளை வைத்திருக்கிறார். அதனால் தான் மக்கள் திரண்டெழுந்து அவரைத் தாக்கினர். அனால் நீங்கள் அப்படியானவரல்லர், காமம் அணுவளவு கூட உங்கள் மனதில் இல்லை. பிறரிடம் பொருளைப் பெற்று நீங்கள் தான தர்மம் செய்வதில்லை. பலர் மடங்களில் வாழ்பவர்களுக்கென உலகெங்கும் பிரசாரம் செய்து பணத்தைப் பெற்று தமது காரியங்களைப் பார்க்கிறார்கள். இவர்கள் தம்மை எதிர்ப்பவர்களையும் விலை கொடுத்து வாங்கிவிடுவர். பிறரிடம் பெறும் பணத்தின் மூலம் தம்மை விளம்பரப்படுத்திப் புகழும் சேர்ப்பர்.இவை எதுவும் இல்லாது

நேர்மையாகவும் ஒழுக்கமாகவும் வாழும் உங்களுக்கு பகைவர்கள் இல்லை. தவறி யாரும் பகை கொண்டாலும் உங்களின் ஒழுக்கமான வாழ்வு அவர்களை நண்பராக்கி விடும்" என்றார் சிவசிதம்பரம்.

**59. வணங்கி வழிஒழுகி மாண்டார்சொல் கொண்டு**
**நுணங்கியநூல் நோக்கி நுழையா -இணங்கிய**
**பால்நோக்கி வாழ்வான் பழிஇல்லா மன்னனாய்**
**நூல்நோக்கி வாழ்வான் நுனித்து.**

"அனைவரையும் மதித்து, ஒழுக்கமாக வாழ்ந்து,பெரியோரின் சொற்களைக் கேட்டு அதன்படி ஒழுகி, ஒழுக்கக் கருத்துக்களைக் கூறும் அரியநூல்களைத் தேடிக் கற்று, அவை கூறும் நல்வழிப்படி வாழ்ந்து வருபவன் ஊரில் அரசனைப் போல மதிக்கப்படுவான்".

அன்று மடத்தில் மாணவர்களுக்கான வகுப்பு நடைபெற்றது. அதில் செல்லப்பா சொன்னார், "அன்பான எனது மாணவச் செல்வங்களே, நீங்கள் நல்ல நெறிமுறைகளைப் பின்பற்றி ஒழுக்கமாக வாழ்ந்தால் அது எனக்குப் புகழையும் பெருமைகளையும் தரும். அவையிலே நீங்கள் முதன்மை நிலையில் இருந்தால் நான் உங்களைப் பெற்ற தாயைப் போல மகிழ்வடைவேன். ஊரில் பெரும் தனவந்தர்களாக இருக்கும் பலரைப் பாருங்கள் .அவர்கள் எல்லோரும் மக்களால் மதிக்கப்படுவதில்லை.ஏழைகளாக இருந்தாலும்

அனைவரையும் மதித்து, ஒழுக்கமாக வாழ்வோரைக் கற்றவர்களும் பெரியவர்களும் மதிக்கிறார்கள்.கோவில் தேவைகளுக்குக் கூடச் சில தனவந்தர்களை மக்கள் மதித்துச் செல்வதில்லை.ஏனென்றால் அவர்கள் யாரையும் மதிப்பதில்லை. மதியாதவரை நாய் கூட மதிக்காது. ஊரில் உள்ளவர்களை நன்றாக உற்று நோக்குங்கள்.ஊரில் வாழ்வோரில் மதிப்போடும் மரியாதையோடும் வாழும் கதிரேசனைப் பாருங்கள். அவர் ஓர் எளியவனைக் கூடத் தன்னைப் போல மதிப்பார். நேர்மையாக நடந்து கொள்வார். பெரியவர்களின் சொற்படி நடப்பார். நல்ல நல்ல நூல்களைத் தேடித் தேடிக் கற்பார். அதனால் அவரை மக்கள் “நடமாடும் கடவுள்” என்று அழைக்கின்றனர். ஆகையால் மாணவர்களே, கதிரேசனைப் போல வாழுங்கள் கதிரேசன் எனது மாணவன். அதனால் எனக்குப் பெருமையும் புகழும் வந்து சேர்ந்துள்ளன”என்றார் செல்லப்பா.

**60. பெருமை புகழ், அறம் பேணாமை சீற்றம்**
**அருமை நூல் சார்பு இல்லார் சாரின் - இருமைக்கும்**
**பாவம் பழி, பகை சாக்காடே கெடு அச்சம்**
**சாபம்போல் சாரும் சலித்து.**

“பெருமை, புகழ், அறம், சினமின்மை, நூலறிவு, பெரும்தன்மை ஆகியவை இல்லாதவர்களுடன் ஒருவர் நட்புக் கொண்டால், அவருக்கு இப் பிறப்பிலும் இனி வரும் பிறப்புக்களிலும் தீவினை ,பழி, பகை, மரணம் ,

துன்பம், பயம் என்னும் தீமைகள் சாபம் போல வந்து சேர்ந்து வருத்தும்.

“ ஐயா, தருமம் செய்பவர்களுக்குப் பெருமை இருக்கக் கூடாது ,புகழை எதிர்பார்க்கக் கூடாது , அறநெறிப்படி வாழல் வேண்டும். அத்துடன் அறநூல்களைக் கற்ற அறிவு முழுமையாக இருத்தல் வேண்டும். சினங் கொள்ளாது பெரும் தன்மையுடன் நடந்து கொள்ளல் வேண்டும். அப்படி நடந்தால் அவன் வானுலக அரசனைப் போல வாழ்வான். அவை இல்லாவிட்டால் அவன் தனது குடும்பத்திற்குப் பொருள் சேர்க்க நினைப்பான். தனது குடும்பத்தை வாழ வைப்பான். புகழ் வர வேண்டும் என்பதற்காக எதையும் செய்வான். அறவழியில் நடக்க மாட்டான். அறநூல்களைப் படித்தாலும், அதன்படி நடக்க மாட்டான், பெரும் தன்மை உள்ளவனாக இருக்க மாட்டான். இதனால் அவன் பல சந்தர்ப்பங்களுக்கேற்ற வகையில் நடந்து கொள்வான். அதனால், அவனுக்குத் தீவினை. பழி, பகை ,மரணம், துன்பம், பயம் என்ற ஆறு தீமைகளும் சாபம் போல வந்து சேரும்.அதனால் வாழ்வில் இன்பம், நிம்மதி என்பன இல்லாமற் போய் விடும். திருநாவுக்கரசிற்கு அதுதான் நேர்ந்துள்ளது .இப்போ ஊரில் அவனைப் பற்றி மிக மிகக் கேவலமாக் கதைக்கின்றனர்.” என்றார் சிவசிதம்பரம்.

**61. ஆர்வமே செற்றம் கதமே அறையுங்கால்**
**ஓர்வமே செய்யும் உலோபமே –சீர்சாலா**
**மானமே மாய உயிர்க்குஊனம் என்னுமே**
**ஊனமே தீர்ந்தவர் ஒத்து.**

“அறத்தை மீறிப் பெண்கள் மீது வைக்கும் அன்பு, தேவையில்லாத பகை,கடுங்கோபம், பக்கம் சார்தல், ஈயாத தன்மை, தன்னைத் தானே புகழ்ந்து பெருமைப்படல் இவை யாவும் மனிதர்களை மயக்கி அளவில்லாத தீமைகளைத் தரும் என்று குற்றமில்லாத அறநூல்கள் கூறுகின்றன.”

“ஐயா, அறத்தை மீறிப் பெண்களின் மீது வைக்கும் அன்பு காலப் போக்கில் காமமாக மாறும். பெண்கள் மீது சுயநல-மில்லாத அன்பை அவளின் உறவினர்கள் அல்லாதவர்களால் வைக்க முடியாது. அதுபோலப் பெண்களாலும் ஆண்கள் மீது வைக்க முடியாது. அதனால் தான் அறநூல்கள் பெண்களைத் தனிமைப்படுத்தியுள்ளன. திருநாவுக்கரசு கொடையென்ற பெயரில் பெண்கள் மீது அன்பு வைப்பவன். அது காமமாக மாறி அவனுக்குப் பெருந் துன்பங்களைக் கொடுத்து வருகிறது. அதனால் தான் தேவையில்லாத பகை ஏற்பட்டு அவனைக் கடுங் கோபக்காரனாக்கியது.அவன் தானம் கொடுக்கும் போதும் தர்மத்தைக் கடைப்பிடிக்காது தனக்குத் தேவையானவர்களுக்குத் தான் கொடுப்பான். ஊர் மக்களிடம் பெற்ற பணத்தை பாடசாலைக்குக் கொடுப்பதானாலும் தனது பெயரில் ஒரு அறக்கட்டளை நிதியத்தைத் திறந்து அப் பெயரிலேயே கொடுப்பான். அது இப்போது எமக்குத் தெரியும். நூறு வருடங்களின் பின் அந் நிதி அவனது சொந்தப் பணம் என்ற நிலையே வரும். இது எதிர்காலத்தில் தன்னை விளம்பரப்படுத்துவதற்காகச் செய்த செயல் என்றே நான் கூறுவேன். ஒருவரது திறமையை,

அறிவை, ஆளுமையை மற்றவர்கள் கூறுதல் வேண்டும். ஆனால் அப்படிக் கூறுவோர் பலர் திருநாவுக்கரசிடம் போதியளவு பணத்தைப் பெற்றுக் கொண்டு தான் சொல்கிறார்கள். இது அறத்திற்கு முரணான செயல் என்பதை யாரும் உணர்கிறார்களில்லை. அதுதான் எனக்குப் பெரும் துன்பத்தைக் கொடுக்கிறது. இப்படியான தன்மையை விட ஈயாத தன்மை மேலானது" என்றார் சிவசிதம்பரம்.

**62. கூத்தும் விழவும் மணமும் கொலைக்களமும்**
**ஆர்த்த முனையுள்ளும் வேறுஇடத்தும் - ஒத்தும்**
**ஒழுக்கம் உடையவர் செல்லாமே செல்லின்**
**இழுக்கம் இழவும் தரும்.**

"கூத்தாடும் இடத்திற்கும், திருவிழா நடைபெறும் இடங்களுக்கும், அறமுறையின்றி ஆடம்பரமாகத் திருமணம் நடக்கும் இடத்திற்கும், கொலை நடக்கும் இடத்திற்கும், போர்க்களத்திற்கும் கல்வி கற்று அதன்படி வாழும் சான்றோர் செல்ல மாட்டார்கள்."

"நமசிவாயம் சுவாமிகள் அன்ற மடத்தில் சொற் பொழி-வாற்றினார் ,"அன்பானவர்களே,ஒருவன் கூத்தாடும் இடத்திற்குச் செல்லக் கூடாது.கூத்தாடும் இடங்களில் மது,மாமிசம், மாது என்பன இருக்கும். சூதாடு-வார்கள்.அதனால் இவற்றை விலக்க வேண்டும். கோவில்களில் பூசைகள் ,அர்ச்சனைகள், அபிஷேக்ஙகள் போன்றன செய்யலாம். ஆடம்பரமான திருவிழாக்கள்

செய்தல் ஆகாது. திருவிழாக்களில் ஆடல், பாடல் என்பன நடைபெறும். தேவ மகளிர்கள் ஆடிப் பாடுவதை ரசித்தல் கூடாது. அந்த ரசிப்புச் சில சமயங்களில் குடும்பத்தைப் பிரிய வேண்டிய நிலையை உண்டாக்கும். தனவந்தர்களும், அறமுறை தெரியாதவர்களும் திருமணத்தைப் புனிதமான ஒரு நிகழ்வாகக் கருதாது அதைத் தமது புகழையும், பெருமையையும் செல்வ வளத்தையும் காட்டும் ஆடம்பர விழாவாகக் கொண்டாடுகின்றனர். அத்தகைய திருமண விழாவிற்குச் செல்லக் கூடாது. கொலை நடைபெற்ற இடம், அரசர் போர் செய்யும் போர்க்களம் ,உயிர்களைக் கொல்லும் கொலைக்களம் ஆகியவற்றிற்கும் செல்லக் கூடாது.மீறிச் சென்றால், அவர்களுக்கு அவமானமும் பொருள் அழிவும், பழியும் உண்டாகும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

63. **ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம்**
**பேணொடும் எண்ணும் எழுத்துஇவை – மாணொடு**
**கேட்டு எழுதி ஓதி, வாழ்வார்க்கு ஈய்ந்தார் இம்மையான்**
**வேட்டு எழுத வாழ்வார் விரிந்து**

"மாணவர்களுக்கு எழுத்து ,இலக்கணம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பித்து அவர்களுக்கு உணவு, உடை,எழுத்தாணி ,புத்தகம் ஆகியவற்றை வழங்கி அவர்களை மேன்மைப்படுத்துபவர்கள் இப் பிறப்பில் புலவர் போற்றும் மன்னர்களாவர்.

“செல்லப்பா தினமும் மாலை வேளையில் அக் கிராமத்தில் உள்ள பிள்ளைகளுக்கு எழுத்து, இலக்கியம், கணிதம் ஆகிய பாடங்களையும் திருக்குறள் ,முதுமொழிக்காஞ்சி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகிய அறநூல்களையும் கற்பிப்பார். இரவானது முதியவர்களுக்கு அறநூல்களைக் கற்பிப்பார். பாடசாலையில் கல்வி கற்பதை விட மாணவர்கள் செல்லப்பாவிடம் கல்வி கற்பதையே விரும்புவர். தான் கற்பிக்க வேண்டிவற்றை இலகுபடுத்தி மிகவும் இனிமையாகக் கற்பிப்பார்.விளங்காதவற்றை எத்தனை தரம் கேட்டாலும் திரும்பத் திருப்ப விளக்குவார். அத்துடன் மாணவர்களுக்கு உணவு, உடை, எழுத்தாணி, புத்தகம் முதலியவற்றை இலவசமாகக் கொடுப்பார். அதனால் மாணவர்கள் மிகுந்த விருப்போடு கல்வி கற்பார்கள்.படித்து முடிந்ததும் இனிப்புக் கலந்த பசுப்பால் கொடுப்பார். படிக்க விரும்பாத மாணவர்களும் சுவையான உணவுக்காகவும் இனிப்பான பாலுக்காகவும் கற்க வருவார்கள். பின் தாம் உண்ணும் உணவையும் குடிக்கும் பாலையும் விடச் செல்லப்பா தம்மீது கொண்டுள்ள அன்பும், அவர் இனிமையாகக் கற்பிக்கும் பாடங்களும் இனிமையானவை என்று புரிந்து கொண்டனர்.”

“இரவு வேளையில் கல்வி பயிலும் முதியவரான தணிகாசலம் சொன்னார், “நாம் மாணவர்களாக இருந்த காலத்தில் உங்களைப் போன்றதொரு பெரியவர் இருந்திருந்தால் இளமையிலேயே நல்ல செய்திகளைக் கூறும் அறநூல்களைக் கற்று பயன் பெற்றிருப்போம். கடைசிக் காலத்திலாவது

நல்லவற்றைக் கற்கும் பெரும் பேறு உங்களால் கிடைத்தது. நீங்கள் புலவர்கள் போற்றும் அறிஞர். உங்களது வரலாறு மற்றவர்களுக்குப் பாடமாக அமையும்" என்றார்

.

**64. உயர்ந்தான் தலைவன் என்று ஒப்படைத்தான் நோக்கி**
**உயர்ந்தான் நூல்ஓதி ஒடுங்கி – உயர்ந்தான்**
**அரும்தவம் ஆற்றச் செயின்வீடாம் என்றார்**
**பெரும்தவம் செய்தார் பெரிது.**

"ஒருவன் தகுந்த வழிகளை ஆராய்தலும், அவ்வாராய்ச்சியின் படி எல்லா வகையாலும் மேலானவன் கடவுள் என்று துணிதலும் அக் கடவுளால் அருளப்பட்ட நூல்களை ஓதுதலும், அதனால் மனம் ஒடுங்குதலும் ,அதன் மூலம் தவத்தை மேற்க்கொள்ளுதலும் செய்வானாகில் அவன் முத்தியடைவானென்று மேலோர் கூறியுள்ளனர்."

"அன்று மாலை வேளை முதியோர்களுக்கு நடைபெற்ற வகுப்பில் செல்லப்பா கூறினார், "அன்பானவர்களே, நீங்கள் பல மாதங்களாக அறநூல்களைக் கற்று வருகிறீர்கள். இப்போ உங்களுக்கு அறமென்றால் என்ன? அறச் செயல்கள் மூலம் என்னென்ன பயன்கள் வரும் என்பதெல்லாம் தெரியும். கற்றவற்றை ஆராய்ந்து பாருங்கள்.அதிலிருந்து உலகத்திற்கு மேலான பரம்பொருள் இறைவன் என்ற எண்ணம் வரல் வேண்டும்.அக் கடவுளால் அருளப்பட்ட நூல்களையும் கடவுளின் அருளைப் பெற்றவர்கள் எழுதிய நூல்களையும் ஓதி அதன்படி

நடத்தல் வேண்டும் என்ற எண்ணம் மனதில் உருவாக வேண்டும். அதன் மூலம் மனம் பற்றுக்களற்று கடவுளின் பாதங்களில் ஒடுங்குதல் வேண்டும். அதனால் அக் கடவுளால் அருளப்பட்ட அருமை வாய்ந்த தவத்தை செய்தல் வேண்டும்.உலகிற்கு முதலானவர் கடவுள் என்றும் அவரின் பாதத்தைப் பற்றின்றித் தவம் செய்து அடையலாமென நினைத்துத் தவம் செய்பவர்கள் கட்டாயம் இறைவனின் பாதங்களை அடைவார்கள் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர்." அதனால் அறநூல்களில் கடவுளைப் பற்றியும் அவரது செயல்களைப் பற்றியும் அறிந்த நீங்கள் உலகிற்கு முன்னுதாரண புரிஷர்களாக விளங்குங்கள்" என்றார் செல்லப்பா.

**65. காலனார் ஈடுஅறுத்தல் காண்குறின் முற்றுணர்ந்த**
**பாலனார் நூல்அமர்ந்து பாராது –வாலிதா**
**ஊறுபாடு இல்லா உயர்தவம் தான்புரியின்**
**ஏறுமோ மேல்உலகம் ஓர்ந்து.**

"இறைவனைப் பற்றிக் கூறும் அரிய நூல்களைப் படிப்பதன் மூலமும், விரும்பிக் கற்பதோடு நின்று விடாது அந்நூல்கள் கூறுவது போல மனத் தூய்மையாக வாழவும் வேண்டும். அத்துடன் கெடுதல் இல்லாததும், சிறந்ததுமன தவத்தினைத் திருவருளைத் துணை கொண்டு செய்தலும் வேண்டும். இவற்றைச் செய்தால் இயமனது வலிமையைப் போக்கலாம்"

“அன்பானவர்களே, இறப்பில்லாதவர்கள் யமனுக்கு அஞ்ச மாட்டார்கள். அவர்களுக்குப் பிறப்பும் இல்லை. இத் தன்மையை வேண்டுமானால் யமனது வரவு இல்லாதிருத்தல் வேண்டும். அதற்கு முற்றும் உணர்ந்த இறைவனை அடை-யும் வழிகளைக் கூறும் நூல்களை விரும்பிக் கற்றல் வேண்டும்.அந்நூல்கள் கூறுவது போல வாழ வேண்டும்.பற்றற்றுத் தவம் செய்தல் வேண்டும். பற்றுக்கள் இறைவனை அடைய விட மாட்டாது. இவ்வாறு செய்து வாழ்ந்தால் யமபயம் இருக்க மாட்டாது. பிறப்பின்மையாகிய முத்தி கிடைத்து விடும். முத்தியடைந்தவர்களை யமன் அணுக மாட்டான். முத்தி நிலைக்குரிய யாவற்றையும் உங்களுக்கு அறநூல்கள் கூறியபடி கற்பித்துள்ளேன். அதனால் நீங்கள் இறைவனைப் பற்றியும் இறைவனடியில் வாழும் பேரின்ப வாழ்வு பற்றியும் அறிந்துள்ளீர்கள். இனி அதன்படி நடந்து உயர்வான புகழ் வாழ்வான வீடு பேற்றை அடையுங்கள்” என்றார் செல்லப்பா.

**66. பொய்தீர் புலவர் பொருள்புரிந்து ஆராய்ந்த**
**மைதீர் உயர்கதியின் மாண்புரைப்பின் -மைதீர்**
**சுடர்இன்று சொல்இன்று மாறுகின்ற சோர்வு இன்று**
**இடர்இன்று இனிதுயிலும் இன்று.**

“குற்றமற்ற இன்பங்களை வாரி வளங்கும் வீடுபேறு, முத்தி என்று அழைக்கப்படும் மோட்ச உலகில் இருளை நீக்கும் சூரியன் இல்லை. பேச்சொலிகள் இல்லை, மாறுபாடுகள் இல்லை, கேடில்லை, இனிமையான உறக்கமும் இல்லை”

“மோட்ச உலகம் இனிமையானது ,அங்கு சூரியன் இல்லை, பேச்சொலி இல்லை, மாறுபாடுகள் ஏற்படுவதில்லை, கேடுகள் இல்லை, துன்பங்கள் இல்லை, உறக்கமும் இல்லை, அதனால் போட்டி பொறாமை, சண்டை ,சச்சரவுகள் ,பெரிது சிறிதென்ற மனப்பான்மை எதுவும் இல்லை. இன்பமயமான அமைதியான உலகம் அது. அங்கே ஒருவரை ஒருவர் கண்டு கொள்ள மாட்டார்கள். இறைவனுடன் ஒன்றாகக் கலந்து அவரின் வடிவமாகி அவருள் அடங்கி இருப்பார்கள். அதனால் பற்றுக்கள் இருக்க மாட்டாது. விருப்பு வெறுப்புக்கள் இருக்க மாட்டாது. ஒவ்வொருவரும் இறைவனோடு தனித்திருந்து மகிழ்வர். குறுக்கீடுகள், தடைகள், தாமதங்கள் எவையும் இல்லாமையால் என்றும் நினைத்ததை நினைத்தபடி இறை அருளோடு அனுபவித்துக் கொணடிருப்பர் அத்தகையதொரு மேலான சிறப்புக்கள் பலவுமுள்ள இடத்தை அடைய முயற்சியுங்கள். பசியில்லை, தாகமில்லை, ஆசைகள் எதுவுமில்லாத அந்த உலகில் வாழும் பேற்றைப் பெறுவதற்காகத் தவம் செய்யுங்கள்”என்றார் செல்லப்பா

**67. கூர்அம்பு வெம்மணல் ஈர்மணி தூங்கலும்**
**ஈரும் புகைஇரு ளோடு இருள்நூல் - ஆராய்ந்து**
**அழிகதி இம்முறையான் ஆன்றார் அறைந்தார்**
**இழிகதி இம்முறையான் ஏழு.**

“கூரிய அம்புகளை விட்டுப் பயிற்சி பெறும் இடம், அதிக வெப்பமான மணல் உள்ள இடம், எப்போதும் கடுங் குளிராக இருக்கும் குறுங் கற்களை உடைய இடம்,

மயக்கத்தைத் தந்து தூங்கச் செய்யும் இடம், உயிரை அழிக்கும் கரும்புகை கொண்ட இடம், எப்பொழுதும் இருளான இடம் ஆகிய இடங்கள் எட்டு வகையான நரக லோகங்கள் என்று அறநூல்களை ஆராய்ந்து அறிந்த அறிஞர்கள் கூறியுள்ளனர்."

"முன்பு நான் சொர்க்கத்தைப் பற்றிச் சொன்னேன். இனி நரகத்தைப் பற்றிச் சொல்லப் போகிறேன். கூர்மையான அம்புகளை விடும் இடங்களும், கொடிய ஆயுதங்களை இயக்கப் பழகும் இடங்களும் வெயிலின் கொடுமையால் மணல் வெப்பமாக இருப்பதால் தங்கவோ, பிரயாணம் செய்யவோ முடியாத இடங்களும் ,எப்பொழுதும் கடுங்குளிராக இருக்கும் கற்கள் நிறைந்த பிரதேசமும் ,வாழும் போது மயக்கத்தைத் தந்து விழுந்து நடமாட முடியாத கால நிலையுள்ள பிரதேசங்களும் ,எந்நேரமும் கரும் புகையைக் கக்கிக் கொண்டிருக்கும் மணல் பிரதே-தசமும், சூரியன் உதிக்காமையால் எந்நேரமும் இருளாக இருக்கும் பிரதேசங்களும் நரக உலகமாகும். இவ்வாறான உலகத்திற்கே அறச்செயல்களைச் செய்யாதவர்களும் அறத்தை மீறிக் கொடுஞ் செயல்களைச் செய்தவர்களும் சென்றடைவார்கள். அதனால் அறப்படி வாழுங்கள் .தீய செயல்களைச் செய்யாதீர்கள்" என்றார் செல்லப்பா.

**68. சாதல் பொருள்கொடுத்தல் இன்சொல் புணர்வு உவத்தல்**
**நோதல் பிரிவில் பவறலே —ஓதலின்**
**அன்புடையார் உள்ளன ஆறு குணமாக**

**மென்புடையார் வைத்தார் விரித்து.**

உண்மையான அன்புள்ளவர்கள், பொருள் கொடுத்துதவுவார்கள் , இனிமையான சொற்களையே எப்போதும் பேசுவார்கள். எந்நேரமும் சேர்ந்திருக்க விரும்புவார்கள். ஒருவர் வருந்தினால் மற்றவரும் வருந்துவார்., ஒருவரை ஒருவர் பிரிய நேர்ந்தால் மிகவும் வருந்துவார்கள். தம் நண்பர் இறந்தால் தாமும் இறந்து விடுவார்கள் என்று உண்மையான நட்பின் தன்மையை ஆர-ாய்ந்தறிந்த அறிஞர்கள் கூறியுள்ளனர். அதனால் மென்மைத் தன்மையைத் தம்மிடம் கொண்டுள்ள புலவர்கள் தம் நூல்களில் அவ் அரிய நண்பர்களின் புனிதமான அன்பைப் பற்றித் தெளிவாக எழுதியுள்ளனர்.

“அன்பானவர்களே, நீங்கள் பல மாத காலமாக அறநூல்களை கற்கிறீர்கள். உங்களில் பலர் அயலூரவர் . இங்கு கற்க வந்த பின்பு தான் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டீர்கள். அப்படித் தெரிந்து கொண்ட பின் நல்ல நண்பர்களாகியுள்ளீர்கள். நட்பைப் போலத் தொடர்பு கொள்வதற்குப் பெருமையானது வேறெதுவும் இல்லை.அதுபோல ஒருவனுக்குப் பாதுகாப்பானதும் நட்பைப் போல வேறெதுவும் இல்லை. அறத்தை உணர்ந்த பின்பு நண்பர்கள் எப்போதும் உதவிகள் பலவும் செய்வார்கள். இனிமையாகப் பேசுவார்கள். உறுதுணையாக இருப்பார்கள். சேர்ந்திருக்க விரும்புவார்கள். ஒருவர் துன்பப்பட்டால் மற்றவரும் வருந்துவார், பிரியும் போது கலங்குவார்கள், உரிமையுடன் உறவாடித் தமது செயலென்று நினைத்து

நண்பரது செயல்களையும் உரிமையோடு செய்து முடிப்பார்கள் , நண்பர் இறந்தால் சிலர் தாமும் இறந்து விடுவர் என்று அறிந்து கொண்டோம். வேதவனத்தின் மகளின் திருமணம் குழம்பியதால் நாம் எல்லோரும் துன்பப்பட்டோம். அதனால் பாடத்தைப் படிக்க வெறுப்படைந்தோம். அவருக்காகக் கடவுளைப் பிரார்த்தித்தோம். இது தான் நட்பின் தன்மை, நட்பின் உறுதி, நட்பின் பெருமை, நட்பு என்று நட்பைப் பற்றி ஆர-ாய்ந்தறிந்த பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். முன்பு தமிழ் நாட்டை ஆண்ட அரசர்கள் சிலர் தமது நண்பர் இறந்ததைக் கேட்டு அதிர்ச்சியால் தாமும் இறந்துள்ளனர். இப்படியான அன்புடன் கலந்த நட்புரிமை உடையவர்களைப் பற்றிப் புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். அதனால் உங்கள் நட்பு இன்னும் இறுக்கமடைநது உரம் பெற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார் செல்லப்பா.

**69. எடுத்தல் முடக்கல் நிமிர்த்தல் நிலையே**
**படுத்தலோடு ஆடல் பகரின் - அடுத்துயிர்**
**ஆறு தொழில்என்று அறைந்தார் உயர்ந்தவர்**
**வேறு தொழிலாய் விரித்து.**

"உடம்மைப் தங்குமிடமாகக் கொண்ட உயிர் பல வகையான செயல்களைச் செய்த போதும் அறிஞர்கள் அவற்றின் தொழில்கள் ஆறு என வரையறுத்து கூறியுள்ளனர். அவையாவன கை,கால்களை உயர்த்துவது

, அவற்றை மடக்குவது, நிமிரச் செய்வது , நிலையாக நிற்கச் செய்வது, படுக்கச் செய்தல், ஆடல் என்பனவாம்"

"உயிர்கள் பலவகைப்பட்டன. அவை பல்வேறு விதமான உடல் அமைப்புக்களைப் பெற்றிருக்கின்றன. இருப்பினும் உடலெடுத்த அத்தனை உயிர்களும் ஆறு செயல்களையே செய்கின்றன என்று அறிஞர்கள் ஆராயந்து கூறியுள்ளனர். கை,கால்களை உயர்த்துவது ,மடக்குவது, நிமிர்ந்து நிற்றல், நிலையாக நிற்கச் செய்தல், படுத்தல், அசைதல் என்பனவே அவை.காலையில் இருந்து உங்களை அவதானித்துப் பாருங்கள். இவற்றைத் தானே செய்கிறீர்கள். இவற்றிற்கு மேலான செயல்கள் எவையும் இல்லை அது போல இவற்றில் ஒரு செயலைச் செய்யாமலும் விட முடியாது.எமது மூதாதையர்கள் அறிவு மிக்கவர்கள். அதனால் அவர்கள் உயிர்களையும், பூமியையும் ஏனைய கிரகங்களையும், அவ்வாறு அறிவைத் தரும் நூல்கள் பலவற்றைக் கற்று ,ஆராய்ந்து முடிவெடுத்த பின்பே மக்களின் நல்வாழ்வுக்காக அவற்றைப் பற்றிக் கூறியுள்ளனர். அதன்படி வாழும் மனிதன் தனக்கு வரும் துன்பங்களைப் போக்கி இன்பமாக வாழலாம்" என்றார் செல்லப்பா.

**70. ஐயமே பிச்சை அருந்தவர்க்கு ஊண், ஆடை**
**ஐயமே இன்றி அறிந்துஈந்தான் - வையமும்**
**வானும் வரிசையால் தான்ஆளும் நாளுமே**
**ஈனமே இன்றி இனிது.**

“தாமாகத் தேடிச் சென்று கொடுப்பதும், தேடி வந்து கேட்பவர்களுக்குக் கொடுப்பதும், தவம் செய்பவர்களுக்கத் தொடர்ந்து உடையும் தேவையறிந்து கொடுப்பதும் தமது கடமை என்று உணர்ந்து பற்றின்றிச் செய்பவர்களுக்கு மண் உலகையும் விண்ணுலகையும் ஆளும் உரிமை தானாகவே வந்து சேரும்.

“அயலூரில் இருந்து செல்லப்பாவின் மாலை நேர வகுப்பிற்கு வரும் வேலாயுதம் சில நாட்களாக வகுப்பிற்கு வரவில்லை.வேலாயுதம் நேர்மையானவர், ஒழுக்கமுள்ளவர், கடவுள் பக்தி நிறைந்தவர், அவரின் மகளின் திருமணம் குழம்பி விட்டதாகச் செல்லப்பா அறிந்தார். அதனால் அவர் அயலூரில் உள்ள வேலாயுதத்தின் வீட்டுக்குச் சென்றார். அவர் சென்ற போது வேலாயுதம் அங்கு இருக்கவில்லை. அவரது மனைவி அவரை இன்முகத்துடன் வரவேற்று அசனத்தில் அமர்த்தி விட்டு,”களைத்திருக்கிறீர்கள் உணவு உண்ணுங்கள்” என்றார்.

“நான் வரும் போது உண்டு விட்டுத் தான் வந்தேன்.”என்றார் பின் செல்லப்பா வந்ததாகக் கூறுங்கள் என்று கூறும் பேர்து ,அவள் குறுக்கிட்டுச் சொன்னாள், “அந்தப் பெரிய மகான் நீங்கள் தானா? அவர் உங்களைப் பற்றி நிறையக் கூறியுள்ளார்.

“இப்போ வேலாயுதம் எங்கே?இரண்டு மூன்று தினங்களாக அவர் வகுப்பிற்கு வரவில்லை. அதனால் தான் தேடி வந்தேன். உங்கள் மகளது திருமணம் குழம்பி விட்டதாக

அறிந்தேன்.ஏனென்று நான் தெரிந்து கொள்ளலாமா? என்று கேட்டார் செல்லப்பா.

“அவள் சிறிது நேரம் விக்கி விசும்பி அழுதாள், பின் , “ஐயா. மாப்பிளைக்கு ஐந்து இலட்சம் ரூபா சீதனமாகக் கொடுப்பதாகத் தீர்மானித்தோம். ஐம்பதினாயிரம் ரூபா குறைகிறது. முழுமையாகத் தந்தால் தான் திருமணம் செய்வோம் என மாப்பிளையின் தந்தை கூறினார். அதனால் தான் திருமணம் குழம்பியது. அவர் அக் காசைப் பெற ஓர் இடத்திற்குச் சென்றுள்ளார்” என்றாள்.

“இதற்காகவா திருமணம் குழம்பியது? என்ற செல்லப்பா தனது கைப்பையைத் திறந்து ஐம்பதினாயிரம் ரூபா எடுத்துக் கொடுத்தார் அப்போது வந்த வேலாயுதம் நடந்ததை அறிந்து மகிழ்ந்தார், “ஐயா, நீங்கள் தேடிச் சென்று உதவுபவர். தேடி வருபவர்களுக்கும் உதவுபவர். தவசிகள், ஏழைகள், அனாதைகள் என்பவர்களுக்கும் உதவுபவர். அதனால் தான் மண்ணுலக அரசனைப் போலவும் விண்ணுலகத் தலைவனைப் போலவும் வாழ்கிறீர்கள்” என்று கலங்கினார் வேலாயுதம்.

**71. நடர்ப்பார்க்குஊண் நல்ல பொறைதாங்கி னார்க்குஊண் கிடப்பார்க்குஊண் கேளிர்க்குஊண் கேடின்றி – உடல்சார்ந்த**

**வானகத்தார்க்கு ஊணே மறுதலையார்க்கு ஊண்அமைத்தான்**
**தானகத்தெ வாழ்வான் தக.**

“வழிப்போக்கர்களுக்கும், மிகுதியான சுமையைச் சுமந்து செல்பவர்களுக்கும் ,நோயாளர்களுக்கும், உறவினர்களுக்கும், தென்புலத்தார்க்கும், வேற்று நாட்டிலிருந்து அகதிகளாக வந்தவர்களுக்கும் உணவு கொடுத்துப் பாதுகாப்பவன் மேன்மையான சிறப்புக்களுடன் தான் வாழும் வீட்டில் வாழ்வான்”

“அயல் கிராமத்தில் பெருமழை பெய்தமையால் அங்கிருந்த குளம் உடைப்பெடுத்ததால் நீர் கிராமத்துள் நுழைந்து விட்டது. அதனால் அக் கிராம மக்கள் செல்லப்பாவின் வீட்டுக்கு வந்தனர். உடனே வந்தவர்களையெல்லாம் மடத்தில் தங்கவைத்து அவர்களுக்கு வேண்டிய தேவை-களை நிறைவேற்றுமாறு தனது வேலைக்காரர்களுக்கு உத்தரவிட்டார் செல்லப்பா. இருநூறுக்கு மேற்பட்ட மக்கள் வந்திருந்தனர். பெரும்பாலானவர்கள் உடுத்த உடையுடனே-யே வந்திருந்தனர். அவர்கள் வந்ததைக் கேள்விப்பட்ட வேலாயுதம் அவர்களுக்கு உதவி செய்வதற்காகச் செல்லப்பாவின் மடத்துக்கு வந்தார். அங்கே ஊரவர்கள் பலரும், மாலை நேர வகுப்பிற்கு வரும் அனைவரும் வந்திருந்தனர். அவர்கள் மடத்தில் சமையல் வேலைக்கு உதவி செய்தனர். அவர்களுக்குக் தேவையான உடை-களைச் செல்லப்பா பட்டணத்திற்குச் சென்று வாங்கி

வந்தார். அவற்றைப் பிரித்து வேலாயுதமும் ஊரவர்களில் சிலரும் மக்களுக்கு வழங்கினர்.

“செல்லப்பா பெரும் தருமவான். எனது மகளின் திருமணம் சீதனப் பிரச்சனையால் குழம்பியது. அதை அறிந்த அவர் வீடு தேடி வந்து உதவி செய்ததால் தான் திருமணம் நடைபெற்றது .கஷ்டப்படும் எல்லோருக்கும் உதவுபவர் செல்லப்பா. இந்த ஊர் வழியாக நடந்து செல்பவர்களுக்குக் குடி நீரும் உணவும் கொடுக்கிறார் அதை விடத் தலைச் சுமையாகப் பொருட்களைச் சுமந்து செல்வோருக்கும் ,ஏழைகளுக்கும் ,உறவினர்களுக்கும், உதவிகளும் உணவுவகைகளும் கொடுத்துதவுகிறார். அதைவிடப் புண்ணிய காரியங்கள் பலவும் செய்கிறார். அதில் முக்கியமானது அனாதைகளாக இருந்து இறந்தவர்களின் பிதிர்க்கடன்களைச் செய்து தனது பெற்றோர் உறவினர்க்கே பிதிர்க்கடன் செய்வோர் அருகி விடும். இந் நாளில் அனாதைப் பிதிர்களுக்கு கடன் செய்வது பாராட்டத் தக்கது. அது வானோர்களுக்கு உணவளிப்பதை ஒதுக்கும்” என்றார் வேலாயுதம். அவரது கண்கள் கலங்கின.

**72. உணராமை யால்குற்றம் ஒத்தான் வினையாம்**
**உணரான் வினைப்பிறப்புச் செய்யும்- உணராத**
**தொண்டுஇரும் துன்பம் தொடரும் பிறப்பினால்**
**மண்டிலமும் ஆகும் மதி.**

“அறியாமையால் குற்றங்கள் உண்டாகும், நூல்களைக் கற்பதால் நல் வினையும், நூல்களைக் கற்காமையால்

பிறப்புக்களும், அப் பிறப்புக்களால் ஒன்பது வகையான பெரும் துன்பங்கள் தொடர்ந்து வருத்தும். அதனால் பிறப்புக்கள் தொடர்ந்து வரும். இவற்றை விலக்க வேண்டுமாயின் அறிவு தரும் நூல்களைக் கற்று அறிவைப் பெருக்கிக் கொள்ளல் வேண்டும்.

“அன்று மாலை நேர வகுப்புக்கு வந்த முதிய மாணவர்களுக்குச் செல்லப்பா சொன்னார், “அன்பானவர்களே, ஒருவர் குற்றம் செய்கிறாரேயானால் அதற்குக் காரணம் அறியாமையாகும். நூல்களைக் கற்பதாலும் கடவுளை மெய்யன்புடன் தொழுவதாலும் அறியாமை நீங்கும், நூல்களைக் கற்பதன் மூலம் நல்வினை உண்டாகும். நூல்கள் எப்போதும் நல்வினையால் வரும் நன்மைகளைப் பற்றி விதந்து கூறுவதால் அந்நூல்களைக் கற்போர் தீயவழிகளில் நடக்க அஞ்சுவர். அதனால் நல்வினை வந்து சேரும். கற்காதவனுக்கு நல்வினையென்றால் என்னென்று தெரியாது அதனால் அவன் தீய செயல்களை அஞ்சாது செய்யச் செய்யத் தீவினை சேர்ந்து பல பிறப்புக்களை எடுக்க வேண்டிய நிலையை உண்டாகும். பிறப்புக்களால் ஓர் உயிருக்கு ஒன்பது வகையான துன்பங்கள் வருமென்று பெரியவர்கள் கூறுகின்றனர். அதனால் தான் அறிவு தரும் நூல்களைத் தேடித் தேடிக் கற்க வேண்டும் என்று சான்றோர் கூறுகின்றனர். இங்கே கல்வி கற்கும் சிவநேசன் என்ற பெரியவர் உங்களுக்குச் சொன்னதை நினைத்துப் பாருங்கள்.” என்று கூறிவிட்டு நிறுத்தினார் செல்லப்பா. அங்கு

மௌனம் நிலவியது.ஒவ்வொருவரினதும் செவிக்குள் சிவ-நேசன் கூறிய வார்த்தைகள் ஒலித்தது.

“ஐயா,எனது தந்தையார் என்னைக் கற்பிக்கவில்லை .அதனால் நான் தீயவர்களுடன் சேர்ந்து தீமையான செயல்களையே செய்து வந்தேன். ஊரில் என்னை யாரும் மதிப்பதில்லை. நான் தினமும் உங்கள் மடத்தில் வந்து உணவு உண்பேன்.உண்டபின் சிறிது நேரம் இளைப்பாறுவேன். அவ்வேளையில் நீங்கள் கற்பிக்கும் பாடங்களை அவதானமாகக் கேட்பேன்.அதனால் கற்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் உருவானது .அதை உங்களிடம் தெரிவித்த போது என்னை மகிழ்வுடன் உங்கள் மாணவர்களாகச் சேர்த்துக் கொண்டீர்கள். ஒரு வருட காலமாக உங்களிடம் கற்றேன். எனது மனம் நான் செய்யும் செயல்கள் நல்லவையா? எனது பிற்காலத்திற்கு இன்பத்தைத் தருமா என்று அவதிப்பட்டது.நாளாக நாளாக என்மீது எனக்கு வெறுப்பேற்பட்டது.அதனால் தீய செயல்களைச் செய்யாது விட்டேன். இப்பொழுது நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. முன்பே நான் கற்றிருந்தால் இந்த நிலை எனக்கு உருவாகியிராது”

“ஒருவன் விருத்தெரித்த பருவத்தில் இருந்து இறக்கும் வரை கற்க வேண்டும். நூல்களில் உள்ள விடயங்கள் அறிவைத் தரும் ,இன்பத்தைத் தரும், பிறப்புக்களை அறுக்கும் ,அறியாமையை நீக்கும்” என்றார் செல்லப்பா.

## 73. மனைவாழ்க்கை மாதவம் என்று இரண்டும் மாண்ட

**வினைவாழ்க்கை யாகவிழைய – மனைவாழ்க்கை**
**பற்றுதல் இன்றி விடுதல்முன் சொல்லும் : மேல்**
**பற்றுதல் பாத்தல் தவம்**

“இல் வாழ்க்கையும், தவ வாழ்க்கையும் மிகச் சிறந்த வாழ்க்கையென்று பெரியவர்கள் கூறியுள்ளனர். இரண்டும் நல்வினை தரும் வாழ்க்கைகள். இல் வாழ்க்கை என்பது பற்றுள்ளவனாக வாழ்தல்.தவ வாழ்க்கை என்பது பற்றில்லாமல் வாழும் வாழ்க்கை”

தொடர்ந்து செல்லப்பா சொன்னார், “இல் வாழ்க்கை , தவ வாழ்க்கை என்ற இரண்டு வாழ்க்கைகளும் நல்வினை தரும் நல்வினை தரும் வாழ்க்கைகளாகும். இல் வாழ்வான் இல்லத்தில் மனைவி ,பிள்ளைகள் .உற்றார், உறவினர்களோடு இருந்து அவர்கள் மீதும் ,தவசிகள் மீதும், எழைகள் மீதும், தென்புலத்தார் மீதும், பற்றுக் கொண்டு வாழ்கிறான். அப் பற்று இல் வாழ்வானுக்கு இல்லா விட்டால் தவசிகள் கூடத் தவம் செய்ய முடியாது. இல் வாழ்வான் தான் கற்ற நூலின் கருத்துப்படி தன் அறியாமையை நீக்கி உதவ வேண்டிய உயிர்கள் மீது பற்றுக் கொண்டு அவை துன்பப்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தால் அவற்றிற்கு மகிழ்வுடன் உதவுகிறான். அப்படி உதவுவதற்கு அவன் பெர்ருட்களின் மீது பற்றுக் கொள்ளல் வேண்டும். பொருட்களின் மீது ஆசை கொண்டு அதை அடைய அவாப்படுவது தான் தவறு. அவா, சினம், பொறாமை, இரக்கமின்மை ஆகிய குணங்களைக் கொடுத்து

பொருள் தேடுபவனை வஞ்சிக்கும் .அதனால் மனக் குழப்பம், வீண் சண்டை, பகை என்பன உருவாகும். அவா இல்லாமல் பிறரின் பொருளை அபகரிக்காமல், ஆசை கொள்ளாமல் அறப்படிப் பொருள் சேர்ப்பவன் பொருளின் மீது வைக்கும் பற்று தவசி ஒருவன் கடவுள் மீது வைக்கும் பற்றைப் போன்றது. தவசிக்கும் பொருள் மீது பற்றிராது.ஆனால் கடவுளின் மீது பற்றிருக்கும். தான் அடையப் போகும் முத்தியின் மீது பற்றிருக்கும் .தவ வாழ்வும் இல் வாழ்வும் மிகச் சிறந்த வாழ்வு தான். இரண்டும் முத்தியை இலக்காகக் கொண்டவை. எமது ஊரில் வாழும் சிறுத்தொண்டனைப் பாருங்கள். அவரின் வாழ்வு இல்லறத் தவ வாழ்வு. அவரின் பற்றுத் தான் இந்த ஊரை வாழ வைக்கிறது.அதனால் இல் வாழ்வு வளரும். நீங்கள் அவ் இல் வாழ்வைத் தவ வாழ்வாக வாழுங்கள்" என்றார்.

**74. இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடில் வனப்பும்**
**நடைவனப்பும் நாணின் வனப்பும் -புடைசால்**
**கழுத்தின் வனப்பும் வனப்பு அல்ல எண்ணோடு**
**எழுத்தின் வனப்பே வனப்பு.**

"இடை அழகும், தோள் அழகும்,செல்வச் சேமிப்பின் அழகும், நடையழகும், நாணத்தின் அழகும் கழுத்தழகும் அழகல்ல.இலக்கண இலக்கியங்களையும் கணிதத்தையும் கற்றுத் தேர்வதே உண்மையான அழகாகும்.

“தொடர்ந்து செல்லப்பா சொன்னார், “நீங்கள் எல்லோரும் பெற்றோர்கள் .நீங்கள் பெரிதாகக் கற்காமையால் முதிய வயத-ில் கற்கிறீர்கள். கற்க வேண்டும் என்ற எண்ணம்.இவ்வூரில் வாழும் சிலருக்குத் தான் வந்துள்ளது. அதனால் வருந்தாது உங்கள் பிள்ளைகளைக் கற்பியுங்கள். கல்விக்கு ஆண் பெண் என்ற பேதமில்லை, மோகினியைப் போன்ற அழகும், குபேரனைப் போன்ற செல்வ வளமுமுள்ள பெண்ணாக இருந்தாலும் கற்காவிட்டால் அவளின் அழகும் செல்வமும் பயன்படாது. அறிவுள்ள பெற்றோரால் தான் அறிவுள்ள பிள்ளைகளைப் பெற முடியும். அறிவுடைய பிள்ளைகளால் நாடு பயன் பெறும் போது அந்தப் பெருமை பெற்றோரைத் தான் வந்தடையும். இத்தகைய அறிவுள்ள சமூகப் பற்றுள்ள ஒரு மகவைப் பெற அப் பெற்றோர் பெரும் தவம் செய்திருப்பர் என்று நாட்டிலுள்ளோர் வியப்படைவர். அப்படியான பிள்ளைகளைப் பெறப் பெற்றோர் கல்வியறிவுடையவராக இருத்தல் வேண்டும். பெண்ணைப் பெற்றவர்கள் அவளைக் கற்பித்தல் வேண்டும். பெண்ணெடுப்போர் கற்ற பெண்களையே தேடி எடுத்தல் வேண்டும். அப்படி வாழ்ந்தால் தான் அறிவுள்ள ஒரு சமூகம் உருவாகும்.

“எமது ஊரில் ஆண்களே கற்பது குறைவு.கற்பவர்களும் எழுத வாசிக்க கற்றால் போதுமென்று நினைக்கிறார்கள். பெண்களைக் கற்பிப்பது குறைவு. ஆனால் சிறுத்தொண்டன் தனது மகளான பூரணியை வெளிநாட்டிற்கு அனுப்பிக் கற்பித்தார். அவள் மருத்துவத் துறையில் நிபுணத்துவம்

பெற்றாள். அவள் தொட்டாலே நோய்கள் குணமாகி விடும் என்று மக்கள் நம்புகின்றனர். அவள் எத்தனை பேருக்குச் சத்திரசிகிச்சை செய்து கண் பார்வை கொடுத்துள்ளாள். சிறுத்தொண்டனைப் போல உங்கள் பெண் பிள்ளைகளையும் நன்றாகக் கற்பியுங்கள்" என்றார் செல்லப்பா.

**75. அறுவர்தம் நூலும் அறிந்துஉணர்வு பற்றி**
**மறுவரவு மாறான நீக்கி – மறுவரவின்**
**மாசா ரியனா மறுதலைச்சொல் மாற்றுதலே**
**ஆசா ரியனது அமைவு.**

"ஆறு வகையான சமயங்களின் அறநெறி நூல்கள் அனைத்தையும் கற்று ,அனைத்திற்கும் பொதுவான தூய அறிவினைப் பெற்று ,நடுவு நிலை நின்று, சமயங்களுக்கிடையே தோன்றிய பகைமை உணர்வையும் தவறான சிந்தனைகளையும் நீக்கி, தூய ஒழுக்கம் உடையவராகித் தீயனவற்றை நினைப்பதையும் விலக்கி வாழ்பவரே உண்மையான குரு. அவரே சமயத்திற்குத் தலைமை தாங்க முடியும்".

"சைவம், வைணவம், சாந்தம், சௌரம், காணாபத்தியம், கௌமாரம் என்ற ஆறு சமயங்களின் தத்துவங்களைக் கூறும் அனைத்து நூல்களையும் கசடறக் கற்று ஒரு பொதுவான நிலைக்கு வந்து, சமயங்களுக்கிடையே உள்ள போட்டிகளையும் ,தவறான செயல்களையும் விலக்கி உண்மையான தத்துவத்தை உணரல் வேண்டும். அப்படி உணர்ந்தவர்கள் தான் சமயத் தலைவர்களாக இருத்தல் வேண்டும். சமயங்கள் எல்லாம் கடவுளைப் பற்றிச்

சொல்கின்றன. முத்தியைப் பற்றிச் சொல்கின்றன.தான தருமம் செய்யும்படி சொல்கின்றன. தீமையான செயல்களைச் செய்யக் கூடாதென்று சொல்கின்றன. உயிர்களை வதைக்கக் கூடாது என்று சொல்கின்றன. இதற்கு மேலாகவோ அல்லது இவற்றைச் செய்யென்றோ சொல்லவில்லை. மனிதன் பிறப்புக்களால் துன்பப்படுகிறான். அந்தத் துன்பத்தை நீக்கி இன்பமடைய வேண்டும். அவ்வாறு துன்பங்களை நீக்கி இன்பமடைய வேண்டிய நற் செயல்களைச் செய்து வாழ வேண்டும். முத்தியடைய வேண்டுமென்று கோவில்களுக்குச் செல்வோர் அங்கு சென்று கோவில்களுக்குச் செல்வோர் அங்கு சென்று செய்யக் கூடாதச் செயல்களைச் செய்து தீவினைகளைப் பெருக்கிக் கொள்கிறார்கள். இந்த நிலை வேதனைக்குரியது. இந் நிலை மாற வேண்டும். கோவில்களில் ஆரவாரமின்றி ஆணவமின்றி ,செருக்கின்றி எல்லோரும் சமம் என்று மதித்து வழிபட வேண்டும். அது தான் இறைவனது விருப்பம். அதை நீங்கள் செய்து தீவினையை அகற்றுங்கள்" என்றார் செல்லப்பா.

**76. ஒல்லுவ நல்ல உருவவேல் கண்ணினால்**
**வல்லுவ நாடி வகையினால் - சொல்லின்**
**கொடையினார் போகம் சுவர்க்கம் தவத்தால்**
**அடையார்த் தவத்தினால் வீடு.**

"கற்பதற்கேற்ற நூல்களை நன்கு ஆராய்ந்து கற்று, அதில் சொல்லியவாறு செய்யப்படும் அறச் செயல்கள் மூலம் வாழும் காலத்தில் இன்பங்களைப் பெறலாம். முதலில் இல்லறத்திலிருந்து நற்பணிகள் செய்து பின் முறைப்படி

துறவறம் பூண்டு வீட்டின்பத்தைப் பெறுவதே அறநூல்கள் கூறும் செய்தி”

“மனிதன் அவ்வப் பருவ காலங்களில் அவ்வவ் பருவத்திற்கென அறநூல்கள் கூறிய செயல்களை வாழுதல் வேண்டும். சிறுத்தொண்டன் மிகவும் வறியவர். ஆனால் இளமைக்காலத்தில் கற்க வேண்டிய அனைத்தையும் தெளிவாகக் கற்றார். அதன் பின் திருமணம் செய்து நற்பிள்ளைகளைப் பெற்றார். அப் பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக உழைத்து அவர்களின் கடமைகளைச் செய்தார். இப்போ அவர் துறவு வாழ்க்கையை மேற்க்கொள்கிறார். எம்மில் பலரது நோக்கம் துறவியாவதற்கு முதலில் வீட்டை விட்டு வெளியேற வேண்டும். காவி உடை அணிய வேண்டும்.மொட்டை அடிக்க வேண்டும். அல்லது சடை வளர்த்தல் என்பதே, வெளித் தோற்றத்தால் துறவு கொள்வதையே இது காட்டுகிறது. உண்மையான துறவு மனம் வேறுபடாமையே , பற்றற்று வாழ்தல், துன்பப்படும் உயிர்களுக்கு உதவுதல், இரக்கப்படுதல் போன்றன தான் உண்மையான துறவு. செயல்களிலீடுபடாது துறவு பூண்பதை விடச் செயல்களிலீடுபட்டுக் கொண்டே துறவை மேற்கொள்வது சிறப்பானது. இறைவனை ஒரு முறை நினைத்து வணங்கி விட்டுத் தூய்மையான செயல்களிலீடுபவனின் செயல்களில் இறைவன் வந்தமர்ந்து விடுவார். எழைகளுக்கு ,அனாதைகளுக்கு ,நோயாளருக்கு உதவுவது தான் உயர்ந்த துறவு. அப்படியானவர்கள் தான் உடனே இறைவனை அடைவர்” என்றார் செல்லப்பா.

**77. நாற்கதியும் துன்ப நவைதீர்த்தல் வேண்டுவான்
பாற்கதியின் பாற்பட ஆராய்ந்து – நூற்கதியின்
எல்லை உணர்த்தார் தவமுயலின் மூன்றுஐந்துஏழ்
வல்லைவீடு ஆகும் வகு.**

“தேவர், நரகர், மக்கள், விலங்குகள் எனப் பிறப்புக்கள் நான்கு இந் நான்கு பிறப்புக்களும் துன்பம் மிகுந்த பிறப்புக்கள். துன்பங்களில் இருந்து விலக விரும்புவோர் இந் நான்கு பிறப்புக்களைப் பற்றியும் ஆராய்ந்து அறிதல் வேண்டும். பின் வீடு பேற்றை அடையக் கூடிய வழிவகைகளை அறநூல்களைக் கற்றறிந்து அதன்படி துறவுக்குரிய அரிய செயல்களை முயன்று செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் ஏழு பிறவிகளில் மூன்றாம் பிறவியிலோ, ஐந்தாம் பிறவியிலோ, ஏழாம் பிறவியிலோ வீடு பேற்றை அடையலாம்.

“தேவர், நரகர், மக்கள், விலங்குகள் எனப் பிறவிகள் நான்கு வகைப்படும். துறவு மேற்க்கொள்ள விரும்புபவர்கள் இந் நான்கு பிறவிகளைப் பற்றியும் தெரிந்து கொளளல் வேண்டும். அந் நான்கு பிறவிகளைப் பற்றியும் அறநூல்கள் கூறுபவற்றை நான் உங்களுக்குக் கூறியுள்ளேன். அத்துடன் மேலான துறவு வாழ்வு பற்றியும் அறநூல்கள் கூறியவற்றை விபரமாகக் கூறியுள்ளேன். இவற்றின் பொருள் உங்களுக்குத் தெரியும். ஆகவே ஆராய்ந்து முடிவெடுங்கள்” என்றார் செல்லப்பா.

**78. தாய்இழந்த பிள்ளை தலைஇழந்த பெண்டாட்டி**

**வாய்இழந்த வாழ்வினார் வாணிகம் - போய்இழந்தார்**
**கைத்தூண் பொருள்இழந்தார் கண்இலவர்க்கு ஈந்தார்**
**வைத்து வழங்கிவாழ் வார்**

“தாயை இழந்த பிள்ளைக்கும், கணவனை இழந்த பெண்ணிற்கும், ஊமைகளுக்கும், குருடர்களுக்கும் , முதலை இழந்த வணிகனுக்கும் , அன்றாடம் உண்ண வழியில்லாதவர்களுக்கும் உணவும் தேவையான உதவிகளும் செய்பவர்கள் மறு பிறப்பிற்கு வேண்டி பொருட்களைச் சேமித்தவராவார்.

“மனிதர்கள் தமது பிள்ளைகளுக்காகச் சேமிக்கிறார்கள். தமக்காகச் சேமிக்கிறார்கள், தமது பிற்காலத்திற்காகச் சேமிக்கிறார்கள். ஆனால் மறுமைக்காகச் சேமிப்பதை அவர்கள் அறிந்து வைத்திருப்பதில்லை. சேமிப்பு வாழுங் காலத்தைச் சிறப்பிக்கும். ஈகைத் தன்மை மறுமை வாழ்வை இனிமையுறச் செய்யும். தாயை இழந்த பிள்ளை, கணவனை இழந்த மனைவி, ஊமைகள், குருடர்கள், பொருளை இழந்தவர்கள் எதற்கும் பயன்பட மாட்டார்கள். அவர்களால் உழைக்க முடியாது .தாயை இழந்தால் அறுசுவை உணவை உண்ணமுடியாது. கைம்பெண்ணுக்கு எந்த உத்தரவாதம் கிடையாது.அதனால் மறுமைக்காகச் சேமிக்க விரும்புவோர் இவர்களுக்கு கொடுத்துதவ வேண்டும். ஏழையின் வயிற்றில் சேரும் உணவு கடவுளின் வயிற்றை அடைவதாக அறநூல்கள் கூறுகின்றன.அதுபோல நான் சொல்பவர்களுக்குச் செய்யும் உதவிகள் மறுமையில் நம்மை வந்தடைந்து இன்பத்துக்குள்ளாக்கும். அதைப்

பற்றித் தெரிந்தவர்கள் தான் மறுமைக்காகச் சேமிக்கிறார்கள். சாதாரணமாக வாழ்வதற்காகச் சேமிக்கப்படும் பணம் பெரும் இன்பங்களைத் தருவது போல மறுமையின் சேமிப்பும் மறுமையில் இன்பத்தைத் தரும்” என்றார் செல்லப்பா.

**79. சாக்காடு கேடு பகை, துன்பம் இன்பமே**
**நாக்காடு நாட்டறை போக்கும்என – நாக்காட்ட**
**நட்டார்க்கு இயையின் தமக்குஇயைந்த கூறு, உடம்**
**பட்டார்வாய்ப் பட்டது பண்பு.**

“மரணமும், கெடுதியும், பகையும், துன்பமும், மகிழ்ச்சியும் ஆர-ாயும் பேசும் நாவினாலே உண்டாகும் தீமைகளும் நண்பர்களுக்கு உண்டானால் அதை நிவர்த்தி செய்வதே நல்ல பண்பாகும்.

“நண்பன் ஒருவன் துன்பப்பட்டால் அதைத் தனது துன்பமாகக் கருதி நீக்குவது தான் உயர்ந்த நண்பனின் பண்பு. மரணம்,கெடுதி, பகை, மகிழ்ச்சி என்பன மாறி மாறி மனித வாழ்வில் வந்து போகும். மகிழும் போது கூட இருந்து மகிழ்வோர் துன்பங்கள் வரும்போது விலகிச் சென்று விடுகின்றனர். பல்வேறு வகையான துன்பங்களுக்குக் காரணம் நாக்கு.நாவடக்கம் உள்ளவர்கள் தேவரிலும் பார்க்க சிறப்புடையவர்கள்.நாவால் வரும் தீமைகளுக்கு உதவுவது நண்பனின் கடமை. அது தான் சிறந்த பண்பு. சிறுத்தொண்டன் எனது உயிர் நண்பர். அன்றன்று உணவுக்கே கஷ்ரப்பட்ட நான்

இன்று இன்பமாக வாழ்ந்து பலருக்கும் உதவி செய்கிறேனென்றால் அதற்குக் காரணம் சிறுத்தொண்டனின் நட்புத் தான். எனது தொழிலை ஆரம்பித்து வைத்தவர் அவர், எனது பெற்றோரின் மரணச் சடங்கை செய்து வைத்தவர் அவர், எனக்குத் திருமணம் செய்து வைத்தவர் அவர், எனது வாழ்வே அவர் தான், நான் தீமை செய்தாலும், கொடுமை செய்தாலும் அதை நினைத்துப் பாராது உதவிகள் பலவும் செய்தவர் அவர். அவர் இல்லாவிட்டால் நான் உயிர் வாழ்ந்திருக்கவே மாட்டேன்." அவ்வாறு அவர் கூறும்போது அவர் உணர்ச்சிவசப்பட்டுப் பேசாதிருந்தார். அவரது கண்களால் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தின் பின் கண்ணீரைத் துடைத்து விட்டுச் சொன்னார், "தவறுகள் இயல்பாகச் செய்தாலும், வேணுமென்றே செய்தாலும், அதைச் சிறுத்தொண்டன் பொருட்படுத்தவே மாட்டார். அத்துடன் எனது செயல்கள் பலவற்றை அவர் என்னைக் கேளாது செய்து விடுவார். என்னுடைய பரம எதிரி சற்குணம். ஏனோ அவனை எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவனை வெறுத்தேன், ஆனால் சிறுத்தொண்டன் என்னைக் கேளாது அவனது மகனுக்கு எனது மகளை திருமணம் செய்து கொடுக்க ஒப்புக் கொண்டு விட்டார்.எனக்குக் கடுங்கோபம் ,அவரையும் எதிரியாகக் கருதினேன். ஆனால் எனது மகள் சிறுத்தொண்டனின் பக்கமே நின்றாள். எனக்கு உலகே வெறுத்து விட்டது. அதை அறிந்த சிறுத்தொண்டன் சொன்னார், "நண்பா, ஆராயாமல் பேசாதே, உனது மகள் சற்குணத்தின் மகனைக் காதலிக்கிறாள். விஷயம் தலைக்கு மேல் போய்விட்டது. அந்தத் திருமணத்தைச்

செய்யாவிட்டால் நீ அவமானப்படுவாய். உன்னை இவ்விடயத்தில் சற்குணம் பழிவாங்க நினைக்கிறான். அதன் காரணமாகவும், நட்பின் உரிமை காரணமாகவும் தான் அப்படி நடந்தேன்" என்றார். .அதன்பின் நான் எதுவும் பேசச் சக்தியற்றவனாகி விட்டேன்" என்றார் செல்லப்பா.

**80. புலைஆளர் புண்பட்டார் கண்கெட்டார் போக்கில்**
**நிலைஆளர் நீர்மைஇழந்தார் - தலை ஆளர்க்கு**
**ஊண்கொடுத்து ஊற்றாய் உதவினார் மன்னராய்க்**
**காண்கொடுத்து வாழ்வார் கலந்து.**

"தாழ்ந்தோர் என்று இகழப்படுபவர்களுக்கும், உடல் முழுவதும் புண் உள்ளவர்களுக்கும் ,குருடர்களுக்கும், புனிதத் தலங்களிற்குச் செல்பவர்களுக்கும், தமது மேலான செல்வத்தையும் கௌரவத்தையும் ,இழந்தவர்களுக்கும், நற்குணமுடையவர்களுக்கும் உணவுகள் அளித்து உதவிகள் செய்வோர் அனைவருடனும் இன்புற்று வாழ்வதோடு, உறவினர் ,நண்பர்களுடன் கலந்து உறவாடி மன்னர் போல உயர்ந்த வாழ்வை அடைவர்"

" உணவு கொடுத்தல், உதவிகள் செய்தல் என்பன மறுமை வாழ்வின் சேமிப்புக்கள் என்று உங்களுக்குத் தெரியும். தாழ்ந்தோர் என எல்லோராலும் ஒதுக்கப்பட்டு இகழப்படுபவர்களுக்கு உதவி செய்வார் யாருமில்லை. அப்படியானவர்கள் மீது அன்பு செலுத்தி அவர்களின் தேவையை உணர்ந்து உதவி செய்வோர் கடவுளைப்

போன்றவராவார். கடவுளுக்குத் தான் விருப்பு வெறுப்புக்கள் இல்லை. கடவுளைப் போன்ற விருப்பு வெறுப்புக்கள் இல்லாத உயர்ந்த பண்புடையவர்களால் தான் இழிந்தவர்களை ஏற்றுக் கொள்ள முடியும். மற்றவர்கள் தராதரம், கௌரவம் பார்ப்பார்கள். தனது தகுதிக்குக் குறைந்தவர்களுடன் பேசவே பலர் வெட்கப்படுவர். அருவருப்படைவர். அப்படியானவர்களுக்கு உதவினால் தனது இன இன சன பந்துக்கள் நண்பர்கள் தன்னை வெறுத்து ஒதுக்கி விடுவார்கள் என்ற நினைவால் உதவி செய்ய மனமிருந்தும் செய்யாது விட்டுவிடுவார். சிறுத்தொண்டன் அவர்கள் கௌரவம் பார்ப்பதில்லை. அவர் ஒரு நாள் சொன்னார் ,"அரசனும் ஆண்டியும் மரணத்தில் ஒன்று தான், மரணம் அடைந்தவன் பிணம், அரசன் அல்ல, எரிந்த பின் எஞ்சுவது ஒரே அளவான சாம்பல். இந்நிலையில் கௌரவம் எங்கே இருக்கிறது?" என்றார். அதை நான் இப்பொழுது உங்களுக்குக் கூறுகின்றேன். அதன்படி நடவுங்கள்,இழிந்தவர்களும், உடல் முழுவதும் புண்பட்டவர்களும், ஒரே மாதிரித் தான் மதிக்கப்படுகின்றனர். அத்துடன் குருடர்களையும், ஊமைகளையும் கண்டு இரங்குவாரில்லை. அதுபோல உயர்ந்த நிலையில் இருந்து தாழ்ந்தவனையும் யாரும் மதிப்பதில்லை. அறவாழ்வு வாழ விரும்புவோரும், மறுமைக்கு இன்பம் சேமிக்க விரும்புவோரும் தான் இவர்களை நேசிப்பர். நீங்களும் நேசியுங்கள். ,அரச போக வாழ்வு மறுமையில் கிட்டும்" என்றார் செல்லப்பா.